DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1428 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 18, 2023

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance
Citizenship
Permanent resident card renewal
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneservices.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

TEAM SMART REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

# குறுந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் இன்று 18ம் திகதி பானை பொங்குமா?

*— ந.லோகதயாளன்.*




முல்லைத்தீவு மாவட்டத்தின் குறுந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் இன்று பொங்கள் உற்சவம் இடம்பெறவுள்ள நிலையில் பதற்றமும் சூழ்ந்துள்ளதனால் பொங்கல் பொங்குமா என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது.

குறுந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் ஏற்கனவே பொங்கள் உற்சவம் இடம்பெற ஏற்பாடுகள் மேற்கொண்ட நிலையில் பொலிசாரும் தொல்லியல்த் திணைக்களமும் தடுத்து நிறுத்தியமையினால் பதற்றம் சூழ்ந்து பொங்கல் தடைப்பட்டு நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு பொங்குவதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளதனால் இன்று பொங்கல் ஏற்பாடு இடம்பெறுகின்றது.

(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)

# தமிழ்நாடு "கவிதை உறவு" "இலக்கியச் சஞ்சிகை வழங்கிய "இதழியல் செம்மல்" என்னும் விருதப்பெற்ற கனடா உதயன் ஆசிரியர் லோகேந்திரலிங்கம்



தமிழ்நாட்டின் சென்னை மாநகரிலிருந்து வெளிவரும் “கவிதை உறவு“ “இலக்கியச் சஞ்சிகையின் 51ம் ஆண்டு விழா விருதுகளில் கனடா உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அவர்களுக்கு “இதழியல் செம்மல்“ என்னும் விருது 18-05- 2023 அன்று வழங்கப்பெற்றது. ஆனால் அதைப் பெற்றுக் கொள்ளும் முகமாக அவரால் சென்னைக்குச் செல்ல இயலவில்லை.

எனவே மேற்படி விருதினை மாண்புமிகு நீதியரசரும் சிறந்த பேச்சாளருமான திரு இரா. சுரேஸ் குமார் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற ஒரு சிறிய வைபவத்தில் அவரது உத்தியோகபூர்வமான வாசல்ஸ்தலத்தில் வைத்து வழங்கினார்.

படங்களில் “கவிதை உறவு“ “இலக்கியச் சஞ்சிகையின் ஆசிரியர் “கலைமாமணி“ ஏர்வாடி இராதாகிருஸ்ணன் அவர்கள் உட்பட கலை இலக்கிய நண்பர்கள் மத்தியில் நீதியரசர் திரு இரா. சுரேஸ் குமார் அவர்கள் விருதினை வழங்குவதைக் காணலாம்.

(உள்ளே விபரமான செய்தி 20ம் பக்கத்தில்)

Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666 srinada21@gmail.com
RE/MAX ACE

BIG Billyard Insurance Group
Great Coverage. BIG Savings.
Home · Auto · Life · Business
Iggy Thuray
Insurance Broker
416.814.7470
iggy@thebig.ca thebig.ca/iggy

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004
CHAI

# ஸ்ரீ அருள்மிகு கற்பகவிநாயகர் தேவஸ்தானம்- பிரம்ரன்








## ஸ்ரீ நாராயண பெருமாள் அலங்கார உற்சவம் 2023

ஸ்ரீநாராயணப் பெருமாளின் அலங்கார உற்சவம் இலங்கை பொன்னாலை ஸ்ரீவரதராஜ பெருமாள் பட்சமாக ஆவணி ரோகினி நன்னாளை தேர்த்திருவிழாவாக வைத்து எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 21ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி செட்டம்பர் மாதம் 7ம் திகதி வரை நடைபெறும். 01ம் நாள் (21 -8 -2023 ) திங்கட்கிழமை அலங்கார உற்சவம் ஆரம்பம் **05ம் நாள் (25-08- 2021 ) வெள்ளிக்கிழமை வரலக்ஷிமி பூஜை** 06ம் நாள் (8-08-2021 ) சனிக்கிழமை சப்பரத் திருவிழா 10ம் நாள் (30 08 2021 ) புதன்கிழமை மஞ்சத் திருவிழா 15ம் நாள் (4 09 2021) திங்கட்க்கிழமை அனந்தசயனக் காட்சி **17ம் நாள் (6 09 2021) புதன்கிழமை தேர்த்திருவிழா** 18ம் நாள் (7 09 2021 ) வியாழக்கிழமை தீர்தத்திருவிழாவோடு ஸ்ரீ நாராயணப்பெருமாள் அலங்கார உற்சவம் பூர்த்தியாகும்.

இவ்வலங்கார திருவிழாக் காலங்களில்
சகல அடியார்களும் ஆலயத்திற்கு வருகை தந்து
காத்தருளும் கண்ணபிரானின்
நல்லருள் பெற்றுய்வீர்களாக.





## விநாயகர் சதுர்த்தி (ஆவணி சதுர்த்தி)

### 18-09-2021 (புரட்டாதி மாதம் 2ஆம் திகதி) திங்கட்க்கிழமை

*காலை 09 மணிக்கு 1008 சங்காபிஷேகமும் பால்க்குட அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து விஷேட பூஜையும் தொடர்ந்து மாலை மூலமூர்த்திக்கு விஷேட அலங்கார பூஜையைத் தொடர்ந்து பஞ்சமுக விநாயகப் பெருமானுக்கு விஷேட பஞ்சமுக அர்ச்சனையும் சுவாமி வீதியுலா வரும் திருக்காட்சியும் சிறப்பாக நடைபெறும்.*

*காலையில் நடைபெறுகின்ற சங்காபிஷேகத்தின் போது பால்குடம் எடுக்க இருக்கின்ற அடியார்கள் முன்கூட்டியே ஆலயத்தில் பதிவினை மேற்கொள்ளவும்*

UNIT 01 200 ADVANCE BLVD
BRAMPTON ON L6T 4V4
905 458 9701 / 416 471 0255

*என்றும் இறை பணியில் நிற்கும்*
*கனகசிவத்தொண்டர்*
*திரு இரா விஜயநாதன்*

உதயன் கதிரோட்டம்

# சிங்களத்தைப் போலவே சீனாவும் எமக்கு ஆபத்துக்களை விளைவிக்க ஒருபோதும் தயங்கமாட்டாது

உலகெங்கும் தனக்கான சந்தைகளைத் தேடிக் கொண்டிருந்த சீனா கடந்த சில வருடங்களாக. தனக்கான 'தளங்களை' தேடிக் கொண்டிருக்கின்றது என்பதும் அதற்கான ஆயத்தங்களை செய்த வருவதோடு. பொருளாதார ரீதியில் தாக்கங்களை எதிர் கொண்ட வண்ணம் அதிலிருந்து மீள முடியாமல தவிப்பதையும் நன்கு அறிந்து கொண்டு தன் காய்களை நகர்த்தி வருவதை இந்தியா மற்றும் ஈழத்தமிழர்கள் ஆகியோர் அவதானித்து வருவதை நன்கு அறிந்து கொண்டிருந்தாலும் சீனா தன் எண்ணங்களை அரங்கேற்றுவதிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளது.

சீனாவின் செயற்பாடுகளையும் அதன் நகர்வுகளையும் உலகமே பார்த்துக் கொண்ட வண்ணம் தனது செயற்பாடுகளை முன்வைத்தாலும் சீனாவிறுக இலங்கை ஜனாதிபதியும் அதன் அமைச்சரவையும் கொடுக்கின்ற வரவேற்பும் வாய்ப்புக்களும் சீனப் பிரதிநிதிகள் அடிக்கடி பயணம் செய்யும் ஒரு குட்டித் தீவாக தற்போது கதவுகளைத் திறந்து விட்டுள்ளது. ஒருவர் தனது வீட்டின் கதவை மறந்து போய் திறந்து விட்டுப் போனால் என்னென்ன பாதகங்கள் இடம்பெறுமோ. அவ்வாறான பாதகங்கள் இலங்கைக்கு சீனாவால் அரங்கேற்றப்பட்டுக் கொண்டுள்ளன என்பதை நாம் அவதானிக்கின்றோம்.

தற்போது அபிவிருத்தி என்ற போர்வையில் இந்தியாவை கண்காணிப்பதற்காக இலங்கையை தமது கேந்திர நிலையமாக்கும் முயற்சியில் சீனா இறங்கி உள்ளது என்று நாம் கருதினாலும். இந்தியாவானது தமிழர் நலன்களில் மிகுந்த அக்கறை கொண்டதா என்பதையும் நாம் எம்மால் இயன்றளவிற்கு நாம் கவனிக்க வேண்டும்.

வடக்குக்கு நாம் உதவிகளை வழங்குகின்றோம் என்று சீனா உரத்துச் சொன்னாலும் வடக்கில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு உதவிகளையும் மீனவர்களை முன்னேற்ற போகிறோம் எனக் கூறினாலும். கடல் அட்டைப் பண்ணைகளை சீனா திட்டமிட்டு பினாமிகளினால் பாரிய நிதிகளை செலவு செய்து வருகிறது. இந்தத் திட்டம் எமது மண்ணுக்கு பாரிய நஸ்டங்களை ஏற்படுத்த காரணமாக அமைந்துள்ளது.

இதுவரை காலமும் எமது தமிழ் மக்கள் எண்ணிப்பார்க்க முடியாத அளவிலும் இலங்கையை ஒரு கடுகளவு அளவுள்ள நிலப்பரப்பாக எண்ணிக் கொண்டு எம் மக்களையும் உணர்வுகளையும் பாதிக்கவும் செயற்பட்டு வருகின்றதுஉண்மையில் சீனா உதவி செய்ய வேண்டும் என்றால் இலங்கையில் தமது இருப்புகளை தக்க வைக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய தேவை இல்லை.

தமிழ் மக்களுக்கு எதிரான இறுதிச் யுத்தத்தில் அதிக அளவிலான ஆயுதங்களை வாரி வழங்கி எமது மக்களை கொன்று அழித்ததில் சீனாவுக்கு பெரும் பங்கு உள்ளது என்பதை நாம் மறந்து விடமுடியாது. பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்கள் தான் என்பதை நன்கு அறிந்திருந்தாலும் நலிந்த மக்களுக்கு 'மருந்து' தடவாமல் 'கடிந்தவர்களாக' விளங்கும் இலங்கையின் பெரும்பான்மை இனத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் சிங்கள அரசியல் குறுநிலத்தின் தலைவர்களை நம்பியே அங்கு தனது கால்களைப் பதித்துள்ளது

இவ்வாறான நிலையில் யுத்தம் நிறைவடைந்த பின்னர் தமிழ் மக்களை அழித்த நன்றிக்காக அம்மாந்தோட்டை துறைமுகத்தை இலங்கை அரசாங்கம் சீனாக்கு நீண்ட கால குத்தகைக்கு வழங்கியது.

இவ்வாறு சீனாக்கு வழங்கப்பட்ட அம்மாந்தோட்டை துறைமுகத்தில் எதிர்வரும் மாதம் அளவில் சீனாவின் மிகப் பெரிய இராணுவ ஆய்வுக் கப்பல் ஒன்று வர உள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அதேபோல அம்மாந்தோட்டையில் சீனாவின் படைத்தளம் ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளதான செய்திகளும் வெளியாகியுள்ளன.

இவற்றையெல்லாம் நாம் பார்க்கும் பல தமிழ்த் தலைவர்கள் அடிக்கடி சொலலுவது போது 'சீனா எமக்கு சார்புடையது அல்ல' என்ற கருத்து உண்மையானது போன்று அதனுடைய செயற்பாடுகள் எமக்கு துன்பங்களையும் பாதிப்புக்களையும் ஏற்படுத்தியவர்கள் என்பதை எண்ணிய வண்ணமுமே உள்ளார்கள்.

Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road. Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

VOLUNTEERS NEEDED FOR A SERVICE ORGANIZATION

C.Y.E.C.S
Center for Youth Empowerment & Community Services

Tel: 647-762-9512
www.cyecstoronto.ca

Center for Youth Empowerment & Community Services in Scarborough, that is currently seeking Volunteers for service providing. We are giving the opportunity to individuals interested in the following areas:

- Office Administration
- Fundraising
- Conducting Seminars and Events
- Telemarketing
- Event Volunteering (i.e., backstage, door opener, ticket check)

We would like to give volunteering opportunities for those interested in gaining experience in the work field or want to work in a calm and supportive environment. We are more than happy to provide volunteer hours for high school students.



Applicants who are interested may contact us at infocyecs@gmail.com

For All your Renovation Needs!

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva
416-706-8160

HELP WANTED

Help wanted for restaurant in Oshawa near Harmony and Taunton.

- Dishwasher
- Kitchen help
- Food delivery driver

Contact: 416-624-2224

மருத்துவக் குணம் கொண்ட பத்தியக் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு

ரொறன்ரோவிற்கு மிக அருகில் மருத்துவக் குணம் கொண்ட பத்தியக் கோழிக் குஞ்சுகள் மற்றும் பிஞ்சு கோழிகள் விற்பனைக்குண்டு. இவையனைத்தும் திறந்த வெளியில் வளர்க்கப் பட்டவை. இயற்கையான வளர்ப்பு கொண்டவை.
தொடர்புகளுக்கு (647)920-5180

BASEMENT FOR RENT

Markham/Steeles
மார்க்கம்-ஸ்காபுறொ நகரங்களுக்கு இடையில் உள்ள வீடொன்றில் One Bed Room கொண்ட Basement உடனடியாக வாடகைக்கு உண்டு. தனிப்பட்ட வாசல் உண்டு. செப்டம்பர் மாதம் தொடக்கம் வழங்கலாம்.
தொடர்புகளுக்கு:- 416 994 7776

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

## யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் உட்பட மூவரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவு!

யாழ்ப்பாணம் - ஆறுகால்மட பகுதியில் சிதைவடைந்த நிலையில் குழந்தையின் சடலம் மீட்கப்பட்டமை தொடர்பிலான விசாரணைகளுக்கு யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் உள்ளிட்ட மூவரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி 16.08.2023 அன்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - ஆறுகால்மடம், கோம்பயன்மணல் மயானத்திற்கு அருகில் உள்ள காணி ஒன்றினுள் இருந்து (10.08.2023) சிதைவடைந்த நிலையில் குழந்தை ஒன்றின் சடலம் மீட்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில், 10.08.2023 அன்று யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி உள்ளிட்டோர் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது போதனா வைத்தியசாலையில் உரிமை கோரப்படாத சடலங்கள், சத்திர சிகிச்சையின்போது அகற்றப்படும் உடல் உறுப்புக்கள் என்பவை மாநகர சபை ஊடாக கோம்பயன்மணல் மயானத்திலேயே புதைக்கப்பட்டு வந்துள்ளது.

அவ்வாறு புதைக்கப்படுவதை மாநகர சபை பணியாளர்கள் உரிய முறையில் புதைப்பதில்லை, அதனால் நாய்கள் உள்ளிட்ட விலங்குகள் அவற்றை இழுத்துச் செல்வதாகவும், அதனால் அப்பகுதியில் துர்நாற்றங்கள் வீசுவதால், அப்பகுதி மக்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்துள்ளனர்.

இந்நிலையிலையே யாழ் ப்பாணம் மாநகர சபை ஆணையாளர், அப்பகுதிக்கான பொதுச் சுகாதார பரிசோதகர் மற்றும் கோம்பயன்மணல் மயானத்திற்குப் பொறுப்பான உத்தியோகஸ்தர் ஆகிய மூவரையும் எதிர்வரும் 16ஆம் திகதி மன்றில் முன்னிலையாகுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## வடக்கு மாகாணத்தின் எல்லைகளில் நடைபெறும் சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பாக ஆளுநருடன் அவுஸ்திரேலிய எல்லைப்பாதுகாப்பு படையின் செயலாளர் சந்திப்பு



வடக்கு மாகாணத்தின் எல்லைப்பாதுகாப்பு மற்றும் சட்டவிரோத பயணங்கள், கடல் எல்லைகளில் நடைபெறும் சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களுடன் அவுஸ்திரேலியப் எல்லைப்பாதுகாப்பு படையின் முதனிலை செயலாளர் மற்றும் அவர்களின் குழு, இலங்கை சுங்கத்திணைக்கள உத்தியோகத்தர்கள் (11.08.2023) ஆளுநர் அலுவலகத்தில் கலந்துரையாடினர்.

இந்த கலந்துரையாடலில் வடக்கு மாகாணத்திலிருந்து சட்டவிரோதமாக வெளிநாடு செல்பவர்களை தடுக்கும் செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வது என்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

சுங்க திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு அவுஸ்திரேலிய எல்லைப்பாதுகாப்பு படை பயிற்சிகளை வழங்கவுள்ளதாகவும் புதிய தொழிநுட்பங்களை அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் அவுஸ்திரேலியப் படையின் முதனிலை செயலாளர் மற்றும் அவர்களின் குழுவால் கூறப்பட்டது.

வடமாகாணத்திலிருந்து பாலாலி விமான நிலையம் ஊடாக சென்னைக்கு நேரடியாக பிரயாணம் நடைபெறுவதாலும் இந்தியா இலங்கை கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட இருப்பதனாலும் சுங்கத்திணைக்களங்களின் செயற்பாடுகளை வலுப்படுத்த வேண்டும் என்றும் ஆளுநர் தெரிவித்தார்.

மேலும் நாம் யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை, மன்னார் முதலிய துறைமுகங்களை அபிவிருத்தி செய்து வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தவுள்ளதால் மேலும் சட்டவிரோத எல்லைமீறல்கள், நடைபெற வாய்ப்புகள் உள்ளதால் அது தொடர்பாக கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் ஆளுநர் கூறியிருந்தார்.

போதைப்பொருட்கள் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுவதில்லை.

ஆனால் அதன் பாவனை மற்றும் தாக்கம் வடக்கு மாகாணத்தில் மட்டுமன்றி முழு இலங்கையிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இங்கே உற்பத்தி செய்யப்படாத போதைப்பொருட்கள் இங்கே கிடைக்கின்றது என்றால் எல்லைகளை மீறி வெளிநாடுகளிலிருந்து இங்கே கொண்டுவரப்படுகின்றது.

அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டும் அவற்றை கட்டுப்படுத்துவது மிகவும் கடினமாக உள்ளது. அதற்கு அவுஸ்திரேலியப் எல்லைப்படையின் உதவி தேவைப்படும் என்பதையும் ஆளுநர் கூறியிருந்தார்.



## விசாரணைகளைத் திசைதிருப்பும் நோக்கில் தெல்லிப்பழை யூனியன் மாணவர்களைத் தவறாக வழிநடத்தும் அதிபர்

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கடந்த 07.08.2023ம் திகதி உயர்தர மாணவர்கள் சிலரை ஐந்து பாடவேளைகள் வெயிலில் வெளியே விட்டு தண்டனை வழங்கப்பட்டமைக்கு ஆசிரியர் ஒருவர் எதிர்ப்பு தெரிவித்திருந்த நிலையில், அதிபரின் குறித்த தவறினை மூடிமறைக்கும் நோக்கில், மாணவர்களை தவறான முறையில் பயன்படுத்தும் அதிபரின் செயற்பாடு தொடர்பாக வடமாகாண கல்வி திணைக்களம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவ் அறிக்கையில் மேலும் உள்ளதாவது, பாடசாலையின் CCTV தொகுப்புகள் உடனடியாக கண்காணிக்கப்பட்டு, அதிபரால் கூட்டம் போடப்பட்டு மாணவர்களும் ஏனையோரும் தவறாக வழிநடத்தப்பட்ட விடயங்கள் கண்டறியப்பட வேண்டும்.

வெள்ளிக்கிழமை (11) சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தருடன் இணைந்து பொலிஸாரும் விசாரணை நடத்தியுள்ள நிலையில் - முடிவுகள் கண்டறியப்பட முன்னர் விசாரணைகளைத் திசைதிருப்பும் நோக்கில் மாணவர்களைத் தவறாக வழிநடத்தும் அதிபரின் செயற்பாடு குறித்து விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

குறித்த அதிபரின் முறைகேடுகள் மற்றும் பாடசாலை சிற்றுண்டிச் சாலையை வேறு ஒருவரது பெயரில் தானே பெற்று, பாடசாலை மாணவர்களைப் பயன்படுத்தி வியாபாரம் செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் புகைப்பட ஆதாரங்களுடன் வடமாகாண கல்வி திணைக்கள விசாரணைக்குழுவுக்கு வழங்கியிருந்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

குறித்த அதிபரின் முறைகேடுகள் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கம் ஆதாரங்களுடன் வழங்கிய விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், இத்தகைய தவறானவர்களின் செயற்பாடுகள் தவிர்க்கப்பட்டிருக்கும்.

யூனியன் கல்லூரி விவகாரம் தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணையின் மூலம் உண்மைகள் கண்டறியப்படவேண்டும் என்பதை இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்துகிறது - என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



## கீரிமலை கேணியையும் தொல்லியல் திணைக்களம் ஆக்கிரமிக்க முயற்சிப்பது கண்டிக்கத்தக்கது – அகில இலங்கை இந்து மாமன்றம்

வரலாற்றுச் சிறப்புமிக்கதும் சைவ மக்களின் முக்கியமான சமய சம்பிரதாயங்களோடு தொடர்புடையதுமான கீரிமலை கேணியையும் தொல்லியல் திணைக்களம் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிப்பது கண்டிக்கத்தக்கது என அகில இலங்கை இந்து மாமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் மன்றத்தின் அறிக்கையில் உள்ளதாவது, ஒவ்வொரு சைவ ஆதாரங்களையும் தொல்லியல் திணைக்களம் கையகப்படுத்த நினைப்பதும், அதற்கான கண்டனங்கள் வெளிநாடுகள் வரை சென்று எதிரொலிக்கும்போது தமது செயற்பாடுகளிலிருந்து திணைக்களம் தற்காலிகமாக பின்வாங்குவதும் என்று சைவ மக்கள் தமது அடையாளங்களை ஒன்றன் பின் ஒன்றாக இழந்துவரும் துர்ப்பாக்கிய நிலைக்கு இட்டுச் செல்வது மிகவும் கவலைக்குரியது.

இவ்வாறான செயற்பாடுகள் முளையிலேயே கிள்ளியெறியப்பட வேண்டும். இப்படியான சமிக்ஞைகளால் அரசாங்கம் சைவத் தமிழ் மக்களின் நம்பிக்கையை பெறுவதற்கான அதன் முயற்சிகளில் பாரியளவில் பாதிப்பு ஏற்படும்.

கீரிமலை கேணி, தமது நீத்த உறவினர்களின் பிதிர்க்கடன்களை நிறைவேற்ற வெளிநாடுகளிலிருந்தும் சைவமக்கள் வந்து செல்கின்ற இடம்.

ஈழத்தில் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான நகுலேஸ்வரத்தின் அருகில் அமைந்துள்ள இந்த கேணி பல நூற்றாண்டு கால பழமை வாய்ந்தது. இது ஒரு நூற்றாண்டு காலத்துக்கும் மேலாக வலி.வடக்கு பிரதேச சபையால் நிர்வகிக்கப்பட்டு வருகிற இடம்.

சைவத் தமிழ் மன்னன் இராவணனோடும் இராமாயணத்தோடும் தொடர்புடைய திருக்கோணேஸ்வர ஆலய சுற்றாடலில் வெளியார் ஆக்கிரமிப்பு, கன்னியா வெந்நீரூற்று தொடர்பில் தொல்லியல் திணைக்களத்தின் தலையீடு, அண்மையில் பறளாய் முருகன் கோவிலில் உள்ள ஒரு அரச மரத்தைப் பற்றிய சர்ச்சை, வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் அழிக்கப்பட்டமை, பின் அதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட சர்ச்சைகள் என சைவ மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்கின்றன.

எனவே, இத்தகைய அநீதியான செயலைத் தடுத்து நிறுத்துவதோடு, சிறுபான்மை மக்களின் மத வழிபாடுகளை தடுக்கின்ற செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம்.

நாங்கள் எந்த மதத்துக்கும் எதிரானவர்கள் அல்லர். ஆனால், எமது மத வழிபாட்டை தடை செய்ய எவருக்கும் உரிமையில்லை. அத்தகைய செயற்பாடுகளை தடுக்க வேண்டும் என மாண்புமிகு ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது.

## அரசியலமைப்பில் இருப்பதை நடைமுறைப்படுத்தவோ அல்லது நீக்கவோ சிங்கள தலைமைகளுக்கு துணிவில்லை – சபா குகதாஸ்!

நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள அரசியலமைப்பில் 1988 ஆண்டு கொண்டுவரப்பட்ட 13வது திருத்தத்தை ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கீழ் முழுமையாக நடைமுறைப்படுத்தவோ அல்லது இல்லாது ஒழிக்கவோ முதுகெலும்பற்ற தலைவர்களாக மாறி மாறி ஆட்சிக்கு வரும் சிங்கள கட்சிகளின் தலைவர்கள் உள்ளனர் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் வெள்ளிக்கிழமை (11) வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவ் அறிக்கையில் மேலும் உள்ளதாவது,

நாடாளுமன்றத்திலும் வெளியிலும் 13வது சரத்தை நீக்க வேண்டும் என கூச்சல் இடும் சிங்கள இனவாதிகளால் செயற்பாட்டில் வெற்றி கொள்ள முடியவில்லை. காரணம் இந்தியாவை பகை சக்தியாக்க முடியாத நிலமை ஆனால் மாறாக இனவாதம் பேசுபவர்கள் 13 எதிர்ப்பதன் மூலம் தங்கள் வாக்கு வங்கியை தக்க வைக்கின்றனர்.

13 வது திருத்தத்தை அமுல்ப்படுத்த வேண்டும் என முன்வரும் ஆட்சியாளர்கள் அடுத்த முறை தங்களின் ஆட்சிக் கதிரை பறி போய்விடும் என்ற பயத்தின் காரணமாக பேச்சளவில் மட்டும் தங்களது ஆட்சியை முன் நகர்த்த முனைகின்றனர் இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அடுத்த தேர்தலை நோக்கியே பேசுகிறார்.

நாட்டின் அமைதிக்கு அதிகாரப் பகிர்வு தான் நிரந்தர தீர்வு ஆனால் 13வது திருத்தம் முழுமையாக அமுல்ப்படுத்தப்பட்டால் இனவாதத்திற்கான சந்தர்ப்பங்கள் குறைவடைந்து இனங்களிடையே ஐக்கியம் உருவாக வழி திறக்கும் அத்துடன் நிரந்தர அமைதிக்கான அத்திபாரமாக அமையும்.

இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து இன மோதலுக்கான தீர்வை சிங்கள கடும் போக்களரின் எதிர்ப்புகள் இன்றி தீர்வு கொடுக்கக்கூடிய சந்தர்ப்பம் மகிந்த ராஜபக்ச வுக்கு கிடைத்தது அதனை அவர் பயன்படுத்தவில்லை ஆனால் எதிர்வரும் காலத்தில் அதிகாரத்திற்கு வருபவர்கள் இனப்பிரச்சினையை முடிவுறுத்தா விட்டால் நாடு இனவாதத்தால் அழியும் - என மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கைக்கு சீனா வழங்கும் உதவிகள் ஆபத்தானவை என்கிறார் விந்தன் கனகரத்தினம்




இலங்கையில் அதுவும் தமிழ் மக்களுக்கு சீனாவால் வழங்கப்படுகின்ற உதவிகள் இந்தியாவை சீண்டுவதற்காக வழங்கப்படுகின்ற நிலையில் எதிர்காலத்தில் ஆபத்துக்களை ஏற்படுத்தும் என முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தெரிவித்தார்.
நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாண ஊடக மையத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் இடம் பெற்ற இறுதி யுத்தத்தில் தமிழ் மக்களை கொன்று குவிப்பதற்கு சீனா பெரும் பங்காற்றியது.
தற்போது அபிவிருத்தி என்ற போர்வையில் இந்தியாவை கண்காணிப்பதற்காக இலங்கையை தமது கேந்திர நிலையமாக்கும் முயற்சியில் சீனா இறங்கி உள்ளது. அதன் ஏற்பாடாக வடக்கில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு உதவிகளையும் மீனவர்களை முன்னேற்ற போகிறோம் என கடல் அட்டைப் பண்ணைகளை சீனா திட்டமிட்டு பினாமிகளினால் பாரிய நிதிகளை செலவு செய்து வருகிறது.
உண்மையில் சீனா உதவி செய்ய வேண்டும் என்றால் இலங்கையில் தமது இருப்புகளை தக்க வைக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய தேவை இல்லை.
தமிழ் மக்களுக்கு எதிரான இறுதிச் யுத்தத்தில் அதிக அளவிலான ஆயுதங்களை வாரி வழங்கி எமது மக்களை கொன்று அழித்ததில் சீனாவுக்கு பெரும் பங்கு உள்ளது.
இவ்வாறான நிலையில் யுத்தம் நிறைவடைந்த பின்னர் தமிழ் மக்களை அழித்த நன்றிக்காக அம்மாந்தோட்டை துறைமுகத்தை இலங்கை அரசாங்கம் சீனாக்கு நீண்ட கால குத்தகைக்கு வழங்கியது.
இவ்வாறு சீனாக்கு வழங்கப்பட்ட அம்மாந்தோட்டை துறைமுகத்தில் எதிர்வரும் மாதம் அளவில் சீனாவின் மிகப் பெரிய இராணுவ ஆய்வுக் கப்பல் ஒன்று வர உள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அதேபோல அம்மாந்தோட்டையில் சீ-னாவின் படைத்தளம் ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளதான செய்திகளும் வெளியாகியுள்ளன.
சீனா இலங்கைக்கு உதவி செய்யும் போர்வையில் இந்தியாவுக்கு எதிரான போரை எவ்வாறு வெற்றி கொள்ளலாம் என்ற போர்வையில் தமது இருப்பை இலங்கையில் தக்க வைத்துக் கொள்வதற்கும் கடற்பரப்பில் அதற்கான வேலை திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றனர். சீனா உதவிகளை வழங்கினால் மக்கள் தம்மை ஏற்றுக் கொள்வார்கள் என இணைக்கிறார்கள் மக்கள் அவ்வாறு ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். எமது அயல் நாடான இந்தியாவில் வாழ்கின்ற எட்டு கோடி எமது தொப்புள் கொடி உறவுகளுக்கு எதிராக சீனா செயல்பட நினைத்தால் அதனை ஒன்று திரண்டு எதிர்ப்போம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# குறுந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் இன்று 18ம் திகதி பொங்கல் பொங்குமா?

**— ந.லோகதயாளன்.**




முல்லைத்தீவு மாவட்டத்தின் குறுந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் இன்று பொங்கள் உற்சவம் இடம்பெறவுள்ள நிலையில் பதற்றமும் சூழ்ந்துள்ளதனால் பொங்கல் பொங்குமா என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது.
குறுந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் ஏற்கனவே பொங்கள் உற்சவம் இடம்பெற ஏற்பாடுகள் மேற்கொண்ட நிலையில் பொலிசாரும் தொல்லியல்த் திணைக்களமும் தடுத்து நிறுத்தியமையினால் பதற்றம் சூழ்ந்து பொங்கல் தடைப்பட்டு நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு பொங்குவதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளதனால் இன்று பொங்கல் ஏற்பாடு இடம்பெறுகின்றது.
இருந்தபோதும் இதனைத் தடுப்பதற்கு சிங்கள இனவாதிகள் அழைப்பு விடுத்த நிலையில் தெற்கில் இருந்து சிங்கள மக்களும் பௌத்த துறவ-ிகளும. பேரூந்தில் அழைத்து வரப்படுகின்றனர்.
இதேநேரம் யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்கள் உட்பட யாழ்ப்பாணத்தில் இருந்தும் பேரூந்துகளில் பக்தர்கள் காலையில் குறுந்தூர்மலை நோக்கி பயணித்துள்ளதோடு மாவட்டத்தில் இருந்தும் பலர் அங்கே பிரசன்னமாகியுள்ளனர்.
இருதரப்பும் ஒன்றுகூடும் அதேநேரம் படையினரும் பொலிசாரும் குவிக்கப்பட்டுள்ளதனால் இன்று பொங்கல் பொங்குமா என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

- பாராளுமன்றில் பதின்மூன்று -

# தமிழர்களுக்குத் தலையையும் சிங்களவர்களுக்கு வாலையும் காட்டும் ரணில் விக்கிரமசிங்கவின் விலாங்குத் தந்திரம்



ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே அரசியல் அமைப்பில் இருக்கும் 13ஆவது திருத்தச் சட்டத்தை ஜனாதிபதியாக அவர் கொண்டிருக்கும் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி நடைமுறைக்குக் கொண்டுவந்திருக்க முடியும். ஆனால், மிகவும் நாசூக்காக நாடாளுமன்றத்துக்கு அதனைக் கொண்டு சென்றிருப்பதோடு 13 தொடர்பாக தமிழர் தரப்புக்குச் சாதகம் போலக் காட்டும் சில பரிந்துரைகளையும் முன்வைத்திருக்கிறார். ஆனால் இப்பரிந்துரைகள் எதையும் சிங்களவர்கள் மிகப்பெரும்பான்மையாக உள்ள பாராளுமன்றில் நிறைவேற்ற முடியாது என்று தெரிந்திருந்தும் பாராளுமன்றத்துக்குக் கொண்டு சென்றிருப்பது தமிழர்களுக்குத் தலையையும் சிங்களவர்களுக்கு வாலையும் காட்டுகின்ற அவரின் விலாங்குத் தந்திரமே ஆகும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றில் 13ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றங்கள் செய்வது பற்றி ஆலோசனைகளைச் சமர்ப்பித்திருப்பது தொடர்பாக பொ. ஐங்கரநேசன் வெளியிட்டிருக்கும் ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாகாணசபைச் சட்டங்களில் உடனடியாகச் சில மாற்றங்களைச் செய்து விரைவில் மாகாணசபைத் தேர்தலை நடாத்தவுள்ளார் என்ற தோற்றத்தைத் தனது பாராளுமன்ற உரையின்போது வெளிப்படுத்தியிருக்கிறார். மாகாணசபைச் சட்டம் நடைமுறைக்கு வருவதோ, மாகாணசபைத் தேர்தல் நடைபெறப்போவதோ உடனடிச் சாத்தியம் இல்லாதவை. உள்ளூராட்சித் தேர்தலையே நடாத்தவிடாமல், வேட்புமனுத் தாக்கல் செய்த பின்பும் பல தந்திரங்களைச் செய்து தேர்தலைக் காலவரையின்றி ஒத்திப்போட்ட ரணில் விக்கிரமசிங்க மாகாணசபைத் தேர்தலை நடாத்துவார் என்று எதிர்பார்ப்பது அரசியல் அறிவிலித்தனம் மாகாணசபைச் சட்டங்களில் திருத்தங்கள் செய்து தமிழ்மக்களுடன் அதிகாரங்களைப் பகிர்வார் என்று நினைப்பது அதைவிட அறிவிலித்தனமானது.

ரணில் விக்கிரமசிங்க மாகாணசபை விவகாரத்தைக் கையிலெடுத்திருப்பதன் முதலாவது நோக்கம் மாகாணசபைத் தேர்தலை நடாத்துமாறு கோரும் இந்தியாவின் அழுத்தங்களில் இருந்து விடுபடுவதாகும். இரண்டாவது நோக்கம், ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடாத்தி அறுதிப் பெரும்பான்மையுடன் தான் ஜனாதிபதியாக நீடிப்பதை உறுதி செய்வதாகும். ரணில் தீர்வு தருவார் என்ற நம்பிக்கையைத் தமிழ்மக்களிடையே ஏற்படுத்தி அவர்களின் வாக்குகளைக் கபளீகரிப்பதும், மாகாணசபை விவகாரத்தைப் பாராளுமன்றத்துக்குக் கொண்டு சென்று அதனை நிறைவேற்ற முடியாமல் செய்வதன் மூலம் சிங்கள மக்களினது வாக்குகளை வாரிச் சுரட்டுவதுமே அவரது இலக்குகளாகும். தமிழ் மக்கள் ரணில் விக்கிரமசிங்கவின் இந்த விலாங்குத்தனத்தைப் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# ஜப்பானிய அரசினால் கிளிநொச்சி – ஸ்கந்தபுரம் பாடசாலைக்கு புதிய கட்டிடம் கையளிப்பு





கிளிநொச்சி - ஸ்கந்தபுரம் இலக்கம் 02 அ.த.க பாடசலைக்கு, ஜப்பினிய மற்றும் இலங்கை நட்புறவின் அடையாளமாக ஜப்பானிய மக்களால் நன்கொடையாக வழங்கப்பட்ட புதிய கட்டிடத்தொகுதி கையளிக்கப்பட்டது.



17.6 மில்லியன் செலவின் புதிதாக அமைக்கப்பட்ட குறித்த கட்டடம் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைக்காக கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஜப்பன் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் மிசுசி கிடாக்கி அதிதியாக கலந்து கொண்டு கட்டடத்தை திறந்து கையளித்தார்.

குறித்த நிகழ்வில் கிளிநெச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் முரளிதரன், மாகாண கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி பணிப்பாளர், பாடசாலை சமூகம் என பலரும் கலந்துகொண்டனர்.

# சாணக்கியன் யுத்தம் நிறைவடைந்த பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் தேர்தலில் இறங்கினார்





நான் தமிழ் மக்களின் பிரச்சனைகளை அறிந்து அரசியலுக்கு வந்தேன் ஆனால் சாணக்கியன் போன்ற சில தமிழ் தேசிய கூட்டமைப்பில் உள்ளவர்களுக்கு இது பொருந்தாது சாணக்கியன் யுத்தம் நிறைவடைந்த பின்னர் இலங்கை வந்து ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் தேர்தலில் இறங்கினார் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தேர்தலில் இறங்கினார். நாளை இன்னோரு கட்சியிலும் தேர்தலில் இறங்கலாம். என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சாணக்கியன் ஆற்றிய உரை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எனது 30 வருட அரசியல் வாழ்க்கை கடக்கின்ற நிலையில் தமிழ் மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற நினைப்புடன் இன்றும் அரசியலில் செய்யப்பட்டிருக்கிறேன்.

தமிழ் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் பாராளுமன்றத்தில், மட்டக்களப்பு மாவட்டத்திற்கு எனது அமைச்சு சார்ந்து பிரச்சினைகளை தீர்க்கவில்லை எனத் தெரிவித்தார்.

நான் எழுந்து என்ன பிரச்சனையை தீர்க்கவில்லை கூறுங்கள் பார்ப்போம் என கூறிய போது அவர் மௌனமாக இருந்தார் என்னிடம் நான் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வரும்போது பிரச்சினைகளை கூறுங்கள் தீர்வு காண்போம் எனத் தெரிவித்திருந்தேன்.

சாணக்கியன் போன்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருக்கின்ற சிலர் மக்கள் அனுபவித்த துன்பங்கள் வேதனைகளை அறிந்திருக்க மாட்டார்கள்.

ஆனால் தற்போது மக்கள் பிரச்சனையை தீர்க்கப் போகிறோம் எனக் கூறி பிரச்சனைகளை தீராப் பிரச்சனையாக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர் பாராளுமன்றத்தில், மட்டக்களப்பில் தற்போது அரசியல் கட்சிய அலுவலகம் அமைத்து செயற்படுவதாக கூறியிருந்தார்.

அவருக்கு சிலவேளை தெரியாமல் இருந்திருக்கலாம் 90க்கு பிற்பட்ட காலங்களில் மட்டக்களப்பில் எமது அலுவலகம் திறப்பு செய்யப்பட்ட நிலையில் ஒன்பது பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தபோது மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இருந்தார்.

இதை பற்றி அறிந்திடாத சாணக்கியன் யுத்தம் நிறைவடைந்த பின்னர் இலங்கை வந்து ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் தேர்தலில் இறங்கினார் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தேர்தலில் இறங்கினார். நாளை இன்னோரு கட்சியிலும் தேர்தலில் இறங்கலாம்.

ஆனால் போராட்ட இயக்கங்களுக்கு தலைமை தாங்கிய எங்களிடம் கொள்கை இருக்கிறது ஆனால் இவர்களிடம் அதை எதிர்பார்க்க முடியாது.

தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தில் நானும் பங்கு எடுத்தவன் என்ற வகையில் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு பிரச்சனைகளுக்கு நிரந்தர தீர்வு வழங்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருக்கிறது.

என்னுடன் போராடிய சக இயக்கங்களைச் சேர்ந்த செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், சிவனேசதுரை சந்திரகாந்தன் போன்ற தலைவர்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கிறார்கள்.

அவர்களுடன் இணைந்து தமிழ் மக்களுக்கான ஆரம்ப அரசியல் தீர்வான 13 ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை ஜனாதிபதி மேற்கொண்டு வருகிறார்.

ஆகவே தமிழ் மக்களின் வரலாறுகளை சரிவர விளங்கிக் கொள்ளாத சாணக்கியன் போன்ற சிலர் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்கப் போகிறோம் எனக் கூறி பிரச்சனைகளைத் தீராப் பிரச்சினையாக்கக் கூடாது என அவர் மேலும் தெரிவித்தார்.



# கடலுக்குச் சென்று காணாமல் போனவரை தேடி தருமாறு தாய், மனைவி கண்ணீர் மல்க கோரிக்கை!

கடந்த 04/08/2023 அன்று கடற்றொழிலுக்கென சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை என்றும் அவரை கண்டுபிடித்து தருவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உதவுமாறும் காணாமல் போனவரின் தாயார் கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் வடமராட்சி ஊடக இல்லத்தில் நடாத்திய ஊடக சந்திப்பின்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, கடந்த 04/08/2023 அன்று கடலுக்கென சென்றவர் மீண்டும் வீடு திரும்பவில்லை என்றும், அவரை கடத்தியதாக தெரிவிக்கப்படுகின்ற நிலையில் கடத்தியதாக சந்தேகிக்கப்படும் ஒருவரை நாகர்கோவில் பகுதியில் மடக்கி பிடித்த ஊரவர்கள் கடத்தல் தொடர்பில் ஒப்புக்கொண்ட நிலையில் அவரை பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும், தெரிவித்துள்ள தாயார் மேலும் அவருடன் சென்ற ஒருவர் கஞ்சா கடத்தல் தொடர்பில் கைதாகி இருப்பதுவும் தெரிவித்துள்ளார்.

தனது மகன் வீடு திரும்பாத நிலையில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும், பொலிசாரும் அவரை தேடி வருவதாகவும், மேல் அதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ள தாயார், அவரை மீட்டுத் தருமாறும், கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை இந்தியாவிலிருந்து ஒருவர் தொடர்பு கொண்டு காணாமல் போனவர் கஞ்சா கடத்தலிற்கா இந்தியா வந்தவேளை தவறியுள்ளதாகவும் தெரிவித்ததாகவும் அன்றிலிருந்து அவரது தொலைபேசி செயற்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

# வவுனியாவில் சீனித் தொழிற்சாலை தொடர்பில் ரெலோவிற்குள் மோதல் முற்றுகிறது?

- நடராசா லோகதயாளன்

**வ**வுனியாவில் சீன நிறுவனம் ஒன்றின் ஆதரவின் மூலம் முன்னெடுக்கப்படும் சீனித் தொழிற்சாலைக்கான எதிர்ப்பு வலுத்து வருகிறது. அரசியல் கட்சிகள், சமூக செயற்பாட்டாளர்கள், சூழலியல் ஆர்வலர்கள் என பல தரப்பினர் அந்த தொழிற்சாலைக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

ஆனால், இந்த சீனித் தொழிற்சாலை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் வேண்டுகோளிற்கு அமைவாகவே முன்னெடுக்கப்படுவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கூறுகிறார்.

இதையடுத்து, இந்த விடயத்தில் அவரது கட்சிக்குள்ளேயே மோதல் அதிகரித்துள்ளது.

“தனிநாடு கேட்டு சுயாட்சி கேட்டு தற்போது சீனித் தொழிற்சாலை கேட்கின்றோம்” என அக்கட்சியின் விந்தன் கனகரட்னம் கட்சிக்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ளார்.

தமிழ் மக்களின் இன்றைய தேவை விடுதலையே அன்றி சீனியோ சக்கரையோ என்று அவர் காட்டமாக தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் தனது கருத்தை வெளியிட்டார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்: “வடக்கு கிழக்கில் கொண்டு வந்த தொழிற்சாலைகள் அழிவடைந்து இரும்பு திருட்டு இடம்பெறவும், சிங்களக் குடியேற்றத்திற்கு வித்திட்ட சூழலில் நிரந்தர தீர்வின்றி எந்த வகையில் அபிவிருத்தி முதலீடு சாத்தியமாகும்? இன்று எமக்குத் தேவை சீனியோ அல்லது சக்கரையோ அல்ல விடுதலைதான் முக்கியம்” என்றார்.

மறுபுறத்தே மேர்வின் சில்வா வாளுடன் வாரத் தயாராகின்றார் அவருக்கு பாதுகாப்பு வழங்க பாதுகாப்புப் படை தயாராகின்றது. இந்த நேரத்தில் ரணிலிடம்போய் சீனி கேட்பதல்ல எமது பிரச்சணை. காணாமல் போனவர்களிற்கு, அரசியல் கைதிகள் விடயத்திற்கு தீர்வு இல்லை. நாளாந்தம் சிங்களக் குடியேற்றம் இடம்பெறுகின்றது இவைதான் எமது பிரச்சணை. 3 லட்சம் மக்களையும் 50 ஆயிரம் போராளகளையும் பலிகொடுத்துள்ளோம். இந்த நிலையில் எமக்கு சீனியா முக்கியம்? எனவும் அந்த ஊடக சந்திப்பில் விந்தன் கேள்வி எழுப்பினார்.

“கடந்த இரு மாதமாக எங்கு பார்த்தாலும் இந்த சீனித் தொழிற்சாலை பற்றிய பேச்சாகவே உள்ளது. 39 வருட போராட்ட வாழ்க்கையில் எமது கட்சிக்கு ஏறபட்ட அவமான காலமாகப் பார்க்கின்றேன். ஊடகங்கள் இதுவரை எழுதிய விடயம் எல்லாம் மெய் என நிரூபனமாகிவிட்டது” என தனது ஆதங்கத்தையும் அவர் வெளிப்படுத்தினார்.

“தனிநாடு கேட்டோம், சுயாட்சி கேட்டோம் தற்போது சீனித் தொழிற்சாலை கேட்கின்றோம். இந்த விடயம் தொடர்பில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெனா, வினோ உட்பட எவருக்குமே தெரியாது. அதேபோல் ஏனைய பங்காளக் கட்சிகளிற்கும் தெரியாது. ஆனால் செல்வம் அடைக்கலநாதன் கேட்ட சீனித் தொழிற்சாலை திட்டத்தை அங்கீகரித்துள்ளேன் என ஜனாதிபதி மக்கள் முன்னாள் கூறியுள்ளார்”.

இது தொடர்பில் யாரோ கொண்டு வந்த திட்டம் அதை நாம் ஆதரித்தோம் என்றே கூறிய செல்வம் அடைக்கலநாதன் இதற்கு யாரும் குத்தி முறியத் தேவையில்லை என்கிறார் விந்தன் கனகரட்னம்.

இந்த விடத்திலே பல கோடி ரூபா பணம் கையூட்டாக வழங்கபட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியத என்று கூறிய அவர் இதேநேரம் இத்திட்டத்திற்கான அதிக தொகைப் பணத்தை தாய்லாந்து செலவு செய்யுமா எனபது சந்தேகம், இது சீனாவின் திட்டம் என்கின்றனர் இதற்கு ஏறபாட்டாளர்களே விளக்கம் அளிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

# செல்வம் அடைக்கலநாதன் வேண்டுகோளிற்கு அமையவே சீனித் தொழிற்சாலை என்கிறார் ரணில்

**நா**டாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் வேண்டுகோளுக்கு அமையவே வவுனியாவில் சீனித் தொழிற்சாலையொன்றை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மன்னார் மடு மாதா ஆலயத்தின் வருடாந்தா உற்சவம் இம்மாதம் 15ஆம் திகதி இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கா இதனைத் தெரிவித்தார்.

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் நெடுங்கேணியை அண்டிய பகுதியில் நயினாமடுக் கிராமத்தில் மத்திய வகுப்பு திட்டத்தில் மக்களிற்கு வழங்கிய நிலத்தில் 500 ஏக்கர் பகுதியில் சீனித் தொழிற்சாலை அமைக்கப்படவுள்ளதோடு அத் தொழிற்சாலையின் செயற்பாட்டிற்கு வவுனியா வடக்கில் 30 ஆயிரம் ஹெக்டேயர் நிலத்தில் கரும்புச் செய்கை மேற்கொள்ளப்படவும் திட்டமிடப்பட்டு பணிகள் இடம்பெறுகின்றன என்ற செயல்பாட்டின் செய்திகள் வெளியாகி உள்ளன.

இந்த நிலையிலேயே மடுவிற்கு வந்த ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் வேண்டுகோளுக்கு அமையவே வவுனியாவில் சீனித் தொழிற்சாலை ஒன்றை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதோடு அதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்து விட்டது என பகிரங்கமாக தெரிவித்துள்ளார்.

இதற்கு பலர் கடுமையான எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளனர். வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரும், யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி. விக்னேஸ்வரன் இந்த திட்டம் தமது ஆட்சி காலத்தில் நிராகரிக்கப்பட்டது என்று அண்மையில் தெரிவித்திருந்தார்.

திட்டமிடப்பட்டுள்ள அந்த சீனித் தொழிற்சாலை அங்கு வருமாயின், அது நீர் மேலாண்மையை மிகவும் மோசமாக பாதிக்கும், சுற்றுச்சூழலிற்கு பாரிய சீர்கேட்டை ஏற்படுத்தும் என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் பொன். ஐங்கரநேரசனும் கருத்து வெளியிட்டிருந்தார்.

வவுனியாவில் ஏற்கனவே கடுமையன நீர் நெருக்கடி இருக்கும் சூழலில், கரும்புச் செய்கை மற்றும் சீனி ஆலைக்கு தேவையான நீர் ஆதாரம் எங்கிருந்து கிடைக்கப் போகிறது என்ற கேள்வியும் இதில் எழுப்பப்பட்டுள்ளது.

THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள் Sri Lanka News

# டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தில் முன்னெடுக்கப்படவுள்ள செயற்பாடுகள் குறித்து யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரின் அறிவிப்பு!

பு. கஜிந்தன்

14.08.2023 அன்று ஆரம்பமாக உள்ள டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தில் முன்னெடுக்கப்பட உள்ள செயற்பாடுகள் குறித்து யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சிவபாலசுந்தரம் ஊடக அறிக்கை ஒன்றினை சனிக்கிழமை (12) வெளியிட்டுள்ளார் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இவ் வருடமும் பல மாவட்டங்கள் டெங்கு பரவலால் பாதிக்கப்பட்டுள்ளன. வட மாகாணத்தில் பருவப் பெயர்ச்சி மழைக்குப் பின்னர் டெங்கு தீவிரமாக பரவக்கூடிய அபாயம் உள்ளது. பருவப்பெயர்ச்சி மழை ஆரம்பிக்க முன்னர், டெங்கு பரவும் இடங்களை இல்லாது ஒழிப்பதன் மூலம் டெங்கு பரவலை கட்டுப்படுத்த முடியும்.

எனவே வடமாகாண மட்ட டெங்கு தடுப்பு செயலணி உப குழுவின் சிபார்சின் அடிப்படையில் மடமாகாண பிரதம செயலாளர் அவர்களால், வடமாகாணத்தில் எதிர்வரும் 14.08.2023 இல் இருந்து 20.08.2023 வரையான காலம் டெங்கு கட்டுப்படுத்தல் வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தவகையில் இந்த வேலை திட்டமானது பின்வரும் கால அட்டவணையின் படி முன்னெடுக்கப்படவுள்ளது.


14.08.2023, 15.08.2023, 16.08.2023 ஆகிய திகதிகளில் வீடுகள், அரச/தனியார் திணைக்களங்கள். நிறுவனங்கள், வணக்கஸ்தலங்கள், கட்டட நிர்மாண பகுதிகள், உயர்கல்வி நிறுவனங்கள் என்பவற்றில் டெங்கு கட்டுப்பாட்டு சிரமதான பணிகளை முன்னெடுத்தல்.

17.08.2023 அன்று பாடசாலைகள், முன்பள்ளிகள், தனியார் கல்வி நிலையங்கள், சகலவிதமான உணவு கையாளும் நிறுவனங்கள், தங்கு விடுதிகள் கடற்கரைகள் என்பவற்றில் டெங்கு கட்டுப்பாட்டு பணிகள் முன்னெடுத்தல்.

18.08.2023, 19.08.2023 ஆகிய திகதிகளில் அரச/தனியார் வைத்தியசாலைகள், வடிகால்கள், மயானங்கள், பொது இடங்கள், மைதானங்கள், பராமரிப்பற்ற காணிகள், வீடுகள் என்பவற்றில் சிரமதான பணிகளை முன்னெடுத்தல்.

20.08.2023 அன்று பிரதேசசெயலகமட்டத்தில்டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை சிறப்பாக முன்னெடுத்த செயற்பாட்டாளர்களையும் கிராமங்களையும் கௌரவித்தல்.

மேலே குறிப்பிட்டமைக்கு அமைவாக டெங்கு கட்டுப்பாடு செயற்பாடுகள்முன்னெடுக்கப்படும் என்பதுடன், வாரத்தில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை சிறப்பாகவும் நினைத்திரனாகவும் முன்னெடுப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.


டெங்குக் கட்டுப்பாட்டு வாரம் 14.08.2023 – 20.08.2023

| | |
|---|---|
| 14.08.2023<br>15.08.2023<br>16.08.2023 | [illegible] |
| 17.08.2023 | [illegible] |
| 18.08.2023<br>19.08.2023 | [illegible] |
| 20.08.2023 | [illegible] |

# யாழ்ப்பாணத்தில் அடி காயங்களுடன் ஆணொருவரின் சடலம் மீட்பு!



யாழ்ப்பாணம் - கல்வியங்காடு ஜி.பி.எஸ் விளையாட்டரங்கு வீதிக்கு அருகில் உள்ள வீடொன்றில் 52வயதான குடும்பஸ்தர் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் சனிக்கிழமை (12) காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, உயிரிழந்த குடும்பஸ்தரின் மனைவி திருமணச் சடங்கிற்கு சென்ற வேளை குடும்பஸ்தர் தனிமையாக வீட்டில் இருந்த நிலையில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உறவினரொருவர் இவர்களது வீட்டிற்கு சென்று பார்த்தபோது குடும்பஸ்தர் உயிரிழந்த நிலையில் காணப்பட்டதை அவதானித்த உறவினர் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவித்ததை தொடர்ந்து சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை உயிரிழந்தவரின் சடலத்தில் அடிகாயங்கள் காணப்படுவதாகவும் இதனால் குறித்த குடும்பஸ்தர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவத்தில் 52வயதான கணபதிப்பிள்ளை மகேந்திரன் என்ற குடும்பஸ்தரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

# மலையகத் தமிழர்களின் உரிமைகளை வென்றெடுக்க கைகோர்ப்போம்!

எங்கள் மலையக தமிழ் மக்களின் 200 வருட வரலாற்றினை நினைவு கூரும் வகையில் இந்த வருடம் முழுவதும் பல்வேறு தரப்பினரால் பல நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு வருகிறது. 200 வருட நிகழ்வுகள் வெறுமனே நிகழ்வுகளாக முடிந்துவிடாமல் மலையக தமிழ் மக்களுக்கான ஒரு நிரந்தர தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டியதன் அவசியத்தினை அனைத்துத் தரப்பினரிடமும் வலியுறுத்துகிறோம் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அவர்கள் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் உள்ளதாவது,

1980களின் பின் அவர்களுக்கான குடியுரிமை படிப்படியாக வழங்கப்பட்டதன் பின்னரே இச்சமூகத்தில் சில மாற்றங்கள் உருவாகின. தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகள் எத்தனையோ வறுமை, சமூக நெருக்கடி, துன்பங்களின் மத்தியிலும் கல்வியில் முன்னிலை வகிக்கின்றனர். அதற்கு சான்றாக எமது பல்கலைக்கழகத்தில் மலையக தமிழ் மாணவர்கள் அனைத்துத் துறைகளிலும் மிளிர்ந்து வருகின்றார்கள். படிப்படியாக அவர்கள் தமது சுய முயற்சியிலேயே முன்னேறி வந்துள்ளார்கள்.

ஆனால் தேசிய ரீதியான வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது இன்றுவரை அவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. கடந்த 200 வருடத்தில் அடைந்தவை சில, அடைய வேண்டியவை பல என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

இருப்பினும் 200 வருட வரலாற்றை நினைவு கூரும் இந்த வருடத்தில் எம் மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினைகள் சர்வதேசத்திலும் அரசியல் மற்றும் சிவில் சமூக மட்டத்திலும் பேசுபொருளாக உள்ளது. அந்த முன்னேற்றத்தை மலையக தமிழ் மக்களின் நிரந்தர தீர்வுக்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இலங்கையில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை பற்றிப் பேசும்போது எங்கள் மலையகத் தமிழ் மக்களின் தேசிய அடையாள மற்றும் சுயநிர்ணயம் பற்றியும் கூடுதல் கவனம் செலுத்தி அழுத்தம் கொடுக்க வேண்டிய பொறுப்பு எம்மிடம் உள்ளது.

எங்கள் மலையகத் தமிழ் மக்களின் மீது அரசால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள கட்டமைக்கப்பட்ட ஒடுக்கு முறைக்கு எதிராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களாகிய நாங்கள் என்றும் தொடர்ந்து போராடுவோம். எங்கள் தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுக்கும் வரை நாம் தோளோடு தோள் நின்று களமாடுவோம் - என்றுள்ளது.


பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
University Students' Union
University of Jaffna

2023.08.12

மலையகத் தமிழர்களின் உரிமைகளை வென்றெடுக்க கைகோர்ப்போம்!

A. VIJAYAKUMAR
President
University Students' Union
University of Jaffna

J. ARUN

# மோட்டார் சைக்கிள் மோதி வயோதிபப் பெண் உயிரிழப்பு – யாழ்ப்பாணத்தில் துயரம்!

வீதியை கடந்தவேளை மோட்டார் சைக்கிள் மோதி வயோதிபப் பெண் ஒருவர் நேற்று பிற்பகல் உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் வியாழக்கிழமை (10) முன்தினம் கோப்பாய் தெற்கு பகுதியில் உள்ள தனது வீட்டுக்கு செல்வதற்காக, பருத்தித்துறை வீதியை குறுக்கே கடந்தார். இதன்போது அவ்வழியே வந்த மோட்டார் சைக்கிள் அவர்மீது மோதி விபத்து சம்பவித்துள்ளது.

இந்நிலையில் அவர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் பிற்பகல் உயிரிழந்தார்.

கோப்பாய் தெற்கு பகுதியைச் சேர்ந்த நாகராஜா இராஜபூவதி (வயது 68) என்ற வயோதிப பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார்.

# யாழ்ப்பாணம் தீவக வெண்புறவி குடியேற்றத் திட்டத்தில் பாலியல் தொந்தரவு – ஒருவர் கைது!

அல்லைப்பிட்டி பகுதியில் சிறுமிகளை பாலியல் தொந்தரவு மற்றும் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய 25 வயதான சந்தேகநபரை ஊர்காவற்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, அண்மையில் யாழ்ப்பாணம் போதனாவில் அதிகளவு மாத்திரைகளை உள்ளெடுத்து அல்லைப்பிட்டியினை சேர்ந்த 11 வயது சிறுமி தற்கொலைக்கு முயன்று காப்பாற்றப்பட்டார்.

இந்நிலையில் அவருக்கு வழங்கப்பட்ட உளவள சிகிச்சையின் பொழுது அல்லைப்பிட்டி வெண்புறவி நகர்பகுதியினை சேர்ந்த 25 வயதான இளைஞர் தொடர்பில் சிறுமி தகவல் வெளியிட்டார்.

தான் உட்பட்ட ஐந்து சிறுமிகளுக்கு தொலைபேசி மூலம் தகாத குறுஞ்செய்திகளை அனுப்பிய நிலையில் பாலியல் தொந்தரவுக்குள்ளாக்கிய நிலையில் தான் தற்கொலைக்கு முயன்றதாக வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

இந்நிலையில் வைத்தியசாலை மூலம் ஊர்காவற்றை பொலிசாருக்கு தகவல் வழங்கபட்ட நிலையில் ஊர்காவற்றை பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

இதனையடுத்து குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்ட சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டாவது சிறுமியினை சட்ட வைத்திய அதிகாரி முன் பொலிசார் முற்படுத்தினர்.

குறித்த சிறுமி வழங்கிய வாக்குமூலத்திற்கு அமைவாக பாலியல் தொந்தரவை மேற்கொண்ட சந்தேகநபரை பொலிசார் கைது செய்தனர்.

மேலும் இன்னொரு சிறுமியும் குறித்த சந்தேகநபரால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகிய நிலையில் பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கைச் செய்திகள்
Sri Lanka News

# வரலாற்றுச் சாதனை படைத்த மடு கல்வி வலயத்திற்குட்பட்ட இலுப்பைக்கடவை தமிழ் மகா வித்தியாலய பாடசாலை வீரர்களை கௌரவிப்பு

- மன்னார் நிருபர் (10-08-2023)

வடமாகான பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட 18 வயதுப் பிரிவு ஆண்களுக்கிடையிலான உதைபந்தாட்ட தொடரில் வரலாற்றுச் சாதனை படைத்த மன்னார் மாவட்டம் மடு கல்வி வலயத்திற்குட்பட்ட இலுப்பைக்கடவை தமிழ் மகா வித்தியாலய பாடசாலை வீரர்களை கௌரவித்து வரவேற்கும் நிகழ்வு (9) வியாழக்கிழமை மாலை பாடசாலையில் இடம் பெற்றது.

பாடசாலையின் அதிபர் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் மடு வலயக்கல்விப்பணிப்பாளர் ஏ.கே. வொலன்ரைன் கலந்து கொண்டார்.

சாதனை வீரர்கள் பவனியாக பாடசாலை வரை அழைத்து வரப்பட்டு வாத்திய இசையுடன் பாடசாலை மண்டபம் நோக்கி அழைத்து வரப்பட்டனர்.

இதன் போது பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், வலயக்கல்வி பணிமனை அதிகாரிகள், பெற்றோர்,பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது சாதனை படைத்த மாணவர்கள் விருந்தினர்களினால் பதக்கம் அணிவிக்கப்பட்டு, பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப் பட்டனர்.







வடமாகாண பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட 18 வயதுப்பிரிவு ஆண்களுக்கிடையிலான உதைபந்தாட்ட போட்டி யாழ் ஹாட்லி கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வந்த நிலையில் புதன்கிழமை (9) முடிவுக்கு வந்துள்ளது.

வடமாகாண கல்வி திணைக்களம் ஏற்பாடு செய்திருந்த குறித்த உதைபந்தாட்ட போட்டி கடந்த 3 நாட்கள் இடம் பெற்று வந்தது.

குறித்த போட்டியில் வடமாகாணத்தில் உள்ள பாடசாலைகளைச் சேர்ந்த 39 பாடசாலை அணிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இறுதிச் சுற்றில் மன்னார் கல்வி வலயத்தை சேர்ந்த மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை அணியும், மடு கல்வி வலயத்தை சேர்ந்த இலுப்பைக்கடவை தமிழ் மகா வித்தியாலய அணியும் மோதிக் கொண்டது.

இதன் போது மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அணியினை எதிர்கொண்டிருந்த இலுப்பைக்கடவை தமிழ் மகா வித்தியாலய அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று தேசிய மட்ட போட்டியில் விளையாடுவதற்குரிய வாய்ப்பை பெற்றுள்ளது.

25 வருடங்களின் பின்னர் மன்னார் மாவட்டத்தின் மடு வலயத்தில் உள்ள இலுப்பைக் கடவை பாடசாலையின் 18 வயதுப்பிரிவு ஆண்கள் முதன் முறையாக உதைப்பந்தாட்டத்தில் வரலாற்றுச் சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் சின்ன பண்டிவிரிச்சான் அ.த.க பாடசாலை மாணவ மாணவிகளுக்கு காலணிகள் வழங்கி வைப்பு




(10-08-2023)

மன் சின்ன பண்டிவிரிச்சான் அ.த.க பாடசாலையில் கல்வி கற்கும் வறுமை கோட்டிற்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட மாணவ மாணவிகளுக்கு காலணிகள் வழங்கும் நிகழ்வானது பாடசாலையின் அதிபர் லதிஸ்லாஸ் அமலானந்குமார் அவர்களினதும் பாடசாலை ஆசிரியர்களின் நெறிப்படுத்தலில் புதன்கிழமை (9) நடைபெற்றது.

இன் நிகழ்வில் மன் புனித ஆனாள் கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி அமைப்பின் நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் அங்கத்தவர்கள் பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்ததாக புனித ஆனாள் கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி குழு வங்காலை சுவிட்சர்லாந்து இணைப்பாளர் திரு. சுனேஸ் சோசை தெரிவித்தார்.

மாணவர்களின் காலணிகளுக்கான செலவுத் தொகையை புலம்பெயர் உறவுகளும் வங்காலை ஆனாள் கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி அமைப்பும் வழங்கியிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.





# 5 நாட்கள் தொடர் காய்ச்சல் – யாழ்ப்பாணத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு!

தொடர் காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

கோண்டாவில் மேற்கு பகுதியைச் சேர்ந்த நாராயணசமி கோவத்தனன் (வயது 42) என்ற 3 பிள்ளைகளின் தந்தை கடந்த 5 நாட்களாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அவர் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். சிகிச்சை பலனளிக்காத காரணத்தால் வெள்ளிக்கிழமை (11) யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இவ்வாறு அனுமதிக்கப்பட்டு சிலமணி நேரத்தில் அவர் உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார்.

# மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 60 மாணவர்களுக்கு கல்விக் கொடுப்பனவு




- மன்னார் நிருபர் (12-08-2023)

மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கம் கத்தோலிக்க ஒன்றியத்தின் நிதி அனுசரணையில் மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வறிய மாணவர்களுக்கு கல்விக் கொடுப்பனவு மற்றும் உலர் உணவுப் பொதி வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை (12-08-2023) காலை 9.30 மணியளவில் மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இடம்பெற்றது.






மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கத்தின் தலைவர் அருட்தந்தை தி. நவரெட்ணம் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் அதிபர் அருட்சகோதரர் எஸ். சந்தியோகு கலந்து கொண்டார்.

இதன் போது மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 60 மாணவ மாணவிகளுக்கு கல்விக் கொடுப்பனவு மற்றும் உலர் உணவுப் பொதி வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கத்தின் செயலாளர் எஸ்.ஏ. ராதா பெர்னாண்டோ உட்பட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வாகன விபத்தில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவன் பலி!


தென்மராட்சி சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஏ-9 பிரதான வீதி, கைதடி நுணாவில் வைரவ கோவிலடியில் இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவன் உயிரிழந்துள்ளார்.

முற்பகல் 11 மணியளவில் இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது. மாட்டு வண்டி சவாரி போட்டிக்காக வண்டில் மற்றும் மாடுகளை ஏற்றிச்சென்ற கனரக லொறியுடன் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியதிலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்தில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி கற்கும் கண்டுவில் வீதி சாவகச்சேரியை சேர்ந்த 19 வயதான சிவபாலன் பிரவீன் என்ற மாணவனே விபத்து சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். உயிரிழந்தவரின் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# தமிழ் மக்களின் கவனம் திட்டமிட்டுக் கலைக்கப்படுகிறது

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



அண்மை மாதங்களாக கிழமைக்கு ஒன்று அல்லது சிலசமயம் ஒவ்வொரு நாளும் ஒன்று என்று ஏதாவது ஒரு விவகாரம் தமிழ் மக்களின் கவனத்தைக் கவர்கிறது. எங்காவது ஒரு புதிய விகாரை கட்டப்படுகிறது, அல்லது எங்காவது ஒரு தொல்லியல் சின்னம் அபகரிக்கப்படுகிறது, அல்லது பறிக்கப்படுகின்றது, அல்லது யாராவது ஒரு சிங்கள அரசியல்வாதி தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துக்களை வெளிப்படையாகப் பேசுகிறார்.... இப்படியாக அடிக்கடி புதிது புதிதாக விவகாரங்கள் மேலெழுகின்றன. தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் கவனங்கள் புதிய விடயங்களின் மீது குவிக்கப்படுகின்றன.

இவ்வாறு தமிழ்ச் சமூகத்தின் கவனத்தை அடுத்தடுத்து புதிய விடயங்களின் மீது குவிய வைப்பதன் மூலம் திட்டமிட்டு தமிழ் போராட்ட சக்தி சிதறடிக்கப்படுகின்றதா? அரசாங்கம் திட்டமிட்டு "ட்ரெண்ட்களை செற்" பண்ணுகின்றதா?

சரத் வீரசேகர சொல்லுகிறார்...ராவணன் ஒரு தமிழ் அரசன் அல்லவென்று மேர்வின் டி சில்வா சொல்கிறார்...விகாரைகள் கட்டப்படுவதை எதிர்த்தால் தமிழ் மக்களின் தலைகளை வெட்டிக் கொண்டு வருவேன் என்று. நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவற்றிற்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இவையெல்லாம் மினக்கட்டுப் பதில் கூற வேண்டிய விடையங்கள் அல்ல. அவர்கள் திட்டமிட்டு தமிழ் மக்களின் கவனத்தை சிதறடிக்கிறார்கள். அவர்கள் திட்டமிட்டு தமிழ் மக்களை ஆத்திரப்படுத்துகிறார்கள். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசியல் செயற்பாட்டாளர்களும் கட்சிகளும் இது விடயத்தில் அரசாங்கம் விரும்புவதுபோல அல்லது சிங்கள பௌத்த தீவிரவாதிகள் விரும்புவது போல அவர்கள் இழுக்கும் திசைக்கெல்லாம் எடுபடக்கூடாது. நிதானமாக விடயங்களை அணுக வேண்டும். அரசாங்கம் அல்லது சிங்களபௌத்த தேசியசியவாதிகள் திட்டமிட்டு ட்ரெண்ட்களை செட் பண்ணுகின்றார்கள். அந்த ட்ரெண்டின் பின் தமிழ் மக்கள் அலையத் தேவையில்லை. அலையவும் கூடாது.

இந்த விடயத்தில் ஒரு மையத்திலிருந்து முடிவெடுக்கும் மக்களாக, ஒரு மையத்திலிருந்து விவகாரங்களை விளங்கிக் கொள்ளும் மக்களாக, ஒரு மையத்திலிருந்து எதையும் அணுகும் மக்களாக தமிழ் மக்கள் திரள வேண்டும். இல்லையென்றால் ஏற்கனவே சிதறிப் போயிருக்கும் தமிழ்மக்களின் கவனத்தை மேலும் சிதறடிப்பதன்மூலம் அரசாங்கம் தான் விரும்பியதைச் சாதித்து விடும்.

இங்கே நான் ஐக்கியத்தைப் பற்றி கதைக்க வரவில்லை. ஒருமுறை நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் என்னிடம் சொன்னார்... சாதி ஒடுக்குமுறைகள் போன்ற விவகாரங்களில் நீங்கள் சுட்டிக்காட்டும் பிரச்சினைகளை நாங்கள் உடனடியாக தீர்த்து வைப்போம். ஆனால் ஐக்கியம் என்ற ஒரு விடயத்தை மட்டும் எங்களிடம் தயவு செய்து கேட்க வேண்டாம்... என்று.

இங்கே பிரச்சனை ஐக்கியம் அல்ல. ஐக்கியத்தை ஏன் நாங்கள் கதைக்க வேண்டியிருக்கிறது? ஏனென்றால் தமிழ் மக்கள் ஒரு பெரும் திரளாக: தேசமாக விவகாரங்களை எதிர்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் தான். நடைமுறையில் அவ்வாறு தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டும் பொழுது புனிதர்களையும் விசுவாசிகளையும் உண்மையானவர்களையும் மட்டும் வைத்து ஒரு தேசிய இயக்கத்தை கட்டி எழுப்புவது அம்புலி மாமா கதை தான். ஏனென்றால் ஒரு மக்கள் கூட்டம் எனப்படுவது பல்வேறு அடுக்குகளை கொண்டிருக்கும். பல்வேறு அபிலாசைகளை கொண்டிருக்கும். பல்வேறு நோக்கு நிலைகளைக் கொண்டிருக்கும். ஒரு மக்கள் கூட்டத்தை தட்டையாக, ஒற்றைப் பரிமாணத்தில் விளங்கிக் கொள்ள முடியாது. அதற்குள் பல்பரிமாணம் இருக்கும் என்பதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஒரு மக்கள் கூட்டத்துக்குள் நல்லவர்களும் இருப்பார்கள் கெட்டவர்களும் இருப்பார்கள். ஒரு நபர் ஒரே நேரத்தில் தேசியவாதி போலவும் இருப்பார் அதே சமயத்தில் ஆண் ஆதிக்கவாதியாகவும் இருப்பார். ஒரு நபர் ஒரே நேரத்தில் சாதிவாதியாகவும் இருப்பார் தமிழ் தேசியவாதியா-கவும் தோற்றம் காட்டுவார். ஒரு நபர் ஒரே நேரத்தில் மதவாதியாகவும் இருப்பார் தமிழ் தேசியவாதியாகவும் தோற்றம் காட்டுவார். தேசியவாதம் எனப்படுவது பல வகைகளில் மீது ஒரு மக்கள் திரளைக் கட்டியெழுப்புவது என்ற கோட்பாட்டு விளக்கத்தின் அடிப்படையில் சிந்தித்தால் மதவாதி, சாதிவாதி, பிரதேசவாதி, ஆணாதிக்கவாதி போன்றவர்கள் தேசியவாதிகளாக இருக்கமுடியாது. ஆனால் தமிழ்க் கட்சிகளில் காணப்படும் முக்கியஸ்தர்களில் எத்தனை பேர் அவ்வாறு முழுமையாக தேசிய பண்பு மிக்கவர்களாக இருக்கிறார்கள்? ஏன் ஆயுதப் போராட்டத்திலேயே அந்த பிரச்சினை இருந்தது? ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட இயக்கங்கள் மத்தியில் காணப்பட்ட போராளிகள் எத்தனை பேர் அவ்வாறு தேசிய பண்பு மிக்கவர்களாக காணப்பட்டார்கள்? இது ஒரு அடிப்படைப் பிரச்சினை.

ஒரு மக்கள் இயக்கம் என்று வரும்பொழுது ஒரு பெரிய கட்சி என்று வரும் பொழுது அதற்குள் நல்லதும் இருக்கும் கெட்டதும் இருக்கும். ஒரு மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய இயக்கம் எனப்படுவது அந்த மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய நல்லதையும் கெட்டதையும் பிரதிநிதித்துவப்படுத்தும் என்பது யதார்த்தமாகும். ஒரு பெரிய மக்கள் இயக்கம் எனப்படுவது அல்லது ஒரு பெரிய தேசிய இயக்கம் எனப்படுவது முழுக்க முழுக்க கொள்கைவாதிகளையும் தூய்மைவாதிகளையும் புனிதர்களையும் மட்டும் வைத்து கட்டியெழுப்பப்படும் ஒன்று அல்ல. யதார்த்தத்தில் அது ஒரு மக்கள் கூட்டத்தில் காணப்படும் எல்லா அடுக்குகளையும் ஏதோ ஒரு மையத்தில் இணைப்பதாகவே காணப்படும். இது தமிழ்த் தேசிய இயக்கங்களுக்கும் பொருந்தும்.

புனிதர்களையும், நல்லவர்களையும், கொள்கைவாதிகளையும், இலட்சியவாதிகளையும் மட்டும் வைத்து ஒரு தேசிய இயக்கத்தை கட்ட முடியாது. ஆனால் குறிப்பிட்ட இயக்கத்தில் அல்லது கட்சியின் மையத்தில் இருப்பவர்கள் அல்லது வழிகாட்டும் பொறுப்புகளில் இருப்பவர்கள் ஒப்பீட்டளவில் அதிகம் தேசிய பண்பு மிக்கவர்களாக இருக்க வேண்டும் என்பது ஒரு கட்டாய நிபந்தனையாகும். ஒரு கட்சியின் அல்லது மக்கள் இயக்கத்தின் முடிவெடுக்கும் பொறுப்புகளில் இருப்பவர்கள் கொள்கைவாதிகளாக இலட்சியவாதிகளாக தேசிய பண்பு ஒப்பிட்டுளவில் அதிகம் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்பது கட்டாயம். ஆனால் அந்த கட்சியின் அல்லது மக்கள் இயக்கத்தின் ஆதரவாளர்கள் எல்லாருமே புனிதர்களாக இருக்க வேண்டும் என்று இல்லை. அப்படி இருக்கவும் மாட்டார்கள். ஒரு சமூகம் எனப்படுவது அப்படித்தான் இருக்கும். அதில் பலதும் பத்தும் இருக்கும்.

எனவே ஒரு மக்கள் கூட்டத்தை பேரியக்கமாக கட்டி எழுப்ப முற்படும் ஒரு கட்சி அல்லது மக்கள் அமைப்பு எதுவானாலும் இந்த விடயத்தில் தெளிவாக இருக்க வேண்டும். அந்த அமைப்பின் மையத்தில் இருப்பவர்கள் முடிவெடுக்கும் தகமை உள்ளவர்கள் மட்டும்தான் ஒப்பீட்டளவில் தேசியப் பண்பு அதிகம் கூடியவர்களாக இருக்க வேண்டும். எனையவர்களிடம் அவ்வாறு எதிர்பார்க்க முடியாது. அவர்களிடமிருக்கும் எதிர்த் தேசிய அம்சங்களை களை நீக்கம் செய்ய வேண்டியது அல்லது இருள் நீக்கம் செய்ய வேண்டியது மையக் குழுவின் பொறுப்பு. அல்லது தலைமை தாங்கும் நபர்களின் பொறுப்பு.

கடந்த *14 ஆண்டுகளாக* தமிழ் கட்சிகள் அதனை தமது தொண்டர்கள், ஆதரவாளர்கள் மத்தியில் செய்திருக்கின்றனவா? இல்லையே? ஒரு கட்சியின் உறுப்பினர்கள் அல்லது ஆதரவாளர்கள் அல்லது தொண்டர்களை ஆகக்கூடிய பட்சம் தேசியப் பண்பு மிக்கவர்களாக செதுக்கி எடுக்க வேண்டிய பொறுப்பு அக்கட்சியின் தலைமை பொறுப்பில் இருப்பவர்களுக்கு உரியது. எனவே ஐக்கியத்தை கட்டியெழுப்பும் பொழுது அந்த ஐக்கியத்துக்குள் பலதும் பத்தும் இதுக்கும் என்ற யதார்த்தத்தை முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரு ஐக்கியத்தைக் கட்டியெழுப்பிய பின் அந்த ஐக்கியத்திற்கு தலைமை தாங்கும் தரப்புகள் அந்த ஐக்கியத்தை எப்படிக் கொள்கை அடிப்படையில் பலப்படுத்துவது இறுக்கமாக்குவது என்று சிந்திக்கலாம். மாறாக அவர்கள் கள்ளர்கள், வழிந்தோடிகள், ஒத்தோடிகள், இரட்டைநாக்கர்கள், கைக்கூலிகள்...அவர்ளை வைத்துக்கொண்டு ஐக்கியத்தை கட்டியெழுப்ப முடியாது என்று சொன்னால், புனிதர்களையும் நீதிமான்களையும் மட்டும் வைத்துக்கொண்டு ஐக்கியத்தை கட்டியெழுப்பலாம் என்றால், தமிழ்மக்கள் என்றைக்குமே ஒரு பெருந்திரளாக வர முடியாது.

ஒரு பெருந்திரளைக் கட்டியெழுப்புவது அல்லது ஒரு பேரியக்கத்தை கட்டியெழுப்புவது அல்லது ஒப்பீட்டளவில் பெரிய ஐக்கியத்தை கட்டியெழுப்புவது அதாவது தமிழ்மக்களை ஆகக்கூடியபட்சம் ஒரு பெருந்திரளாகக் கட்டியெழுப்புவது என்பது கொள்கையின் அடிப்படையில் அல்லது, புனிதமான, விட்டுக்கொடுக்கப்பட்ட அளவுகோள்களின் அடிப்படையில் என்றைக்குமே சாத்தியப்படப் போவதில்லை. தமிழ்மக்கள் மத்தியில் மட்டுமல்ல இந்தப் பூமியில் எந்த ஒரு மக்கள் கூட்டத்தையும் அவ்வாறு புனிதமான அளவுகோல்களின் அடிப்படையில் நிறுவன மயப்படுத்த முடியாது.

இது மக்கள் இயக்கங்களுக்கு மட்டுமல்ல மத நிறுவனங்களுக்கும் பொருந்தும். உலகில் உள்ள எல்லா மத நிறுவனங்களிலும் அதன் மூலப் புத்தகங்களில் உள்ள புனிதமான அம்சங்கள் பேணப்படுகின்றனவா? மதங்களில் மட்டுமல்ல மதங்களை நிராகரித்த இடதுசாரி இயக்கங்கள் மத்தியிலும் அதே பிரச்சினை உண்டு.

மக்களை நிறுவனமயப்படுத்தும் பொழுது அந்த மக்கள் மத்தியில் இருக்கும் பலங்களை மட்டுமல்ல, பலவீனங்களையும் சேர்த்து நிறுவனம் பயன்படுத்தாமல் இருப்பது என்பது மிகவும் சவால் மிகுந்தது. ஒரு மக்கள் கூட்டத்தின் மத்தியில் இருக்கும் பலவீனங்களையும் ஏற்றுக்கொண்டு அவர்களை நிறுவனமயப்படுத்திய பின் தலைமை தாங்கும் பொறுப்பில் இருப்பவர்கள் அந்த பலவீனங்களை படிப்படியாக அகற்ற வேண்டும். அதுதான் நடைமுறைச் சாத்தியமானது.

தமிழ்மக்கள் மத்தியில் இதுவரையிலும் தோன்றிய எல்லா ஐக்கியங்களும் எல்லா சிவில் கட்டமைப்புகளும் மக்கள் அமைப்புகளும் அவ்வாறு பலங்களையும், பலவீனங்களையும் வைத்துக்கொண்டுதான் கட்டியெழுப்பப்பட்டன. எதிரிக்கு எதிரான கோபந்தான் கடந்த பல தசாப்தங்களாக தமிழ்மக்களை ஒப்பீட்டளவில் பெருந்திரளாகக் கூட்டிக்கட்டி வைத்திருக்கிறது. அதாவது இன எதிர்ப்புணர்வு அல்லது இனமான உணர்வு போன்றவைதான் தமிழ்மக்களைப் பெருமளவுக்கு ஒரு தேசமாகத் திரட்டி வைத்திருக்கின்றன. மாறாக தேசியவாதம் தொடர்பான அறிவுபூர்வமான விஞ்ஞானபூர்வமான கொள்கைகளை விளங்கி தமிழ் மக்கள் ஒரு பெரும் திரளாக மேல்லெழுந்தார்கள் என்பது உண்மையல்ல. உலகம் முழுவதிலும் உள்ள பெரும்பாலான எல்லாத் தேசிய இன விடுதலைப் போராட்டங்களுக்கும் இது பொருந்தும். கருத்து மக்களை திரட்டுவதை விடவும் எதிரிக்கு எதிரான கூட்டுணர்ச்சி ஒரு மக்கள் கூட்டத்தை இலகுவாகத் திரட்டி விடும்.

எனவே புனிதமான கூட்டு என்று எதுவுமே இந்த பூமியில் கிடையாது. முழுக்க முழுக்க கொள்கை ரீதியிலான கூட்டு என்பதும் இந்த பூமியில் கிடையாது. தூய தங்கத்தை வைத்து நகை செய்ய முடியாது.தங்கத்தை ஆபரணமாக்குவதென்றால் அதில் செப்பைக் கலக்கவேண்டும். நாங்கள் அணியும் எல்லாத் தங்க நகைகளிலும் கலப்பு உண்டு என்ற நடைமுறையை ஏற்றுக் கொள்ள வேண்டும். இது அரசியலுக்கும் பொருந்தும். மக்கள் இயக்கங்களுக்கும் பொருந்தும். செயற்பாட்டு இயக்கங்களுக்கும் பொருந்தும். தலைமைகள் உறுதியாக இருந்தால் சரி. ஆயிரம் வெள்ளாடுகளுக்கு ஒரு சிங்கம் தலைமை தாங்கலாம். ஆனால் ஆயிரம் சிங்கங்களுக்கு ஒரு வெள்ளாடு தலைமை தாங்க முடியாது. சிங்கமாக இருப்பதா வெள்ளாடுகளாக இருப்பதா என்பதனை தமிழ்த் தலைமைகள் தீர்மானிக்க வேண்டும். இல்லையென்றால் புதிய தலைமைகள் மேலெழ வேண்டும்.

ஏனெனில் தமிழ் மக்களின் கவனக்குவிப்பு திட்டமிட்டுச் சிதறடிக்கப்படுகிறது. தமிழ் மக்களால் ஒருமித்துத் போராட முடியவில்லை. அது அதன் எதிர்மறை விளைவாக ரணில் விக்கிரமசிங்கவின் சிங்களபௌத்த வாக்கு வங்கியைத்தான் வளர்த்து விடுகிறது. தமிழ் மக்கள் சிதறி நின்று போராடினால் அது எதிரிக்கு சேவகம் செய்யும். திரண்டு போராடினால் அங்கே அதிசயங்களும் அற்புதங்களும் நிகழும்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணம் தலைமை பொலிஸ் பரிசோதகருக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு விடுக்கப்பட்ட அழைப்பு

பு. கஜிந்தன்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அழைப்பு விடுக்கப்பட்டும் விசாரணைக்கு வருகை தராத யாழ்ப்பாணம் தலைமை பொலிஸ் பரிசோதகரை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு மூன்றாவது தடவை அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் தெரிய வருவதாவது, முறைப்பாட்டாளர், தன்னை தலைமை பொலிஸ் பரிசோதகர் அச்சுறுத்தியதாக யாழ்ப்மாணம் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்நிலையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் தலைமை பொலிஸ் பரிசோதகருக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையிலும் ஆணைக்குழுவில் முன்னிலையாகவில்லை.

இந்நிலையில் மூன்றாவது அழைப்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரின் கையொப்பத்துடன் தலைமை பொலிஸ் பரிசோதகருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த அழைப்புக் கடிதத்தில் "மனித உரிமைக் ஆணைக்குழு 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டத்தின் முறைப்பாடானது விசாரணை செய்யப்படவேண்டியுள்ளது. 2023.08.17 திகதி மு.ப. 11.30 மணிக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு - யாழ்ப்பாண குரியாலயத்திற்கு (இல013ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்) சகல பொருத்தமான ஆணங்களுடன் ஆணைக்குழு முன்னிலையில் சமூகமளிக்க வேண்டுமென்பது அறிவிக்கப்படுகிறது.

ஆணைக்குழுவின் முன்நிலையில் சமூகமளிக்கத் தவறும் பட்சத்தில் அது ஆணைக்குழுவினை அவமதிக்கு அல்லது அகௌரப்படுத்தியதாகக் கருதப்படும்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரின் கையொப்பத்தின் கீழ் வழங்கப்படுகின்றது என குறித்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# மோட்டார் சைக்கிளால் விழுந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு – யாழ்ப்பாணத்தில் சம்பவம்!

அபுபக்கர் வீதி, யாழ்ப்பாணம் பகுதியை சேர்ந்த கனகசபை பால்ராசா என்பவர் மோட்டார் சைக்கிளில் இருந்து விழுந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 10ஆம் திகதி இரவு வீட்டிற்கு அருகேயுள்ள வீதியில் பயணம் செய்யும்போது கீழே விழுந்துள்ளார்.

இந்நிலையில் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதித்தவேளை அவர் சிகிச்சை பலனின்றி வெள்ளிக்கிழமை (11-08-2023) காலை உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார்.



# தமிழ் மொழி யாப்பிலக்கணத்துடன் தனித்து இயங்கக்கூடியது – துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா புகழாரம்

ஆதியும் அந்தமும் இல்லா தமிழ் மொழி யாப்பிலக்கணத்துடன் தனித்தே இயங்கக்கூடிய மொழி என யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறி சற்குணராஜா தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் ஆரம்பமான நான்காவது தமிழியல் ஆய்வு மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்காலத்தில் விஞ்ஞானம் பெரு வளர்ச்சி கண்டு கொண்டிருக்கின்ற நிலையில் அதன் பரிணாம வளர்ச்சிக்கு தமிழ்மொழி சாஸ்திரங்கள் வித்திட்டதால் மெய்ப்பொருள் காண்பது அரிது என்றனர்.

அப்படிப்பட்ட தமிழுக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் தமிழ் துறையினர் நான்காவது தமிழியல் ஆய்வு மாநாடு என்னும் பெயரில் ஊர் கூடிய தேர் இழுத்துள்ளார்கள்.

இந்த மாநாட்டிலே தமிழை சிறப்பிக்க வேண்டும் தமிழை வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்துக்காக அரிய பல ஆய்வுகளை பல வருடங்களாக பேராசிரியர்கள் தொகுத்து சமர்ப்பித்துள்ளனர்.

எமக்கு காரைக்கால் அம்மையார், ஆண்டாள், ஔவையார் எப்படி இருந்தார்கள் தமிழுக்கு என்ன செய்தார்கள் என்பது தொடர்பில் விரிவாக தமது ஆய்வுகளில் கூறியுள்ளனர்.

இரு வருடங்களாக யாழ்பபாண அன்னையை சிறப்பிப்பதற்காக யாழ்பபாண மாநகர சபை முத்தமிழ் விழாவை எடுத்தது யாழ்பபாண அன்னைக்குப் பெருமை சேர்த்தது.

தமிழ் என்பது கங்கை ஊற்றெடுத்து பாய்வது போன்றது காங்கை நீரை கைகளால் எடுத்து மேலே எறிவார்கள் அதேபோல தமிழ் அனங்கில் பிரபாகம் எடுத்து வந்தது தமிழ்.

பேராசிரியர் சிறிறஞ்சன் 11 வருட முயற்சியின் பலனாக தமிழ் அகராதியை நிறைவு செய்து முடித்துள்ளார் அவருக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

தண்ணீர் ஆவியாகி பருவ மழையின் போது மலை நீராக இறங்குகிறது அவ்வாறே தமிழ் இறைனால் திருநிலை படுத்தப்பட்டு அன்மைய கோசம், பிரணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞான கோசம் என தமிழ் பெருக்கடுத்துள்ளது.

இன் நிலையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பண்டித வகுப்புகளை (சியோடியல்) முறையில் கந்தையா காத்திகேசுவின் நிதி அனுசரணையுடன் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆகவே ஆதியும் அந்தமும் இல்லாத தமிழை போற்றிப் பாதுகாப்பதற்கான அனைத்து முயற்சிகளிலும் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஈடுபட்டு வருவதுடன் அதற்காக எதிர்கால சாந்ததியினர் தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.



# சிறகுகள் இலவச கல்வி நிலைய மாணவர்களுக்கு மதிய போசனம் வழங்கல்!




அமரர் நவரட்ணம் லக்ஷ்சுமி அவர்களது ஓராண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி - ஊற்றுப்புலம் பகுதியில் அமைந்துள்ள சிறகுகள் இலவச கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான மதிய போசனம் ஞாயிற்றுக்கிழமை (13-08-2023) வழங்கி வைக்கப்பட்டது.

இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து சென்று அவுஸ்திரே யாவில் வசிக்கும் திரு. சிறிதரன் என்பவர் நேரில் சென்று இந்த மதிய உணவு வழங்கல் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தினார். இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

குறித்த கல்வி நிலையமானது மிகவும் பின்தங்கிய கிராமத்தில் உள்ளது. இந்நிலையில் அங்கு வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட சிறார்களே கல்வி கற்று வருகின்றார்கள். அங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் தன்னார்வ ரீதியில் மாணவர்களுக்கு கல்வியை புகட்டி வருகின்றனர்.

அந்தவகையில் குறித்த கல்வி நிலையத்தில் கல்வி நிலையத்தை பார்வையிட்ட திரு. சிறிதரன் அவர்கள், அந்த கல்வி நிலைய்திற்கு தேவையான அடிப்படை வசதிகளையும் வழங்க முன்வருவதாக கல்வி நிலையத்தினருக்கு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




# ஓவியர் ஆசை இராசையா நினைவாக கலைநிகழ்வுகளும், கண்காட்சியும்

ஓவியர் ஆசை இராசையாவின் 77ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு "பிரம்மம்" என்ற தலைப்பிலான நினைவுகூரல் நிகழ்வு மற்றும் ஓவியக் கண்காட்சி என்பன எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை மறுநாள் 20. ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெறவுள்ளது.

ஓவியர்களையும் ஓவியக் கலையையும் கொண்டாடும் விழாவாக இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக நுண்கலைத்துறைப் பேராசிரியர் தா. சனாதனன் தலைமையில் நடைபெறும் அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு கட்புலக் கலைகள் மற்றும் நிகழ்த்து கலைகள் பல்கலைக்கழகப் பேராசிரியர் சந்திரகுப்த தேனுவர கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

பேராசிரியர் சரத்சந்திரஜீவாவால் வடிவமைக்கப்பட்ட ஓவியர் ஆசை இராசையாவின் உருவச்சிலையும் வைபவரீதியாக கையளிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்படவுள்ளது.

கவிஞர் சோ. பத்மநாதன், விரிவுரையாளர் ஓவியர் பி. பிரசாந், ஆகியோரும் நிகழ்வில் வெவ்வேறு கருப்பொருளில் உரையாற்றவுள்ளனர்.

சிரேஷ்ட விரிவுரையாளர் சி. ரமணராஜா நினைவுப் பேருரையியை ஆற்றவுள்ளார். ஓவியர் ஆசை இராசையாவின் வாழ்க்கையை மையப்படுத்திய நடன ஆற்றுகை ஆசிரியர் எஸ். சிறீகண்ணனின் நெறியாள்கையில் நடைபெறவுள்ளது. அத்துடன், காயத்ரியின் நெறியாள்கையில் அவருடன் இணைந்து ராகவி பங்குபெறும் பரதம் மற்றும் யோகாவின் தெய்வீக இணைப்பு என்ற ஆற்றுகையும் நடைபெறவுள்ளன.

இதனைத் தொடர்ந்து கண்காட்சி நடைபெறும். சித்திர பாடத்தைப் பயிலும் மாணவர்களுக்கு இந்நிகழ்வு பெரிதும் உதவும் வகையில் இந்தக் கண்காட்சி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# உருத்திரபுரம் கூழாவடியில் வன்னி மண் அறக்கட்டளையால் ஞாயிற்றுக்கிழமை சிரமதானம் முன்னெடுக்கப்பட்டுள்ளது

(13-08-2023)







கனடா நாட்டில் இருந்து வருகை தந்த சமூக செயற்பாட்டாளர் அபர்ணா செல்வராசா அவர்களின் எண்ணக்கருவில் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகத்தினரின் ஏற்பாட்டில் இந்த சிரமதான பணி முன்னெடுக்கப்பட்டது.

“பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனையை முற்றாக தவிர்ப்போம்“ என்கின்ற தொனிப் பொருளில் உருத்திரபுரம் கூழாவடி, உழவர் ஒன்றிய விளையாட்டு கழக மைதானம் மற்றும் உருத்திரபுரீஸ்வரர் சிவன் ஆலயம் அதை சூழவுள்ள குளக்கட்டு பகுதிகளில் காணப்படும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் சேகரிப்பட்டதுடன் அதை பிரதேச சபையினரிடம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த சிரமதானத்தில் கனடா நாட்டில் இருந்து வருகை தந்த சமூக செயற்பாட்டாளர் அபர்ணா செல்வராசா, அவரது தந்தை, உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகத்தின் உறுப்பினர்கள்,வீரர்கள், வன்னிமண் அறக்கட்டளை உறுப்பினர்கள் மற்றும் கூழாவடி கடை உரிமையாளர்கள் என பலரும் இந்த பணியில் சிரமதானத்தில் கலந்து சிறப்பித்தனர்.

இந்த முன்னுதாரணமான செயற்பாட்டை பலரும் வாழ்த்தியதுடன் தொடர்ந்தும் இந்த சிரமமான பணி ஒவ்வொரு மாதமும் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

# மத வெறியை விதைப்போர் தோல்வியே காண்பர் — சரத் பொன்சேகாவுக்கு மறவன்புலவு சச்சிதானந்தன் எச்சரிக்கை

வடக்கு மாகாணத்தில் போருக்குப் பின்னரான காலப்பகுதியில் தற்கொலை முயற்சி மற்றும் தற்கொலை என்பன அதிகரித்துச் செல்லும் போக்குத்தான் காணப்படுகின்றது. இதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப் படுகின்றன என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, போருக்குப் பின்னரும் பல்வேறு சமூக நெருக்கடிகளும் பொருளாதார நெருக் கடிகளும் தற்கொலைக்குக் காரணமாக அமைகின்றன.

சுகாதாரத் திணைக்களத்தின் ஊடாக உளவள ஆலோசகர்கள், மருத்துவ நிபுணர்கள் சிகிச்சையைப் பெற வலியுறுத்தவேண்டும். அவ்வாறு பெறமுடியாதவர்கள் அபயம் - 071071 2345 என்ற தொலைபேசி சேவையினூடாகவும் ஆலோசனையைப் பெற்று கொள்ளலாம்.

தற்கொலை செய்து கொள்பவர் அதனைச் சொல்லமாட்டார் . ஆனால், ஏதோ ஒரு வடிவில் அதனை வெளிப்படுத்துவார். நேரடியாக வெளிப்படுத்தாவிட்டாலும் மறைமுகமாக வெளிப்படுத்தியிருப்பார். அதை உணர்ந்து அவர்களுக்கு உளநல ஆலோசனையைப் பெற்றுக் கொடுக்கவேண்டும்.

நண்பர்கள், குடும்பத்தவர்கள் . உறவினர்கள் மூலமே அவர்களை அடையாளம் கண்டு ஏதாவது ஒரு வழியில் சிகிச்சைக்குக் கொண்டு வரவேண்டும் - என்றார்.





# மன்னாரில் கடும் வறட்சி காரணமாக கால்நடைகள் உட்பட விவசாயிகள் பாதிப்பு



மன்னார் நிருபர் (12.08.2023)

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக நிலவி வரும் வறட்சியான காலநிலை காரணமாக மாவட்டத்தில் சிறுபோக செய்கையை மேற்கொண்டுள்ள விவசாயிகள் உட்பட கால்நடை வளர்ப்பாளர்கள் தோட்ட செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆறு மாதங்களாக மழை இன்மையால் மன்னார் மாவட்டத்தில் நீர் நிலைகளில் நீரின் அளவு முழுமையாக குறைவடைந்துள்ளது.

அதே நேரம் சிறிய குளங்கள் கால்வாய்கள் முற்றாக வறண்டு போய் உள்ளது.

குறிப்பாக கடந்த மாதம் மன்னார் மாந்தை பகுதியில் சிறுபோக பயிர் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளின் நெற் செய்கையும் கருகியுள்ளதுடன் கத்தரி, கச்சான் போன்ற தோட்ட செய்கைகளும் முற்றாக பாதிப்படைந்துள்ளது.

அதே நேரம் கால்நடைகளும் விலங்குகளும் குடி நீர் இன்றி இறக்கும் சம்பவங்கள் காணக்கூடியதாக உள்ளது. இன்னும் சில பகுதிகளில் வறட்சி காரணமாக கிணற்று நீரும் வற்றி உள்ளது.

# மாணாக்க உழவர் - 2023 வீட்டுத்தோட்டப் போட்டிக்கான விதைகள் இலவச விநியோகம்



தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் மாணவர்களிடையே வீட்டுத்தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக மாணாக்க உழவர் என்னும் வீட்டுத்தோட்டப் போட்டியை ஆண்டுதோறும் நடாத்தி வருகிறது. நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி, உணவுப்பற்றாக்குறை, நஞ்சற்ற உணவுற்பத்தி, மாணவர்களை மனஅழுத்தங்களில் இருந்து விடுவித்தல் ஆகியவனவற்றை நோக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படும் இப்போட்டி இந்த ஆண்டும் நடைபெறவுள்ளது. இதில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்குத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தற்போது இலவசமாக விதைப்பொதிகளை வழங்கி வருகின்றது.

இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் யாழ்ப்பாணம், அரசடிவீதி, கந்தர்மடத்தில் அமைந்துள்ள தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைமை அலுவலகத்தில் போட்டிக்கான விண்ணப்பப் படிவத்தையும், விதைகளையும் பெற்றுக்கொள்ள முடியும். இம் மாதம் 16, 17, 18 ஆகிய திகதிகளில் தினமும் பிற்பகல் 1.30 மணி முதல் 4.30 மணி வரை பெற்றோர் சகிதம் வந்து மாணவர்கள் இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் தெரிவித்துள்ளது.

போட்டியில் பங்கேற்கும் அனைத்து மாணவர்களுக்கும் மாணாக்க உழவர் சான்றிதழ்களும் சிறப்பாக வீட்டுத்தோட்டச் செய்கையை மேற்கொள்பவர்களுக்குச் சிறப்புப் பரிசுகளும் வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் கைதிக்கு தொலைபேசி வழங்கிய சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவர் கைது




2023.08.13 ம் திகதி அன்று உத்தியோகத்தர் காவல்கோபுர கடமையில் இருக்கும் போது கைதியான கமல் பிரியதர்ஷன என்பவரிடம் கை தொலைபேசி வழங்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இக்கைதி களுத்துறை சிறைச்சாலையில் நன்னடத்தை இல்லாத காரணத்தினால் நன்னடத்தைக்காக யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டவர்.

1g 04mg ஹெரோயின் வழக்கில் 14 வருட தண்டனை கைதியாவர். சிசிடிவி கண்காணிப்பு கேமராக்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு, சிறைச்சாலை அத்தியட்சகர் கே.வி.எ. உதயகுமார அவர்களின் வழிகாட்டலில் 2023.08.15 சிறைச்சாலையில் நடைபெற்ற சோதனையில் தொலைபேசி ஒன்று கைப்பற்றப்பட்டது.

பின்பு நடைபெற்ற விசாரணையின் போது டி.கே. எதிரிசிங்க என்ற உத்தியோகத்தரே தொலைபேசி கொடுத்தார் என கண்டுபிடிக்கப்பட்டு P.N. விமலரத்தன, D.N. ஜெயவர்த்தன, S.I. குணசேகர, T. சதுஷன் ஆகிய உத்தியோகத்தர்களால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

கைது செய்யப்பட்ட உத்தியோகத்தர் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்ற யாழ்ப்பாண மாணவன்!





அகில இலங்கை ரீதியில் UCMAS National championship 2023 போட்டியில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த மாணவன் ஒருவன் முதலிடம் பெற்றுள்ளான்.

(12-08-2023) கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்ற போட்டியில் சுதர்சன் அருணன் என்ற சிறுவனே அகில இலங்கை ரீதியில் முதல் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆரம்ப பாடசாலையில் முதலாம் தரத்தில் கல்வி கற்று வருகின்றார்.

சாதனை புரிந்து, யாழ்ப்பாண மண்ணிற்கும் பாடசாலைக்கும் பெற்றோருக்கும் பெருமை தேடித்தந்த சிறுவனை பலரும் பாராட்டி வருகின்றனர்.

# பாலியல் துன்புறுத்தல்:

## ஆசிரியர்களுக்கு எதிரான நடவடிக்கையை உறுதி செய்ய வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அமைச்சின் செயலர் உத்தரவு

வடக்கு மாகாணத்தில் பாடசாலைப் பிள்ளைகளுடன் முறைகேடுகளாக நடந்த ஆசிரியர்களுக்கு எதிராக நிர்வாக ரீதியான நடவடிக்கை எடுக்கப்படுவதை வலயக் கல்விப் பணிப்பாளர் உறுதிப்படுத்த வேண்டும் - இவ்வாறு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் ஆகியோருடன் சனிக்கிழமை (12) இடம்பெற்ற நீண்ட கலந்துரையாடலிலேயே மேற்படி விடயத்தை அவர் வலியுறுத்திக் கூறியுள்ளதாக அறியமுடிகின்றது.

வடக்கு மாகாணத்திலுள்ள ஆசிரியர் வெற்றிடங்கள் தொடர்பிலும், சில வலயங்களில் மேலதிகமாக உள்ள ஆசிரியர்கள் தொடர்பிலும், ஆசிரியர் வளத்தின் சமமான பங்கீடு தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் மாணவர்கள் காயம்டையும் அளவுக்கு ஆசிரியர்கள் தண்டிப்பது தொடர்பிலும் இங்கு கலந்துரையா டப்பட்டுள்ளது. இவ்வாறானவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை சரியான முறையில் எடுக்கப்படவேண்டும். அத்துடன் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இதனைக் கண்காணிக்கவேண்டும்.

மேலும், தொடர்ச்சியாக இதே செயற்பாட் டில் ஈடுபடுபவர்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தவேண்டும் என்றும் கல்வி அமைச்சின் செயலர் அறிவுறுத்தி யுள்ளாரென அறியமுடிகின்றது.

# கிளிநொச்சியில் கடந்த 3 ஆண்டுகளாக 106 சிறுமிகள் வன்புணர்வு?

## சம்பவங்களின் மருத்துவ அறிக்கைகள் கிடைக்கப்பெறாமையால் தண்டனை வழங்க முடியாத நிலை!

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளாக சிறுமிகள் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்ட 106 சம்பவங்களின் மருத்துவ அறிக்கைகள் கிடைக்கப்பெறாமையால், அது தொடர்பில் வழக்குத் தொடர்ந்து குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக்கொடுக்க முடியாத நிலைமை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மற்றும் சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டம் என்பனவற்றில் இந்த விடயம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மாத்திரம் கடந்த 3 ஆண்டுகளாக சிறுமிகள் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்ட 106 சம்பவங்கள் தொடர்பில் சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கை வழங்கப்படவில்லை. சட்ட மருத்துவ அதிகாரிகள் மாற்றலாகிச் சென்றமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் அந்த அறிக்கைகள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

இதன் காரணமாக சந்தேகநபர்களுக்கு எதிராக வழக்கை தொடர முடியாத நிலைமை இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தியிடம் ஊடகவியலாளர் ஒருவர் வினவியபோது, எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் சம்பந்தப்பட்ட அனைத்து மருத்துவ அறிக்கைகளையும் உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட மருத்துவ அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளேன். எனவே 31 ஆம் திகதி முன்னர் அனைத்து அறிக்கைகளும் கிடைக்கப் பெறும் என்று அவர் பதிலளித்தார்.

# யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இந்திய சுதந்திர தின நிகழ்வு!



இந்தியாவின் 77வது சுதந்திர தின நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய துணைத் தூதரகத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் - மருதடி வீதியில் அமைந்துள்ள இந்திய துணைத்தூதரகத்தில் செவ்வாய்க்கிழமை (15) காலை 9 மணியளவில் இந்தியாவின் தேசியக்கொடியை துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் ஏற்றி வைத்தார்.



இதனை தொடர்ந்து இந்தியாவின் சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வெளியிட்ட வாழ்த்துச் செய்தி துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனால் வாசிக்கப்பட்டது.




இந்த நிகழ்வில் இந்தியத் துணைத்தூதரக அதிகாரிகள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டுள்ளனர்.

இந்தியா 1947ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் திகதி பிரித்தானியாவின் ஆதிக்கத்தில் இருந்து சுதந்திரமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் ஆறுபேர் கொண்ட வன்முறைக்குழு தாக்குதல்!





யாழ்ப்பாணம் கல்வியங்காடு பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த ஆறு பேர் கொண்ட வன்முறைக் கும்பல் ஆயுதங்களுடன் நுழைந்து தாக்குதல் நடத்தியுள்ளது.

கல்வியங்காடு பூதவராயர் வீதியில் உள்ள அரச உத்தியோகத்தர் ஒருவரது வீட்டின் மீதே 15-08-2023 அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பெண்களின் ஆடை அணிந்து வந்த ஒருவர் உட்பட்ட ஆயுதங்களுடன் வந்த 6 பேர் கொண்ட மர்ம கும்பலே அட்டூழியத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது வீட்டின் வெளியே நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள், மாணவர்களின் புத்தகப்பை என்பன தீயிட்டு கொளுத்தப்பட்டதுடன் யன்னல் கண்ணாடிகள், கண்காணிப்பு கமராக்கள் என்பனவும் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கண்காணிப்பு கமராக்களில் பதிவான காட்சிகளை அடிப்படையாக கொண்டு கோப்பாய் பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

வெளிநாட்டில் உள்ள தரப்பே இங்குள்ள வன்முறை கும்பலுக்கு பணம் அனுப்பி குறித்த வன்முறையில் ஈடுபட்டதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# குருந்தூர் விவகாரத்தை கோயில் நிர்வாகமும் முல்லை மக்களும் தான் முடிவெடுக்க வேண்டும் – சபா குகதாஸ்

குருந்தூர் மலை ஆதி சிவன் ஐயனார் ஆலய விவகாரத்தில் கோயில் நிர்வாகமும் முல்லைத்தீவு மாவட்ட பொது அமைப்புக்களும் மக்களுமே முடிவுகளை எடுக்க முடியும் மாறாக சட்டவிரோத விகாரைகளை அமைத்த விகாராதிபதிகளும் இந்து அமைப்பு என்ற பெயரில் புலனாய்வு அமைப்புக்களின் பின்னணியில் இயங்கும் போலி நபர்களும் முடிய அறைக்குள் முடிவுகளை எடுக்க முடியாது என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்தார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில், குருந்தூர் மலை விடையத்தில் நீதிமன்ற கட்டளைகளை திசை திருப்பும் நோக்கில் ஆலய நிர்வாகத்திற்கு தெரியாமல் சிவன் ஆலயம் அமைத்தல் என்ற பித்தலாட்ட நாடகம் அரங்கேற்றப்பட்டுள்ளது. இது வன்மையாக கண்டிக்கப்பட வேண்டிய விடயம். காரணம் குருந்தூர் மலையில் மிகப் பழைமை வாய்ந்த ஆதிசிவன் ஐயனார் ஆலயம் அழிக்கப்பட்டு புதிதாக அமைக்கப்பட்ட கட்டடம் சட்டவிரோதமானது எனவும் அதனை நீக்க வேண்டும் எனவும் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது அவ்வாறான நிலையில் சட்டவிரோத கட்டடங்களை அமைத்த விகாராதிபதிகளுடன் இணைந்து பிறிதொரு இடத்தில் சிவன் ஆலயம் அமைத்தல் என்பது சட்டவிரோத செயற்பாடுகளுக்கு சட்ட அங்கீகாரம் கொடுப்பதாகவும் நீதிமன்ற கட்டளைகளை சிங்கள ஆட்சியாளர்களும் அரச இயந்திரமும் அவமதிப்பதற்கு அப்பால் கோயில் நிர்வாகமும் அவமதிப்பதாக அமையும் அவ்வாறான ஒரு சூழ்ச்சிதான் போலி இந்து அமைப்பின் பினாமிகளால் மேற்கொள்ளப்படுகின்றது.

குருந்தூர் மலையில் தொல்லியல் திணைக்களமும் சிங்கள பௌத்த பிக்குகளும் மேற் கொள்ளும் திட்டமிட்ட அடாவடிகளையும் நீதிமன்ற கட்டளைகளை மீறுகின்ற செயற்பாடுகளையும் நியாயப்படுத்தும் வகையில் எடுக்கப்படும் இந்த முன்னகர்வு வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியது என் குறிப்பிட்டுள்ளார்.

# குப்பைகளை உண்ண வருகின்ற யானைகள் – பொதுமக்களின் உடமைகளுக்கும் சேதம்

குப்பைகளை உண்ண வருகின்ற யானைகள் அருகில் உள்ள விவசாய நடவடிக்கையில் ஈடுபடும் விவசாயிகளை அச்சுறுத்தி வருகின்றன.

அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குட்பட்ட அஸ்ரப் நகர் பள்ளக்காட்டுப் பிரதேசத்தில் கொட்டப்படும் குப்பைகளை தினந்தோறும் 100 க்கும் மேற்பட்ட யானைகள் வருகை தந்து உண்டு வருகின்றன.

சில வேளை அருகில் உள்ள பொதுமக்களின் உடமைகளுக்கும் சேதம் விளைவிப்பதுடன் விவசாய நிலங்களையும் கபளீகரம் செய்கின்றன.

மேற்படி பகுதியில் தினமும் காரைதீவு, கல்முனை, அக்கரைப்பற்று, நிந்தவூர், உள்ளிட்ட பிரதேசங்களில் இருந்து குப்பைகள் வாகனங்கள் மூலம் கொண்டுவரப்பட்டு கொட்டப்படுகின்றன.

இதனால் மலைபோல் குவிந்துள்ள குறித்த குப்பைகளை யானைகள் தினமும் உண்ண வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



அத்துடன் அம்பாறை பிராந்தியத்தில் அன்றாடம் சேகரிக்கப்படும் திண்மக்கழிவுகள் அநேகமானவை மேற்குறித்த இடத்திற்கே கொட்டப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் கடந்த காலங்களில் இப்பகுதியில் பிளாஸ்டிக் குப்பைகளை உட்கொண்ட இரண்டு யானைகள் உயிரிழந்திருந்தன.



கடந்த 8 ஆண்டுகளில் 20 யானைகள் குப்பைகளிலுள்ள பிளாஸ்டிக் மற்றும் பொலிதீன் பொருட்களை சாப்பிட்டு இறந்துள்ளதுடன் கிழக்கு மாகாணத்தில் திறந்தவெளி குப்பை கிடங்கில் பிளாஸ்டிக், பொலிதீன் கழிவுகள் தேங்குவதாலும் அப்பகுதியில் அதிகளவில் யானைகள் உயிரிழப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இறந்த யானைகளை பரிசோதித்த போது குப்பை மேட்டில் இருந்து பெருமளவிலான அழியாத பிளாஸ்டிக் பொருட்களை விழுங்கியுள்ளதாகவும் யானைகள் சாப்பிட்டு ஜீரணிக்கும் சாதாரண உணவு எதுவும் அங்கு தெளிவாகத் தெரியவில்லை என வனவிலங்கு கால்நடை மருத்துவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# குருந்தூர்மலை பொங்கல் நிகழ்வை தடுக்க யாருக்கும் உரிமை இல்லை:

## நீதிமன்றம் அதிரடி உத்தரவு

(18-08-2023)

"குருந்தூர்மலை பிரதேசத்தில் பூஜை வழிபாடுகளை மேற்கொள்வதை தடுப்பதற்கு யாருக்கும் எந்தவிதமான அதிகாரமும் இல்லை" என முல்லைத்தீவு நீதிமன்றம் 17.08.2023 அன்று கட்டளை பிறப்பித்துள்ளது.

குருந்தூர் மலையில் 18.08.2023 அன்றைய தினம் நிகழவிருக்கும் பொங்கல் நிகழ்வை கருத்திற்கொண்டே இந்த கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பொங்கல் உற்சவத்தினை மேற்கொள்ளும் தமிழர் தரப்பு கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் தொல்பொருள் திணைக்களம் எழுத்து மூல ஆவணம் ஒன்றினையும் வழங்கியுள்ளது.

இருப்பினும் குருந்தூர் மலை பிரதேசத்தில் உள்ள தொல்பொருள் சின்னங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பூஜை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு அப்பிரதேச மக்களுக்கு உள்ள உரிமை யை தடுப்பதற்கு வவுனியா சப்புமல்கஸ்கட ரஜமாக விகாரை விகாராதிபதி கல்கமுவ சாந்தபோதி தேரருக்கோ அல்லது அவருடன் வரும் குழுவினருக்கோ அல்லது அருண் சித்தார்த் என்பவருக்கோ அல்லது அவருடன் வரும் குழுவினருக்கோ அல்லது இதற்கு பாதகம் செய்யும் பிரிவினருக்கோ எந்தவிதமான அதிகாரமும் இல்லை என முல்லைத்தீவு நீதி மன்று கட்டளை பிறப்பித்துள்ளது.

இதேவேளை பொங்கல் உட்சவத்தினை மேற்கொள்ளும் தமிழர் தரப்பு கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் தொல்பொருள் திணைக்களம் எழுத்துமூல ஆவணம் ஒன்றினையும் வழங்கியுள்ளது இந்த ஆவணத்தில் ஏழு நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

1. நிலம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு - பாதிப்பு ஏற்படாதவாறு தொல்லியல் துறை அதிகாரிகள் குறிப்பிடும் திறந்தவெளியில் தொல்பொருள் அல்லாத கல், செங்கல், மணல் போன்ற ஆதரவின் மீது இரும்புத் தகடு வைத்து அதன் மீது தொல்பொருள் அல்லாத கற்களைப் பயன்படுத்தி அடுப்பு தயார் செய்து அதில் பொங்கல் சமைப்பதில் தொல்பொருளியல் திணைக்களத்திற்கு ஆட்சேபனை இல்லை.

ஆனால் குறித்த இடம் தொல்பொருளியல் பாதுகாப்பு காப்பக இடமாக உள்ளதுடன் வன பாதுகாப்பு துறைக்கு சொந்தமான வனப்பகுதியாக காணப்படுவதனால் இந்த இடத்தில் தீ மூட்டும்போது வன பாதுகாப்பு துறையின் சட்டவிதிகள் மற்றும் விதிமுறைகளின்படி செயற்பட வேண்டும்.




2. தொல்பொருளியல் எச்சங்கள் மேற்பரப்பில் காணப்படாததும், நிலம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையிலும் நினைவுச்சின்னங்களில் இருந்து விலகி தொல்லியல் துறை அதிகாரிகளால் குறிக்கப்பட்டு சுட்டிக்காட்டப்படும் இடத்தை மட்டுமே இதற்காக பயன்படுத்த வேண்டும்.

3. அகழ்வு செய்யப்பட்ட எல்லைகளில் உள்ள தொல்பொருள் நினைவுச்சின்னங்கள் அபாயகரமான நிலையில் இருப்பதால் அதன் எல்லை, அரண்களில் நடக்கவேண்டாம்.

குருந்தூர்மலை பொங்கல் நிகழ்வை தடுக்க யாருக்கும் உரிமையில்லை: நீதிமன்றம் அதிரடி உத்தரவு | Kurundur Hil Pongal Festival Court Order

4. அகழ்வாராய்ச்சி செய்யப்பட்ட தொல்பொருள் நினைவுச்சின்னங்கள் மீது உணவு, பழங்கள், திரவப்பொருட்கள், தேங்காய் போன்றவற்றை நேரடியாக வைக்க வேண்டாம்.

5. தொல்பொருட்கள் மீது தேங்காய் உடைத்தல் அல்லது பால் போன்ற திரவப்பொருட்களை தெளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.

6. திருவிழா நடவடிக்கையால் தொல்பொருளியல் இடம், நிலத்திற்கு கீழ் உள்ள தொல்பொருட்கள் மற்றும் அதன் கட்டமைப்புகளிற்கு எவ்விதமான சேதமும் ஏற்படக்கூடாது.

7. பொங்கல் பண்டிகைக்காக கூடும் மக்களால் இடத்தை வழிபடவரும் மற்றத் தரப்பினருக்கு இடையூறு ஏற்படாத வகையில் செயற்பட வேண்டும். என்ற ஏழு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் பேசும் முன்னாள் இராணுவ சிப்பாய் தவறான முடிவெடுத்து உயிர்மாய்ப்பு!

போதை பழக்கத்திற்கு ஆளான தமிழ்பேசும் முன்னாள் இராணுவ சிப்பாய் ஒருவர் தவறான முடிவெடுத்து சில நாட்களுக்கு முன்னர் உயிர்மாய்த்துள்ளார். புன்னாலைக் கட்டுவனின் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இவர் கடந்த காலத்தில் இராணுவத்தில் பணிபுரிந்து வந்த நிலையில், போதை பழக்கத்திற்கு ஆளாகி இருந்ததால் வேலையில் இருந்து நிறுத்தப்பட்டார். பின்னர் கந்தக்காடு புனர்வாழ்வு மையத்திலும் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில் அவரது வீட்டுக்கு முன்னால் உள்ள மரம் ஒன்றில் தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார்.

அண்ணமார்கோவில், புன்னாலைக்கட்டுவன் பகுதியை சேர்ந்த ஈஸ்வரன் சத்தியசீலன் (வயது 29) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். பிரேத பரிசோதனைகளின் பின்னர் அவரது சடலமானது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198


EASY FURNITURE
Summer
BLOWOUT SALE
LOWEST PRICE IN TOWN
STARTING FROM $59
READY TO DELIVER
Queen Diamond Firm Mattress $499 $299
Rest-O-Pedic Queen $399 $249
S/S BUNK Bed (Grey) $799 $399
Dreamopedic Single Mattress $249 $149
Velvet Rose Queen Mattress $399 $299
Back Support Queen Mattress $799 $549
Spine Comfort Queen Mattress $699 $499
5" Foam $79 $59
EASY FURNITURE
647 242 2655
ANG L Sofa Grey& Brown $650 $399
4 Door Wardrobe $899 $599
2 Door Wardrobe With Glass Mirror $449 $349
2 Door Wardrobe $399 $249
Sami Madam
Price Starting from $149
We Can Make Special Order
CALL US TODAY
416-293-9204
3500 McNicoll Ave, Unit 5
Scarborough, ON M1V 5C7


EASY FURNITURE
WHOLESALE PRICE
REM L Sofa $699 $499
SAI L Sectional (with ottoman) $1299 $899
JANE Sectional (Bk-WH-RD) $1699 $1299
UG RED Sectional $1199 $899
MOREN Sectional Sofa $1249 $899
GRASSY 3 pcs Sofa $1199 $899
Easy Air Leather Corner Sofa $2499 $1999
Sky Power 3 pcs Recliner Sofa $2999 $2499
EF QUEEN Bedroom Only $999 $799
Single Bed $199 $149
5 pcs Dining Table $799 $499
6 pcs Bedroom $899 $599
5pcs Dining Table $799 $499
7 pcs Dining Table $799 $549
Coffee Table $149 $99
Bar Stool $99 $59
STARTING FROM $59
ORDER TODAY 416-293-9204
3500 McNicoll Ave, Unit 5, Scarborough, ON M1V 5C7


SULLIVAN AUTO GROUP'S
Tamil Fest
தமிழர் தெரு விழா
2023
POWERED BY
iConnect Mortgages
FREE
ADMISSION!
AUGUST
26 & 27
TAMIL FEST
2023
MARKHAM RD
(BETWEEN MCNICOLL AVE.
& PASSMORE AVE.)
Largest Tamil Street Festival outside of Asia
FOR MORE INFORMATION PLEASE CONTACT
THE CANADIAN TAMIL CONGRESS AT
416-240-0078
INFO@CANADIANTAMILCONGRESS.CA
WWW.TAMILFEST.CA
TITLE SPONSOR
SULLIVAN AUTO GROUP
Formula Honda
NISSAN
POWERED BY
iConnect Mortgages
HOSTED BY
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
SUPPORTED BY
Canada
TORONTO
MARKETING PARTNER
PRINT FAST
ZONE SPONSORS
COMPUTEK COLLEGE
HOMELIFE
NAVA WILSON LLP
PRADON
TD
VIBRANT HOSPITALITY GROUP
WOW! WING
MEDIA SPONSORS
ATN
CASI
metroland

# கனடிய தேசமும் அதன் அரசும் கடைப்பிடிக்கின்ற பல்கலாச்சாரக் கொள்கையே அங்கு தமிழ் ஊடகங்களுக்கான பாதுகாப்பையும் அங்கீகாரத்தையும் வழங்குகின்றன

## சென்னைப் பல்கலைக்கழக ஊடக கற்கை நெறி மாணவர்கள் மத்தியில் கனடா உதயன் லோகேந்திரலிங்கம்





கனடிய தேசமும் அதன் அரசும் அரசியல் யாப்பு ரீதியாகக் கடைப்பிடிக்கின்ற பல்கலாச்சாரக் கொள்கையே அங்கு தமிழ் ஊடகங்களுக்கான பாதுகாப்பையும் அங்கீகாரத்தையும் வழங்குகின்றன. அத்துடன் அவர்களுக்கான மரியாதையையும் ஆதரவையும் வழங்குகின்றன. கனடாவின் மத்திய மாநில அரசுகளில் இயங்கிவரும் மரபுரிமை அமைச்சுக்கள் இவ்வாறான பல்லினங்கள் சார்ந்த ஊடகங்களுக்கு மதிப்பதிப்பதன் மூலம் அவற்றை பாதுகாக்கின்றன.

மேலும் ஊடகத் துறை சார்ந்த பயிற்சிகள் தேவையான பல்லினப் பத்திரிகையாளர்களுக்கும் அவற்றை கற்க விரும்புவர்களுக்கும். பல்கலைக் கழகங்களிலோ அன்றி உயர் சமூகக் கல்லூரிகளிலோ பயிற்சி நெறி-களை மேற்கொள்ளவும் வாய்ப்புகளை ஏற்படுத்தித்தருகின்றன.

இவ்வாறு தெரிவித்தார் சென்னைப் பல்கலைக்கழக ஊடக கற்கை நெறி மாணவர்கள் மத்தியில் நேற்று நண்பகல் உரையாற்றிய கனடா உதயன் லோகேந்திரலிங்கம்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஊடகத்துறையின் பேராசிரியர் ஜெய் சக்திவேல் அவர்கள் இந்த உரையரங்கை நெறிப்படுத்தினார். சர்வதேச ஊடகவியலாளரும் கனடா உதயன் பத்திரிகையின் தென்னாசியப் பிரிவின் முதன்மை ஊடகவியலாளருமான சிவா பரமேஸ்வரன் அவர்களும் அங்கு தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

உரைகளை கவனமாகக் செவிமடுத்துக் கொண்ட ஊடகத்துறை மாணவ மாணவிகள் பின்னர் கேள்வி நேரத்தில் "உதயன்" லோகேந்திரலிங்கம் அவர்களோடு தமது கேள்விகளைப் பகிர்ந்து கொண்டனர்.



தொடர்ந்து தனித்தனியாகவும் ஊடகத் துறை மாணவர்கள் லோகேந்திரலிங்கம் அவர்களை சந்தித்து உரையாடினர்.

## சுருவில் மக்கள் ஒன்றியம் நடாத்தும் வருடாந்த ஒன்றுகூடலும் விளையாட்டுப் போட்டிகளும் - 2023

சுருவில் மக்கள் ஒன்றியம் நடாத்தும் வருடாந்த கோடைகால ஒன்றுகூடலும் விளையாட்டுப் போட்டியும் எதிர்வரும் August மாதம் 20 திகதி சனிக்கிழமை Colonel Denfor ( 73 Colonel Denforth Trail Toronto ON, M1C 1P8 ) Area 4 பூங்காவில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அன்று காலை 10 மணிக்கு ஆரம்பிக்கப்படுவதோடு பல போட்டிகளும் நடைபெறும். அன்றைய தினம் சுருவில் மக்கள், நண்பர்கள் அனைவரையும் அன்போடு வரவேற்கின்றோம்.

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்:

| | |
|---|---|
| தி. பிரபாகரன் | உமா ரூபன் |
| தலைவர் | செயலாளர் |
| 647-622-6679 | 416-617-4671 |




இந்தியா செய்திகள் India News

# பேராசிரியர் மு. இளங்கோவன் தமிழ் விக்கி தூரன் விருது பெற்றார்!

தமிழ் ஆய்வுப்புலத்தில் தொடர்ந்து இயங்கி, சாதனைகள் படைக்கும் தமிழ் ஆராய்ச்சியாளர்களுக்குத் தமிழ் விக்கி தூரன் விருது, விஷ்ணுபுரம் இலக்கியவட்டம் சார்பில் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டுக்கான தமிழ் விக்கி தூரன் விருதுக்குப் புதுச்சேரிப் பேராசிரியர் மு. இளங்கோவன் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். இவர் புதுவை அரசின் காஞ்சி மாமுனிவர் அரசு பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் தமிழ்த்துறையில் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார். ஈரோட்டில் 06.08.2023 நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் எழுத்தாளர் ஜெயமோகன், சூழலியல் அறிஞர் சு. தியடோர் பாஸ்கரன், மலையாளத் திறனாய்வு வல்லுநர் பி. கே. இராஜசேகரன் ஆகியோர் இணைந்து மு. இளங்கோவனுக்குத் தமிழ் விக்கி தூரன் விருதினை வழங்கினர். இரண்டு இலட்சம் ரொக்கப்பரிசு, நினைவுச் சிற்பம், பாராட்டிதழ் ஆகியன வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருது சிவசங்கருக்கு வழங்கப்பட்டது.



இரண்டு நாள் நடைபெற்ற விழாவில் மு. இளங்கோவனின் எழுத்துப்பணி, ஆவணப்படப் பணி, கணினி, இணையத்துறையில் செய்துள்ள பணிகள், நூலாக்கப் பணிகள், நாட்டுப்புறவியல் ஆய்வுகள் குறித்து கலந்துரையாடல்கள் நடைபெற்றன. இவர் உருவாக்கிய இரண்டு ஆவணப்படங்களின் சுருக்கப்பட்ட வடிவம் விழாவில் திரையிடப்பட்டன. தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பலர் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.





# கனடா உதயன் லோகேந்திரலிங்கம் அவர்களுக்கு சென்னையில் "இதழியல் செம்மல்" என்னும் விருது வழங்கப்பெற்றது

தமிழ்நாட்டின் சென்னை மாநகரிலிருந்து வெளிவரும் "கவிதை உறவு" இலக்கியச் சஞ்சிகையின் 51ம் ஆண்டு விழா விருதுகளில் கனடா உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அவர்களுக்கு "இதழியல் செம்மல்" என்னும் விருது 18-05-2023 அன்று வழங்கப்பெற்றது. ஆனால் அதைப் பெற்றுக் கொள்ளும் முகமாக அவரால் சென்னைக்குச் செல்ல இயலவில்லை.

எனவே மேற்படி விருதினை மாண்புமிகு நீதியரசரும் சிறந்த பேச்சாளருமான திரு. இரா. சுரேஷ் குமார் 15-08-2023 அன்று மாலை நடைபெற்ற ஒரு சிறிய வைபவத்தில் அவரது உத்தியோகபூர்வமான வாசல்ஸ்தலத்தில் வைத்து வழங்கினார்.

படங்களில் "கவிதை உறவு" "இலக்கியச்" சஞ்சிகையின் ஆசிரியர் "கலைமாமணி" ஏர்வாடி இராதாகிருஸ்ணன் அவர்கள் உட்பட கலை இலக்கிய நண்பர்கள் மத்தியில் நீதியரசர் திரு. இரா. சுரேஷ் குமார் அவர்கள் விருதினை வழங்குவதைக் காணலாம்.



**செய்தியும் படங்களும்: சென்னைப் பிரதிநிதி பிரகாஸ்**



# சென்னை தமிழ்நாடு தகவல் ஆணைய அலுவலகத்தில் நடைபெற்ற இந்திய சுதந்திர தின விழாவில் "உதயன்" லோகேந்திரலிங்கம்

15-08-2023 அன்று காலை சென்னையில் அமைந்துள்ள தமிழ்நாடு தகவல் ஆணைய தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற இந்திய சுதந்திர தின விழாவில் தமிழ் நாடு தகவல் ஆணையர் திரு. ஆர். பிரியாகுமார் அவர்களோடும் காவல்துறையினரோடும் கனடா உதயன் லோகேந்திரலிங்கம் எடுத்துக் கொண்ட படங்கள் இங்கு காணப்படுகின்றன.



# சென்னை DWARAKA DOSS GOVERDHAN DOSS VAISHNAV COLLEGE கல்வி நிறுவன ஊடக கற்கைத் துறை மாணவர்கள் மத்தியில் உரையாற்றிய "உதயன்" லோகேந்திரலிங்கம்



14-08-2023 அன்று திங்கட்கிழமை சென்னையில் DWARAKA DOSS GOVERDHAN DOSS VAISHNAV COLLEGE கல்வி நிறுவனத்தின் ஊடக கற்கையை துறை மாணவர்கள் மத்தியில் உரையாற்றிய "கனடா உதயன்" பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அவர்கள் தொடர்ந்து அங்கு பணியாற்றும் துறை சார்ந்த விரிவுரையாளர்கள் மற்றும் போதனாசிரியர் ஆகியோரோடும் கலந்துரையாடினார். இந்த கல்வி நிறுவனமானது சென்னைப் பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.





துறைத் தலைவர் திருமதி. ஏ. பிரகதி, உதயன் லோகேந்திரலிங்கம் அவர்களையும் அவரோடு இணைந்து சென்ற கவிஞர் வா.மு.சே. திருவள்ளுவர் அவர்களையும் வரவேற்றார். துறையின் இணைப்பாளரான திருமதி. குணா கிடீறசியல் அவர்கள் கலந்துரையாடலை பொறுப்பேற்று நடத்தினார்.

லோகேந்திரலிங்கம் அங்கு உரையாற்றும் போது "கனடாவில் பல்லினங்கள் சார்ந்த ஊடகங்கள் தொடர்ந்து வெளிவரவேண்டும் என்பதில் மத்திய மாகாண அரசாங்கங்கள் மிகவும் அக்கறை கொண்டவையாகவும் துணைநிற்பவையாகவும் உள்ளன. அவற்றின் ஆசிர்வாதமும் பல்லின ஊடகங்களுக்கு உண்டு. எனவே தான் எம்மால் தொடர்ச்சியாக எம் மொழி சார்ந்த இனம் சார்ந்த பத்திரிகைகளை நடத்தக் கூடியதாக உள்ளது." என்றார்.

# அப்துல் கலாம், கல்பனா சாவ்லா உள்ளிட்ட சிறப்பு விருதுகளை வழங்கினார் முதல்வர் கி.வீரமணிக்கு தகைசால் தமிழர் விருது

இந்திய செய்திகள்

சென்னையில் நடந்த சுதந்திர தின விழாவில், பல்வேறு சாதனை படைத்தவர்களுக்கு விருதுகள், பதக்கங்களை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார். திராவிடர் கழக தலைவர் கி.வீரமணிக்கு தகைசால் தமிழர் விருதை வழங்கி கவுரவித்தார்.சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் நேற்று நடந்த சுதந்திர தின விழாவில் முதல்வர் ஸ்டாலின், தேசியக் கொடியை ஏற்றிவைத்து உரையாற்றினார். பின்னர், பல்வேறு சாதனை படைத்தவர்களுக்கு விருதுகள், பதக்கங்களை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார். திராவிடர் கழக தலைவர் கி.வீரமணிக்கு தகைசால் தமிழர் விருதுடன் ரூ.10 லட்சம் விருது தொகை, சான்றிதழ் ஆகியவற்றையும் முதல்வர் வழங்கினார்.



மனித குலத்துக்கு பயனளிக்கும் ஆராய்ச்சிகளை மேற்கொண்ட விஜடி பல்கலைக்கழக கணித பேராசிரியர் டபிள்யூ.பி.வசந்தா கந்தசாமிக்கு அப்துல் கலாம் விருதையும், உலகின் மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய செங்கல்பட்டு மாவட்டத்தை சேர்ந்த நா.முத்தமிழ்ச்செல்விக்கு வீரதீர செயலுக்கான கல்பனா சாவ்லா விருதையும் வழங்கினார்.காலை உணவு திட்டம் தொடர்பான செயலியை உருவாக்கியதற்காக தமிழ்நாடு மின்ஆளுமை முகமைக்கான முதல்வரின் நல்ஆளுமை விருதை, அதன் தலைமை செயல் அதிகாரி ரமண சரஸ்வதி பெற்றுக் கொண்டார். ஆதரவற்ற நோயாளிகளுக்கு உயரிய சிகிச்சை மேற்கொண்டதற்காக சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வரும், ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை டீனுமான தேரணி ராஜனுக்கும், பாலியல் ரீதியான குற்றங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திய கோவை எஸ்.பி. பத்ரிநாராயணன் ஆகியோருக்கும் நல்ஆளுமை விருது வழங்கப்பட்டது.

மாற்றுத் திறனாளிகளுக்கு சிறந்த சேவையாற்றிய வகையில் மருத்துவர் த.ஜெயக்குமார், சிறந்த நிறுவனமான கன்னியாகுமரி சாந்தி நிலையம், சமூக பணியாளரான கோவை ரத்தன் வித்யாசேகர், அதிக அளவில் பணியமர்த்திய நிறுவனமான மதுரையின் டெடி எக்ஸ்போர்ட்ஸ், சிறந்த மத்திய கூட்டுறவு வங்கியான ராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கும் விருதுகளை முதல்வர் வழங்கினார்.இதைத் தொடர்ந்து, கோட்டை கொத்தளத்தின் கீழே, தலைமைச் செயலக கட்டிடம் முன்பு அமைக்கப்பட்டிருந்த மேடையில், மகளிர் நலனுக்காக சிறப்பாக பணியாற்றிய கள்ளக்குறிச்சி மாவட்டத்தை சேர்ந்த ‘கிராமத்தின் ஒளி’ தொண்டு நிறுவனம், சிறந்த சமூக சேவகராக கோவை மாவட்டம் டி.ஸ்டான்லி பீட்டருக்கும் விருது வழங்கப்பட்டது.

சிறந்த உள்ளாட்சி அமைப்புகளை பொருத்தவரை, சென்னை மாநகராட்சியின் 9, 5வது மண்டலங்கள், சிறந்த மாநகராட்சியாக திருச்சிக்கு முதல் பரிசு, தாம்பரத்துக்கு 2ம் பரிசு, சிறந்த நகராட்சியாக ராமேசுவரம், திருத்துறைப்பூண்டி, மன்னார்குடிக்கு முதல் 3 பரிசுகள், சிறந்த பேரூராட்சியாக விழுப்புரம் விக்கிரவாண்டி, புதுக்கோட்டை ஆலங்குடி, சேலம் வீரக்கல்புதூருக்கு முதல்வர் விருதுகள் வழங்கப்பட்டன.ஆண்கள் பிரிவில் நீலகிரி சி.தஸ்தகீர், திருச்சி ரா.தினேஷ்குமார், ராணிப்பேட்டை கோ.கோபி, செங்கல்பட்டு ப.ராஜசேகர் ஆகியோருக்கும், பெண்கள் பிரிவில் சென்னை மு.விஜயலட்சுமி, மதுரை செ.சந்திரலேகா, காஞ்சிபுரம் தா.கவிதா தாந்தோணி ஆகியோருக்கு முதல்வரின் மாநில இளைஞர் விருதுகள் வழங்கப்பட்டன.

போதைப் பொருள் தடுப்புக்கான முதல்வரின் காவல் பதக்கத்தை, சென்னை காவல் கூடுதல் ஆணையர் அஸ்ரா கார்க், கோவை எஸ்.பி. பத்ரிநாராயணன், தேனி எஸ்.பி. டோங்ரே பிரவின் உமேஷ், நாமக்கல் உதவி ஆய்வாளர் சு.முருகன், நாமக்கல் முதல்நிலை காவலர் ஆர்.குமார் ஆகியோருக்கு முதல்வர் வழங்கினார். தொடர்ந்து, முதல்வருடன் அனைவரும் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

# இமயமலையில் இருந்து திரும்பினார் ரஜினி உத்தர பிரதேச முதல்வர் ஆதித்யநாத்தை சந்திக்க திட்டம்





இமயமலை பயணம் மேற்கொண்ட நடிகர் ரஜினிகாந்த், அங்குள்ள பாபாஜி குகையில் நண்பர்களுடன் தியானம் செய்தார். பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பிய அவர், ஜார்க்கண்ட் ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணனை சந்தித்தார். உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்தை இன்று சந்திக்க உள்ளார்.நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடித்துள்ள ‘ஜெயிலர்’ படம் கடந்த 10ம் தேதி வெளியாகி வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது.

சன் பிக்சர்ஸ் தயாரித்துள்ள இப்படத்தின் வெளியீட்டுக்கு முன்பு, கடந்த 9ம் தேதி தனது நண்பர்களுடன் இமயமலை புறப்பட்டுச் சென்றார் நடிகர் ரஜினிகாந்த்.ஓய்வு கிடைக்கும்போது இமயமலை செல்வதை வழக்கமாக கொண்டவர் ரஜினி. கரோனா பரவல் காரணமாக இமயமலை பயணம் மேற்கொள்ளாமல் இருந்த அவர், 4 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது சென்றுள்ளார்.இப்பயணத்தின்போது, ரிஷிகேஷ், பத்ரிநாத், துவாரகா, பாபாஜி குகை உள்ளிட்ட இடங்களுக்கு அவர் சென்றார். முதலில் ரிஷிகேஷில் உள்ள சுவாமி தயானந்த சரஸ்வதி ஆசிரமத்துக்கு சென்று,துறவிகளை சந்தித்து உரையாடினார். பின்னர் உத்தராகண்டில் வியாசர் குகைக்கு சென்று வழிபட்டார்.

இதையடுத்து, துவாரஹட்டில் உள்ள மகாவதார் பாபாஜி குகைக்குசென்றார். கையில் குச்சியை ஊன்றியபடி கரடுமுரடான பாதையில், நண்பர்களுடன் அவர் பயணம் மேற்கொண்டார். பாதுகாப்புக்காக போலீஸாரும் உடன் சென்றனர். இமயமலை பயணம் மேற்கொள்ளும் ஒவ்வொரு முறையும் பாபாஜி குகையில் ரஜினிகாந்த் தியானம் செய்வது வழக்கம். இந்த முறையும் குகைக்குள் அவரும், அவரது நண்பர்களும் தியானத்தில் ஈடுபட்டனர்.

ஆளுநருடன் சந்திப்பு: இந்நிலையில், இமயமலை பயணத்தை முடித்துக்கொண்டு, அங்கிருந்து திரும்பிய ரஜினிகாந்த், ஜார்க்கண்ட் ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணனை நேற்று சந்தித்தார். அவரது குடும்பத்தினருடன் புகைப்படம் எடுத்துக்கொண்டார். பின்னர் ராஞ்சியில் உள்ள யோகதா சத்சங்க ஆசிரம தலைமையகத்துக்கு சென்று, அங்குள்ள துறவிகளை சந்தித்தார். அந்த ஆசிரமத்துக்கு நன்கொடையும் வழங்கியுள்ளார்.

அங்கு காலை உணவை முடித்துக்கொண்டு, ஜார்க்கண்ட் ராம்கர் மாவட்டத்தில் உள்ள சின்னமஸ்தா காளி கோயிலுக்கு சென்று வழிபட்டார்.இன்று லக்னோ செல்லும் ரஜினிகாந்த், அங்கு உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்தை சந்தித்து பேச உள்ளார் என்று கூறப்படுகிறது.‘ஜெயிலர் திரைப்படத்தின் வெற்றியால் ரஜினி மிகவும் உற்சாகத்தில் இருக்கிறார். இப்படத்தின் வசூல் சாதனை அவரை மகிழ்ச்சியடைய வைத்துள்ளது. இதைகொண்டாடும் ரஜினி, அடுத்து ஞானவேல் இயக்கும் படத்துக்காக தன்னை தயார்படுத்தி வருகிறார் என்று அவருக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்துள்ளனர்.

# ‘“எங்களை கருணை கொலை செய்யுங்கள்” டிஜிபி அலுவலகம் முன்பு தலைமை காவலர் தர்ணா

ஓட்டேரி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணியாற்றுபவர் கோதண்டபாணி. இவர் ஆவடியில் உள்ள காவலர் குடியிருப்பில் குடும்பத்துடன் வசிக்கிறார். இவர் நேற்று மதியம் 2 மணியளவில் தனது 10 வயது மகள் பிரதிக்ஷாவுடன் டிஜிபி அலுவலகம் வந்தார். போலீஸ் சீருடையுடன் கையில் தேசியக் கொடியை பிடித்தபடி வந்த அவர் திடீரென மகளுடன் சாலையில் அமர்ந்து தர்ணாவில் ஈடுபட்டார். அப்போது, அவர் கூறியதாவது: எனது மகளுக்கு 3 வயது இருக்கும்போது சிறுநீரக பிரச்சினை ஏற்பட்டது.



எனவே எழும்பூரில் உள்ள அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் மகளைச் சேர்த்தேன். மருத்துவர்கள் பரிந்துரைத்த மாத்திரைகளை 5 ஆண்டுகளாக மகளுக்கு தொடர்ந்து கொடுத்தேன். இந்த மாத்திரைகளின் எதிர்விளைவு காரணமாக எனது மகளுக்கு வலதுகால் பாதத்தில் அரிப்பு ஏற்பட்டது. இதையடுத்து அதே மருத்துவமனையில் மீண்டும் சேர்த்தேன். மீண்டும் மருத்துவர்கள் நோயை சரியாகக் கண்டறியாமல் சிகிச்சை அளித்தனர்.

இதனால், மகளின் வலது கால் பாதம் சூம்பிப்போனது. மேலும் உடலில் பல்வேறு பிரச்சினைகளும் ஏற்பட்டன. மருத்துவர்களின் அலட்சியப் போக்கு, மெத்தனமே இதற்கு காரணம். எனவே, தவறான சிகிச்சை அளித்த மருத்துவர்கள் மீது பாரபட்சமின்றி அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். என் மகளின் வாழ்வாதாரத்துக்கு வழிவகை செய்ய வேண்டும்.

மாற்றுத் திறனாளியாகிவிட்ட மகளுக்கு, அதற்கான சான்றிதழும், நிதி உதவியும் வாங்கித் தருவதாகச் சொல்கிறார்கள்.கடந்த 2 ஆண்டுகளாக இதற்காக போராடுகிறேன். ஆனால், நியாயம் கிடைக்கவில்லை. எனவேஎன் மகளையும் என்னையும் கருணை கொலை செய்யப் பரிந்துரை செய்யுமாறு குடியரசுத் தலைவருக்கு கோரிக்கை வைக்கிறேன் என்றார். இதையடுத்து அவரை போலீஸார் சமாதானம் செய்து அனுப்பி வைத்தனர். தலைமைக் காவலரின் போராட்டத்தால் டிஜிபி அலுவலகம் முன்பு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம் - ரொறன்ரோ



3025 Kennedy Road, Unit #10, Scarborough, ON. M1V 1S3 (Kennedy & Finch)

## ஸ்ரீ நாகபூஷண கருமாரி அம்பாள் அலங்கார உற்சவம்
## 11.08.2023 வெள்ளி முதல் 20.08.2023 ஞாயிறு வரை

10 தினங்களும் யாக மண்டபத்தில் மாலையில் தேவி மஹாத்மிக பாராயணமும் விசேட ஹோமமும், துர்க்கா-லக்ஷ்மி-சரஸ்வதிக்கு விஷேட துர்க்காசூக்தம், ஸ்ரீசூக்தம், மேதாசூக்த ஹோமங்கள், குங்கும அர்ச்சனை என்பன சிறப்பாக நடைபெறும்.



மாணவர்கள் கல்வி, கலைகளில் சிறப்படையவும், வயோதிபர்கள் தேகதிட ஆரோக்கியம் பெறவும், திருமண வயதில் உள்ளவர்கள் திருமணபாக்கியம் பெறவும், குடும்பத்தில் பிரிவினைகள், சச்சரவுகள் நீங்கி குடும்ப அன்னியோனியம் பெற்று சந்தோசத்துடன் வாழவும். தம்பதிகள் சந்தான பாக்கியம் (குழந்தைச் செல்வம்) பெறவும். நோய், துன்பங்களில் அல்லல்படுவோர் ஆரோக்கியம் பெறவும். உலக அமைதி சமாதானத்துடன், தாயகத்தில் நிரந்தர அமைதியும் சுபீட்சமும் பெறவும். அனைவரும் நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் பெற்று மகிழ்வான வாழ்வு வாழவும் வேண்டி மாலை 6:40 மணிக்கு நடைபெறும் விசேட ஹோமம் மற்றும் அடியார்கள் பங்குகொள்ளும் குங்கும அர்ச்சனை ஆகியவற்றில் பங்கு பற்றி இறையருள் பெறுமாறு வேண்டுகின்றோம்.

| கைலாச வாகனம் | சப்பறத் திருவிழா | தேர்த் திருவிழா |
|---|---|---|
| 11.08.2023 வெள்ளி | 18.08.2023 வெள்ளி | 19.08.2023 சனிக்கிழமை |
| மாலை 7:00 மணிக்கு வசந்தமண்டப பூஜை | மாலை 7:00 மணிக்கு வசந்தமண்டப பூஜை | காலை 8:30 மணிக்கு வசந்தமண்டப பூஜை |



## ஆடி அமாவாசை
## பிதிர்தர்ப்பண மோட்ச்ச சாந்தி வழிபாடு
## 15.08.2023 செவ்வாய்க்கிழமை

ஆடி அமாவாசை தினத்தில் இறைபதம் அடைந்த நம் முன்னோர்களை நினைந்து, பிதிர்தோஷங்கள் நீங்க பிதிர் தர்பணம் செய்து மோட்ச்ச தீபம் ஏற்றி மோட்ச்ச சாறந்தி வழிபாடு செய்வது சிறந்தாது.

விரத தினத்தை முன்னிட்டு 15.08.2023 செவ்வாய்க்கிழமை காலை 8:00 மணி முதல் கௌரி அம்பிகா சமேத கேதீஸ்வரநாதப் பெருமானுக்கு விஷேட அபிஷேகம், 10:00 மணிக்கு விஷேட பூஜை, சுவாமி வீதிஉலா என்பன நடைபெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

**காலை 6:00 மணிமுதல் 2:00 மணிவரை ஆலயத்தில்**
**பிதிர்தர்ப்பண மோட்ச்ச சாந்தி வழிபாடுகள் செய்யலாம்.**

**அடியார்களின் காலதாமதத்தை தவிர்க்க பல சிவாச்சார்யர்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.**

## 25.08.2023 வெள்ளிக்கிழமை வரலட்சுமி விரதம்
### சுமங்கலிப் பூஜையும் திருவிளக்குப் பூஜையும்



வரலட்சுமி விரத தினத்தை முன்னிட்டு காலை 7:30 மணிமுதல் ஸ்ரீ மகாலட்சுமிக்கு 108 வலம்புரிச் சங்குகளினால் அஷ்டோத்தரசத சங்காபிஷேகம் நடைபெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

மாலை 5:00 மணிக்கு சாயரட்சைப் பூஜையும், தொடர்ந்து சுமங்கலிப் பிரார்த்தனையும் திருவிளக்குப் பூஜையும், தொடர்ந்து 7:00 மணிக்கு வசந்தமண்டப பூஜையும், வரலட்சுமி விரதத்தை முன்னிட்டு மகாலட்சுமி அம்பாள் வீதிவலம்வரும் அருட்காட்சியும் நடைபெறும்.

**திருவிளக்குப் பூஜையில் பங்கு பற்றும் அடியார்கள் முற்கூட்டியே ஆலயத்தில் பெயர்களைப் பதிவு செய்வதுடன் குறிப்பிட்ட நேரத்திற்கு ஆலயத்திற்கு வருகை தருமாறு வேண்டுகின்றோம்.**

416.291.8500 vinaayagar.com vinaayagar

# குருந்தூரில் வெள்ளிக்கிழமை பொங்கல் வழிபாடு இடம்பெறுமா?

- நடராசா லோகதயாளன்

குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை பொங்கல் வழிபாட்டிற்கு அழைப்பு விடப்பட்டுள்ள நிலையில் அதனைத் தடுக்கும் முயற்சியில் சிங்களத் தரப்பு மும்மரமாக ஈடுபட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் சில வாரங்களிற்கு முன்னர் பொங்கல் வழிபாடு இடம்பெறவிருந்த சமயம் பொலிசார் மற்றும் தொல்லியல்த் திணைக்களத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டடது, தமிழ் மக்கள் பொலிசாரால் தாக்கப்பட்டதும் ஊடகங்களில் வெளியாகி அது பரபரப்பை ஏற்படுத்தியது. பின்னர் இந்த விடயம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரையில் கொண்டு செல்லப்பட்டது.

இந்த நிலையில் பொங்கல் வழிபாட்டிற்கு அனுமதிக்குமாறே கூறப்பட்டதே அன்றி தடுக்குமாறு கூறவில்லை என ஜனாதிபதி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்திருந்தார்.

இப்படியான பின்புலத்தில் மீண்டும் வெள்ளிக்கிழமை (18) அன்று பொங்கல் வழிபாடு இடம்பெற ஏறபாடுகள் செய்யப்பட்டு அதற்கான அழைப்பு விடப்பட்டுள்ள நிலையில் அதனைத் தடுக்கும் முயற்சியில் சில சிங்களத் தரப்புக்கள் மிக மும்மரமாக ஈடுபட்டுள்ளன.

இதற்காக முல்லைத்தீவு மாவட்டத்தின் மணலாறு (வெலிஓயா) பகுதிகளில் இப்பொங்கலைத் தடுக்க சிங்களவர்களை ஒன்றுகூடுமாறு அழைப்பு விடுக்கும் துண்டுப் பிரசுரங்கள் அதிகளவில் ஒட்டப்பட்டுள்ளன.

இதையடுத்து இப்பகுதியில் ஏதும் மத முரணபாடு ஏறபடுமா என்ற அச்சமும் திகழ்கிறது.

இதேநேரம் குருந்தூர் மலையில் சிவன் கோவில் கட்டுவது என்ற தீர்மானத்தை இந்து- பௌத்த மதத்தலைவர்கள் யாழ்ப்பாணத்தில் ஒன்றுகூடி தீர்மானமாக எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஆரியகுளம் நாக விகாரையில் பௌத்த பிக்குகள் மற்றும் சைவ அமைப்புக்களின் பிரதிநிதிகள், சைவக் குருமார்களும் நேற்று ஒன்றுகூடி மேற்கொண்ட கலந்துரையாடலின்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குருந்தூர்மலை பொங்கல் வழிபாட்டிற்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் ஆதரவு் கட்டுப்பாடுகளும் விதிப்பு

- நடராசா லோகதயாளன்

முல்லைத்தீவு குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய பொங்கலில் அணைவரையும் அணிதிரள யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் அறைகூவல் விடுத்துள்ளது.

"பௌத்த பேரினவாதத்தின் ஆதிக்கம் அதிகரித்து வரும் நிலையில் தமிழர் நாம் நமது உரிமைகளை மீட்டெடுக்கவும், எமது மரபுகளை பேணிப் பாதுகாக்கவும்", தமிழ் மக்கள் அனைவரும் வெள்ளிக்கிழமை குருந்தூர்மலையில் அணிதிரள வேண்டியே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

இதேநேரம் இப்பொங்கல் வழிப்பாடு ஏறபாட்டாளர்களிற்கு தொல்லியல்த் திணைக்களம் ஓர் கடிதம் அனுப்பி வைத்துள்ளது. சிங்களத்தில் எழுதி அதன் மொழிபெயர்ப்பையும் அனுப்பி வைத்துள்ள தொல்லியல்த் திணைக்களம் பொங்கலின்போது கடைப்பிடிக்க வேண்டிய நிபந்தனைகள் என 7 நிபந்தனைகளை விதித்து தொல்லியல்த் திணைக்களத்தின் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களிற்கான உதவிப் பணிப்பாளர் ஒப்பமிட்டுள்ளார்.

இதனிடையே "குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய பொங்கல் வழிபாடு இடம்பெறவுள்ள சமயம் அப்பிரதேச மக்களினது அல்லது வேறு எவரின் கருத்துக்களை அறியாது சிவன் ஆலயம் தொடர்பில் இந்தியாவின் கைக்கூலியான மறவன்புலவு சச்சிதானத்தம் சில சமயப் பெரியார்கள் என்ற போர்வையில் அடி வருடிகளுடன் சென்று பிக்குகளுடன் பேசியுள்ளார். அது தொடர்பில் அந்த மக்களே முடிவினை எட்ட வேண்டும் சச்சிதானந்தமும் அவரது குழுவும் இதிலிருந்து ஒதுங்க வேண்டும்" என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செ. கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

ரொறன்ரோ
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி

தமிழ், சமய, பண்ணிசை
வகுப்புக்கள் 10.09.2023 ஆரம்பம்

எமது மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு, தியானம், நற்பழக்கம், இறைவழிபாடு ஆகியவற்றை எமது குழந்தைகள் அறிந்து அதன்படி ஒழுக வேண்டும் என்ற உயரிய குறிக்கோளுடன் ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி கடந்த 18 வருடங்களாக சிறப்புற நடைபெற்றுவருகின்றது. தரமான ஆசிரியர்களைக் கொண்டு கல்விகற்பிப்பதுடன், ஆலயத்தில் நடைபெறும் நவராத்திரி, திருவெம்பாவை, சிவராத்திரி, வருடாந்த மஹோற்சவம் போன்றதினங்களில் தேவார திருமுறைகளைப் பண்ணோடு படித்தல், புராணக் கதைகளை நாடகவடிவில் நடித்தல், வாரம்தோறும் ஆலயத்தில் நடைபெறும் பஜனை வழிபாட்டில் கலந்துகொள்ள ஊக்குவிப்பது போன்றவை இக்கல்லூரியின் சிறப்பம்சமாகும்.

புதிய மாணவர்களுக்கான பதிவு www.varasiththi.com இணையத்தளத்தில் விண்ணப்பிக்கலாம். நேரடியான பதிவு 26.08.2023 சனிக்கிழமை இந்துக்கல்லூரியில் காலை 10:00 மணிமுதல் 1:00 மணிவரை நடைபெறும்.

தமிழ், சமய, பண்ணிசை வகுப்புக்கள்
ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 முதல் 12:45 வரை
ஞாயிற்றுக்கிழமை மதியம் 1:30 முதல் 4:45 வரை

இந்துக்கல்லூரியில் ஏற்கனவே கல்வி கற்றுவரும் மாணவர்கள் மற்றும் 4 வயது (Junior Kindergarten) முதல் 8 வயது (2 ம் வகுப்பு) வரையிலான புதிய மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

Apply now at www.varasiththi.com

SRI VARASITHTHI VINAAYAGAR HINDU COLLEGE
3039 KENNEDY ROAD, SCARBOROUGH, ON M1V1S7 CANADA.
416.291.7900, 647.336.3333, 416.291.8500 www.varasiththi.com



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள் 1061

## ஏறாவூர் வீரபத்திரசுவாமி கோவில் மட்டக்களப்பு

கண்டியை அரசாண்ட ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன், மட்டக்களப்புப் பகுதியை கி.பி 1798 முதல் 1815 வரை ஆட்சி செய்துள்ளான். இக்காலப் பகுதியில் ஏறாவூர்ப்பகுதியிய் ஊர்ப்போடியாராகப் பாலிப்போடியார் என்பவர் இருந்துள்ளார். இவர்கள் காலத்தில் இந்தியாவிலிருந்து கதிர்காம யாத்திரையை மேற்கொண்டு ஈழத்திற்கு யாத்திரீகர்கள் வருவது வழக்கமாகக் காணப்பட்டது. இவ்வாறு கதிர்காம யாத்திரையை மேற்கொண்டு வந்த அன்பரொருவர், தக்கன் யாகத்தை அழித்த வீரபத்திரரின் அழித்த கோலமாகிய, ஐம்பொன்னாலான அகோரபத்திரசுவாமியின் விக்கிரகத்தைத் தன்னுடனே கொண்டுவந்துள்ளார்.

இவ்வாறு வந்த யாத்திரீகர்கள் ஏறாவூர் ஐந்தாம் குறிச்சியில், ஸ்ரீ வீரபத்திரசுவாமி சுவாமி கோவிலிருக்கும் இடத்திலிருக்கும் ஆலமர நிழலிலே தங்கினர். தாம் தங்கிய காலத்தில் தம்முடன் கொண்டுவந்த அகோரவீரபத்திரசுவாமியின் திருவுருவத்தை அவ்விடத்திலே எழுந்தருளப்பண்ணி, பூசை செய்து அமுதுபடைத்து அதனையே தாமுண்டு அவ்விடத்திலேயே உறங்கினர். இவர்கள் கனவிலே தோன்றிய அகோரவீரபத்திர சுவாமி, “நான் இவ்விடத்திலேயே தங்கப்போகின்றேன். இவ்வூரவர்களிடம் என்னை ஒப்படைத்துச் செல்லுங்கள்” என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார். இச் செயலால் ஆச்சரியமுற்ற யாத்திரீகர்கள், ஊர்ப்போடியாரான பாலிப் போடியாரைச் சந்தித்து, தாம் கொண்டுவந்த அகோரவீரபத்திரர் திருவுருவம்பற்றி எடுத்துரைத்து, முதல்நாள் கனவில் கண்டவற்றையும் அவரிடம் கூறி, சிலையை அவரிடமே ஒப்படைத்துவிட்டுத் தமது கதிர்காம யாத்திரையை மேற்கொண்டனர்.

பாலிப்போடியார் ஊரவர்களை அழைத்து நடந்த செய்திகளை விளக்கி, அனைவரது தீர்மானப்படி ஒரு குடிசையை அமைத்து அங்கு அகோரவீரபத்திரசுவாமியை எழுந்தருளச் செய்தனர். இவ்விடத்திலே பூசை செய்வதற்காக பஙீசகர் ஒருவரையும் நியமித்தனர். குடிசையில் ஆரம்பித்த அகோரபத்திரசுவாயின் வழிபாடு சிறிது காலம் செல்ல மடாலய வணக்கமாக மாற்றம்பெற்றது. வள்ளங்களிலே கல், மண் முதலியவற்றைக் கொண்டு வந்த ஊர் மக்களின் ஒத்துழைப்போடு அகோரபத்திரசுவாமியின் மடாலயம் அமைக்கப்பட்டது. இங்கும் பூசை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றது.

பாலிப்போடியாரின் காலத்தில் அகோரவீரபத்திரசுவாமி கோவில் இவ்வாறான நிலையிலேயே காணப்பட்டது. நிர்வாக முறைகளிலும் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. இவருக்குப்பின் இவரது சந்ததியாரும், குடும்பத்தினரும் இவ்வாலயத்தை நன்றாகப் பரிபாலித்து வந்துள்ளனர். பாலிப்போடியாரக்குப் பின் அவரது மருமகனாகிய வேலாயுதம் கதிர்காமத்தம்பி என்பவரும், இவரைத்தொடர்ந்து இவரது மகனாகிய வேலுப்பிள்ளை தோம்புதோரும் முறையே அகோரவீரபத்திரசுவாமிகோவிலைத் தொடர்ந்து சிறப்பாகப் பரிபாலித்துள்ளனர். இவர்கள் காலம்வரை அக்கால வழக்கப்படி சடங்குகளும், பலியிடலும் தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளது. ஆகமமுறை தழுவாது மடாலயமாகக் காணப்பட்ட கோவில்களில், திருவிழாக்கள் நடைபெறாது மரபுமுறை தழுவிய சடங்குமுறைகளே இடம்பெறும் வழக்கம் காணப்பட்டுள்ளது. ஆயினும் காலத்திற்குக் காலம் அகோரவீரபத்திரசுவாமி கோவிலிலே ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள், சடங்குமுறைகளை நீக்கித் திருவிழாவை நடத்துவதற்குரிய முறையிலே ஏற்பாடுகள் செய்யப்பட்டது. இதன் பிரகாரம் 1916 ஆம் ஆண்டளவில் எடுக்கப்பட்ட தீர்மானப்படி, சடங்குமுறைகள் நிறுத்தப்பட்டுத் திருவிழா நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றது.

ஆரம்ப ஏற்பாடாகக் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலிருந்து எழுந்தருளி, மற்றும் வாகனம், கொடி, குடை, சந்திரப்பிறை, சூரியப்பிறை ஆகியன வள்ளங்களின்மூலம் கொண்டுவரப்பட்டு, அகோரவீரபத்திரசுவாமிகோவில் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. புரட்டாதி மாதத்தில் பூரணையன்று தீர்த்தம் நடைபெறத்தக்கவகையிலே, பத்துநாட்கள் திருவிழாக்கள் இடம்டபெற்றது. இவ்வாறான திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற ஊர்மக்களும் ஏனையோரும் மனமுவந்து சகல உதவிகளையும் செய்து வந்துள்ளனர். இவ்வாறாக ஆரம்பகாலத்தில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலிருந்து கொண்டுவரப்பட்டு நடைபெற்ற அகோரவீரபத்திரசுவாமி கோவில் திருவிழா, மூன்றாண்டுகள் சிறப்பாக நடைபெற்றது. ஆயினும் இந்நிலையை மாற்றி, ஆலயத்திற்கெனச் சொந்தமாகத் திருவிழாவிற்குரிய பொருட்களையும், எழுந்தருளி மூர்த்தியையும் செய்யவேண்டுமென ஊரவர்கள் ஆர்வங்காட்டினர்.

**- வளரும்...**






# முல்லைத்தீவில் மேலும் நிலங்களை விடுவிக்க அரசு இணக்கமா அல்லது மக்களை ஏமாற்றும் நாடகமா?

- நடராசா லோகதயாளன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் தனியாருக்கு சொந்தமான காணிகள் மற்றும் மக்கள் பயன்பாட்டிற்காகவும் இருந்த காணிகளையும் பிடித்து வைத்திருந்த வனவள திணைக்களம் அதில் ஒரு தொகுதியை விடுவிக்க இசைந்துள்ளது.

அந்த திணைக்களம் பிடித்து வைத்துள்ளதாக மாவட்டச் செயலகம் கோரிய 20 ஆயிரத்து 543 ஹெக்டேயரில் 9 ஆயிரத்து 311 ஹெக்டேயரை விடுவிக்க திணைக்களம் இணக்கம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டத்தில் மக்களிற்கு சொந்தமான தனியார் காணிகளையும் பிரதேச செயலாளரின் ஆளுகையில் இருந்த அரச காணிகளையும் எவரின் அனுமதியோ அல்லது முன்னறிவித்தலோ இன்றி வனவளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் என்பன வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டு அபகரித் தொதிருந்தன.

இது தொடர்பில் கடந்த 12 ஆண்டுகளாக எழும் பிரச்சணைக்கு தீர்வுகான அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரை தொடர்பில் புதன்கிழமை (16) அன்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர், வனவளத் திணைக்கள அதிகாரிகள், ஜனாதிபதி செயலக அதிகாரிகளுடன் பிரதேச செயலாளர்கள் சகிதம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே மேற்படி தீர்மானத்தை வனவளத் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

இதற்கமைய முல்லைத்தீவில் 9 ஆயிரத்து 311 ஹெக்டேயர் அல்லது 29 ஆயிரம் ஏக்கர் நிலங்களை விடுவிப்பு செய்ய இணக்கம் தெரிவித்த வனவளத் திணைக்களம் மேலம் 17 ஆயிரம் கெக்டேயர் தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளர் தலைமையிலான தேசிய குழுவிற்கு சமர்ப்பிப்பித்து அவர்களின் அறிவுறுத்தலிற்கு அமைய முடிவை எட்டுவதாக தெரிவித்தனர்.

இதன்போது மாவட்டச் செயலகத்தின் கோரிக்கையை அடுத்து தேசிய குழுவிற்கு பரிந்துரைக்கும் 17 ஆயிரம் ஹெக்டேயரையும் மீண்டும் பார்வையிட்டு அங்கே மக்களின் வாழ்விட அடையாளங்கள் குறித்து பரீட்சிக்க கோரினர்.

இதை இருகிழமைகள் கால அவகாசத்தில் ஆராய்ந்து ஆராய்ந்து அதன் பின்பும் ஓர் கூட்டத்தில் முடிவை அறிவிப்பதாக இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம் முல்லைத்தீவில் 1985ஆம் ஆண்டிற்கு முன்பு 88 ஆயிரத்து 671 ஹெக்டேயர் காடே காணப்பட்டுள்ளது. அது மாவட்டத்தின் மொத்த அளவில் 36.72 வீதமாக உள்ள நிலையில், 2009இற்கு பின்பு 84, ஆயிரத்து 664 கெக்டேயர் நிலம் வனவளத் திணைக்களம் தனது காடாக அறிவித்துள்ளது. இது மாவட்டத்தின் 35.06 வீதமாகும்.

இந்த நிலையில் தற்போது விடுவிக்க இணக்கம் தெரிவிக்கும் 9 ஆயிரத்து 311 கெக்டேயர் நிலம் 3.86 வீதமாகவும் தேசிய குழுவிற்கு சமர்ப்பிக்கும் 11 ஆயிரத்து 232 கெக்டேயரும் 4.65 வீதமான நிலமாகவே காணப்படுகின்றது.

இதனிடையே அந்த மாவட்டத்தில் புதிதாக வர்த்தமானி அறிவித்தல் செய்ய வனவளத் திணைக்களம் பரிந்துரை செய்துள்ள 11 ஆயிரத்து 798.கெக்டேயர் நிலானது 4.89 வீதமாகவுள்ள நிலையில் இது தொடர்பில் அடுத்த கூட்டத்தின் பின்பு ஆராய்வதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் முல்லைத்தீவு மாவட்டத்தில் உடனடியாக 20 ஆயிரத்து 543 கெக்டேயர் நிலம் வனவளத் திணைக்களத்தினால் விடுவிக்கப்பட வேண்டும் என மாவட்டச் செயலகம் கோரிக்கை விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## யோகாசனம் (நேரிசை வெண்பா)

---

தினசரி யோகா சனத்தைப் பயின்றால்
மனமும் உடலும் வசமாம் ... தினமும்
விடுகின்ற மூச்சில் விரியும் அமைதி
விடாது அடங்கும் மனம்.

முறையாகப் பயிற்சியை மூச்சாய்த்
தொடர்ந்தால்
குறைகள் பலவும் கலையும் ... நிறைவாய்
திரும்பத் திரும்ப தியானப் பயிற்சி
மருந்து பெறுமே மனம்.

உள்ளமும் ஊனும் ஒருங்கே யிணைந்திட
கள்ளமிலா யோகம் களிதரும் ... முள்போன்ற
பொல்லாப் பிணிகள் புழுதிபோல் செல்லுமே
எல்லோரும் ஏற்றிட இங்கு.

பதஞ்சலி சொல்லிய பாதையில் சென்றால்
நிதமும் வருமே நலமும் ... கதறும்
தடைகள் அகலத் தளையும் விலக
விடையும் பெறுமே மனம்.

---

**ஆக்கம் ... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453





OM NAMO NARAYANA

**125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்**

**N. P. ராஜசேகர்**

**IS NOW @ CANADA**
**42 LANGSTON DRIVE, BRAMPTON (L6V 3W7)**
**Contact: 416 904 6278**

21rajbhavan@gmail.com

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம், பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகற்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

**பரிகார காண்டங்கள்**

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது தீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்டைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்னியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது
குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.

# SJV Father of Tamil Nationalism

## Expansion of speech by V. Thangavelu, President, Canada TNA at the 125th birth anniversary of SJV held in Toronto (Part 13)


As I narrated above the judgment of the Supreme Court came as no surprise. When it came to fundamental rights and judicial restraint the Ceylon Supreme Court and the Privy Council exercised judicial review cautiously the Soulbury constitution designed on Westminster format. Neither was prepared to question acts of the Ceylon Parliament that discriminated against minority groups, especially Section 29 considered entrenched clause in the constitution. This clause was supposed to prohibit Parliament from enacting discriminatory legislation against minorities. It set forth constitutional safeguards to minorities against discrimination on grounds of race or religion or both.

I append below Section 29 of the Soulbury constitution, though this Section along with the Soulbury constitution was thrown overboard by the Republican Constitution enacted by Mrs. SWRD Bandaraike's government in 1972. It is now only of historic interest to academics. The deliberate exclusion of a provision similar to section 29(2) and (3) in the 1972 Constitution was more catastrophic, if not utterly myopic. This Republican constitution gave Buddhism foremost place and state duty to protect and foster Buddha Sasana, in effect status of state religion. This had led protracted conflict, both violent and non-violent, between Sinhala Buddhists and Tamil Hindus as we witness today. This Republican constitution also formally abolished appeals to the Privy Council,

LEGISLATIVE POWERS AND PROCEDURE
Power of Parliament to make laws.
Section 29.

(1) Subject to the provisions of this Order, Parliament shall have power to make laws for the peace, order and good government of the Island.
(2) No such law shall-
(a) prohibit or restrict the free exercise of any religion ; or
(b) make persons of any community or religion liable to disabilities or restrictions to which persons of other communities or religions are not made liable ; or
(c) confer on persons of any community or religion any privilege or advantage which is not conferred on persons of other communities or religions.

The question as to whether the provisions of the Citizenship Act of 1948 were contrary to Section 29(2)(b) and (c) of the Soulbury constitution, which prohibited the Ceylon parliament from enacting any law which would impose disabilities or restrictions on members of any community or religion, came to be decided by the Privy Council in the case of Kodakan Pillai v Mudanayake in 1953.



The appellant, an Indian national resident in Sri Lanka for two years prior to June 1950, was first refused registration as a voter under the 1949 franchise law, on the ground that he was not a citizen, by the registering officer. He appealed to the Revising Officer (a district judge), who held that the Citizenship Act, 1948, and the Ceylon (Parliamentary Elections) Amendment Act, 1949, were ultra vires vis a vis the constitution. He also stated that the Citizenship Act was in no true sense legislation to create the status of citizen, but was, with the 1949 act, part of a legislative plan to reduce the electoral power of the Indian community.

The Crown appealed to the Supreme Court, which allowed the appeal. Then the appellant appealed to the Privy Council, which, while dismissing the appeal, stated inter alia as its reasons:

It is . . . a perfectly natural and legitimate function of the legislature of a country to determine the composition of its nationals. Standards of literacy, of property, of birth or of residence are, as it seems to their Lordships, standards which a legislature may think it right to adopt in legislation on citizenship, and it is clear that such standards, though they may operate to exclude the illiterate, the poor and the immigrant to a greater degree than they exclude the other people, do not create disabilities in a community as such, since the community is not bound together as a community by its illiteracy, its poverty or its migratory character, but by its race or its religion. The migratory habits of the Indian Tamils are facts which . . . are directly relevant to the question of their suitability as citizens of Ceylon, and have nothing to do with them as a community.

On the legal question of the vires of the acts in question, the Privy Council stated:
The principle that a legislature cannot do indirectly what it cannot do directly has always been recognized by their Lordships' Board . . . But . . . the court will not be astute to attribute to any legislature motives or purposes or objects which are beyond its power. It must be shown affirmatively by the party challenging a statute which is, on its face intra vires, that it was enacted as part of a plan to affect indirectly something which the legislature had no power to achieve directly.

The Privy Council went on to declare that a community is not bound together by its illiteracy, poverty or migratory character; yet, in reality, these were the very characteristics that made the Indian Tamils a collective community The Privy Council, in its exposition of the law, and in its inclusion of literacy and property as possible "standards" for citizenship, give one the impression that their Lordships were holding court in another world.

Their interpretation of the legislative power of the Sri Lanka parliament rendered the safeguards in Section 29(2), in legal language, otiose, i.e., serving no useful purpose. The government of Sri Lanka hailed this decision as a great victory, and later governments were encouraged to use other legislative measures depriving Tamils of other rights. This decision provoked widespread disillusionment.

The disfranchisement of the Indian Tamils had two effects. Firstly, it made them a community with no representation in the future legislatures of the country. Secondly, all eight electorates in which they were represented— Nuwara Eliya, Talawakale, Kotagala, Nawalapitiya, Maskeliya, Haputale, Badulla and Bandarawela—came to return Sinhalese MPs to parliament, with very few voters in each of them. This increased the Sinhalese representation in parliament from 67% in the 1947 election to 73% in the 1952 election and, after the l959 delimitation, to 78%. This was considerably more than the proportion of the Sinhalese population, which was 67.3% in the 1953 census and 71.2% in the 1963 census.

And, in the 1970 election, Sinhalese comprised 80% of the legislature when their population was only 71.2% in the 1963 census and 72.9% by 1971. It was a case not simply of the head count and the arithmetic of the ballot box, but of a predominant ethnic majority squeezing out an ethnic minority by every means that the electoral system provided. (Extract from: Sri Lanka The National Question and the Tamil Liberation Struggle)

The failure of the cases filed challenging both the Citizenship Act, 1948, and the Ceylon (Parliamentary Elections) Amendment Act, 1949 are ultra vires of the constitution placed the AES in a quandary. Should we appeal to the Privy Council or not? After consultation with our lawyers, we decided to appeal to the Privy Council. (To be continued)



# மலையகத் தமிழர்களது வாக்குரிமையைப் பறித்த தேர்தல் திருத்த சட்டத்ததுக்கு ஆதரவாக

கடந்த வார (ஓகஸ்ட் 11) கனடா உதயன் வார ஏட்டில் "மலையக மக்களின் பிரஜா உரிமையை பறித்த சட்டத்திற்கு பாட்டனார் ஜி.ஜி பொன்னம்பலம் ஆதரவு வழங்கியமைக்காக மனிப்பு கேட்பீர்களா என்ற கேள்விக்கான தெளிவுபடுத்தலை பதிவு செய்ய விரும்புகிறேன் - கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு" என்ற செய்தி வெளியாகியிருந்தது. செய்தியை எழுதியவர் பு.கஜிந்தன்.
இந்தச் செய்தியை உரையைப் படித்தபோது அதிவீரராமர் எழுதிய வெற்றிவேற்கையில் வரும் ஒரு பாடல் ஒன்று நினைவுக்கு வந்தது.

வாய்ப்பறை யாகவும் நாக்கடிப் பாகவும்
சாற்றுவது ஒன்றைக் போற்றிக் கேண்மின்.
பொய்யுடை யொருவன் சொல்வன் மையினால்
மெய்பொ லும்மே மெய்போ லும்மே
மெய்யுடை ஒருவன் சொல்லாட் டாமையால்
பொய்போ லும்மே பொய்போ லும்மே. (வெற்றிவேற்கை பாடல் 34)

கஜேந்திரகுமார் பொன்னம்பல் ஒரு சட்டத்தரணி. சட்டத்தரணிகளுக்கு இயல்பாக இருக்கும் வாய்வன்மை, வாதத்திறமை இரண்டையும் பயன்படுத்தி தனது பாட்டன் ஜிஜி பொன்னப்பலம் 8 இலட்சம் மலைநாட்டுத் தமிழர்களுக்கு இழைத்த இரண்டகத்தை பூசி மெழுகப் பார்க்கிறார். நியாயப்படுத்தப் பார்க்கிறார். வெள்ளை அடிக்க எத்தனிக்கிறார். வரலாற்றைத் திரிக்க முயற்சிக்கிறார்.
"மலையக மக்களை இந்த நாட்டில் உரிமையற்றவர்களாக மாற்றிய சட்டத்தை எனது பாட்டனார் ஜீஜீ பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் முற்றுமுழுதாக எதிர்த்தே வாக்களித்திருந்தது என்பதை மிக தெளிவாக இந்த இடத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதன் பின்னர் இலங்கையின் சுதந்திரத்துக்கு பின்னர் ஒரு பல்லின பிரதிநிதித்துவ அரசை அமைக்க அழைப்பு விடுத்த பிரதமர் டி.எஸ். சேனநாயக்காவுடன் நடந்த பேச்சுகளில் மலையக மக்களின் பிரஜா உரிமையை பறித்த இலங்கை குடியுரிமை சட்டத்தை மீளப்பெறுமாறு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் நிபந்தனை விதித்திருந்தது."

உண்மை என்னவென்றால் இலங்கைக் குடியுரிமைச் சட்டம் 28/1948 நாடாளுமன்றத்தில் ஓகஸ்ட் 20 1948 இல் நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டம் நொவெம்பர் 15 அன்று நடைமுறைக்கு வந்தது. ஆனால் ஜிஜி பொன்னம்பலம் பெரிய சேனநாயக்காவின் அமைச்சரவையில் செப்தெம்பர் 03 அன்று அமைச்ராகி விட்டார்! அதாவது எண்ணி 14 நாட்களில் அமைச்சராகி விட்டார்!
ஜிஜி பொன்னம்பலம் அலரிமாளிகைக்கு வருகை செய்து பெரிய சேனநாயக்கவிடம் சரணடைந்த அந்தக் கண்றாவிக் காட்சியை ஜே.எல். பெர்னாண்டோ இப்படி விபரிக்கிறார் "தெமில ஜபொன்னம்பலம்ஸ சிங்கள சிங்கமான டி.எஸ். சேனாநாயக்கவின் முன் குனிந்து அமைச்சரானார்." (இலங்கையின் மூன்று பிரதமர்கள், எம்.டி. குணசேன, 1963, பக். 27. ஜிஜி பொன்னம்பலத்தை விரைவில் வாக்காளர்கள் தள்ளிவிட்டு விடுவார்கள்.

**(According to J.L Fernando (Three Prime Ministers of Ceylon, MD Gunasena, 1963, p. 27), "The Damila [Ponnambalam] bowed low before the Sinhala Lion, DS Senanayake, and was made a Minister." GGP would soon be rejected by the Tamil electorate.)**

இது எதனைக் காட்டுகிறது? ஓகஸ்ட் 20 க்கு பின்னர் அல்ல அதற்கு முன்னரே திருவாளர் ஜிஜி பொன்னம்பலம் திரைமறைவில் - தந்தை செல்வநாயகம், கு. வன்னியசிங்கம் போன்றோருக்குத் தெரியாமல் - பெரிய சேனநாயக்கா அவர்களுடன் தனக்கு ஒரு முழு அமைச்சர் பதவியும் மேலும் ஒருவருக்கு அரை அமைச்சர் பதவியும் மேலும் ஒருவருக்கு துணை அவைத் தலைவர் பதவிக்கும் இரகசியமாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தார் என்பதே!

மேலே குறிப்பிட்டது போல இலங்கைக் குடியுரிமைச் சட்டம் 28/1948 எதிராக ஓகஸ்ட் 20,1948 அன்று இதய சுத்தியோடு ஜிஜி பொன்னம்பலம் பேசியிருந்தால் எப்படி அல்லது ஏன் எண்ணி 14 நாட்களுக்குள் பெரிய சேனநாயக்காவின் அமைச்சரவையில் இடம் பிடித்தார்? உண்மை என்னவென்றால் இலங்கைக் குடியுரிமைச் சட்டத்துக்கு எதிராக ஒப்புக்கு பேசிவிட்டு, ஒப்புக்கு வாக்களித்துவிட்டு பெரிய சேனநாயக்காவிடம் கேவலம் ஓர் அமைச்சர் பதவிக்காக 8 இலட்சம் மலையகத் தமிழர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டதற்கு மறைமுகமாக உடந்தையாக இருந்தார் என்பதே யதார்த்தமாகும்.

"அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்) தலைவர் ஜிஜி பொன்னம்பலம் இலங்கைக் குடியுரிமை சட்டமூலத்திற்கு எதிராகப் பேசவில்லை, அதற்கு எதிராக வாக்களித்ததோடு தனது முயற்சியை முடித்துக் கொண்டார். டி.எஸ். சேனநாயக்கவுடன் அமைச்சரவையில் இணைவதற்குப் பொன்னம்பலம் பேச்சுவார்த்தை நடத்தியதாக நம்பப்படும் காலம் அது என்று பல ஆண்டுகளுக்குப் பிறகு எஸ்.ஜே.வி.செல்வநாயகம் என்னிடம் கூறினார்" என்கிறார் முன்னாள் நா.உறுப்பினர் வே. நவரத்தினம். (நூல் "தமிழ்த் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்" - 2021 பதிப்பு - பக்கம் 50)

**"The All Ceylon Tamil Congress leader G.G. Ponnambalam did not speak against the Ceylon Citizenship Bill, but contend himself with merely voting against it. S.J.V. Chelvanayakam told me many years later that was the time when Ponnambalam was believed to have been negotiating with D.S. Senanayake to join the Cabinet" writes V. Navaratnam former MP in his book "The Fall and Rise of Tamil Nation" 2021 second edition page 50.**

ஜி.ஜி.பொன்னம்பலத்திற்கு நியாயம் செய்யும் வகையில் 1948 ஆண்டு ஓகஸ்ட் 20 ஆம் திகதியிடப்பட்ட அரச இதழ் (பக்கங்கள் 21821 - 1861) ஊடாக இலங்கைப் பிரசாவுரிமைச் சட்டமூலத்திற்கு எதிராகப் பேசினார் என்பது உறுதியாகிறது.

இது பற்றி அறுபதுகளில் தந்தை செல்வநாயகம் அவர்களிடம் நான் கேட்ட போது தான் நாடாளுமன்றத்தில் பேசிக் கொண்டிருந்த போது தனக்கு அருகில் அமர்ந்திருந்த ஜிஜி பொன்னம்பலம் **"Chelva, don't burn your boats, Chelva don't burn your boats"** என கிசு கிசுத்துக் கொண்டு எனது கோட் சட்டையை இழுத்தபடி இருந்தார் எனச் சொன்னார். இந்த ஆங்கில பழமொழியின் பொருள் "நீங்கள் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் உங்கள் படகுகள் / பாலங்களை எரித்தால், அந்த நிலைமைக்கு திரும்புவதற்கான சாத்தியமான அனைத்து வழிகளையும் நீங்கள் அழிக்கிறீர்கள்" என்பதாகும்.

இவ்வளவிற்கும் மலையகத் தமிழர்களின் நலன்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும்போது, அவர்களுக்கு உறுதுணையாக நின்று குரல் கொடுப்பேன் என்று இலங்கை இந்திய காங்கிரஸ் கட்சிக்கு ஜிஜி பொன்னம்பலம் எழுத்தில் உறுதி அளித்தாதிருந்தார். அப்படி எழுத்தில் கொடுக்கப்பட்ட உறுதிமொழி பின்வருமாறு,

**- கனடா நக்கீரன்**

"இலங்கையில் இந்தியர்களின் உரிமைகள் மற்றும் தகுதிக்கான இலங்கை இந்திய காங்கிரசின் கோரிக்கையை ஆதரிப்பதாகவும், கடைப்பிடிப்பதாகவும் நான் உறுதியளிக்கிறேன். அதாவது அரசியல் வாக்குரிமைக்கான தகுதி ஆறு மாத எளிய இருப்பிடத் தேர்வின் அடிப்படையில் இருக்க வேண்டும்

தீவில் ஐந்தாண்டுகள் வதிதல் மற்றும் நிரந்தரத் தீர்வுக்கான விருப்பத்தை பிரகடனம் செய்தல் என்பன ஏனைய மக்களுடன் சமத்துவத்தின் அடிப்படையில் ஒரு நபருக்கு முழுமையான குடியுரிமையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகைமையைப் பெறாத ஆட்கள் குறிப்பிட்ட எதிர்காலத் திகதியில் அவற்றைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுவர்."

தமிழர் பலமான ஜிஜி பொன்னம்பலத்துக்கு ஒரு அமைச்சர் பதவி கொடுத்து வசப்படுத்தித் தனது கக்கத்தில் வைத்துக் கொண்ட பெரிய சேனநாயக்க மரத்தாலே விழுந்தவனை மாடேறி மிதித்த கதையா மலையகத் தமிழர்களது குடியுரிமைக்கு உலைவைத்த கையோடு அடுத்து ஆண்டு (1949) அவர்களது வாக்குரிமைக்கும் வேட்டு வைத்தார்
இலங்கை (நாடாளுமன்றத் தேர்தல்கள்) திருத்தச் சட்ட எண் 1946 க்கு பெரிய சேனநாயக்க ஒரு ஒருவரித் திருத்தத்தை கொண்டு வந்தார். அந்தத் திருத்தம் (48/49) நாட்டு மக்களது வாக்குரிமையை குடியுரிமையையோடு முடிச்சுப் போட்டது.

தளது பாட்டனார் ஜிஜி பொன்னம்பலம் இலங்கைக் குடியுரிமை சட்டத்தை நாடாளுமன்றத்தில் எதிர்த்துப் பேசினார், எதிர்த்து வாக்களித்தார் எனத் துதிபாடும் கஜேந்திரகுமார் அதே பாட்டனார் மலையகத் தமிழர்களது வாக்குரிமையைப் பறித்த இலங்கை (நாடாளுமன்றத் தேர்தல்கள்) திருத்தச் சட்ட எண் 48/1949 பற்றி வாயே திறக்கவில்லை. அந்த இரண்டகத்தை அவர் வசதியாக மறந்துவிட்டார். அந்தச் சட்டத்துக்கு அப்போது அமைச்சராக இருந்த ஜிஜி பொன்னம்பலம் ஆதரித்து வாக்களித்தார். அமைச்சர் பதவியா, மலையகத் தமிழர்களின் வாக்குரிமையா என்ற கேள்வி எழுந்த போது ஜிஜி பொன்னம்பலம் அமைச்சர் பதவியை இறுகப் பற்றிக் கொண்டார்.

பெரிய சேனநாயக்க கொண்டு வந்து நிறைவேற்றிய 48/1949 தேர்தல் சட்ட திருத்தத்தின் மூலம் எட்டு இலட்சம் மலையகத் தமிழர்கள் தங்கள் வாக்குரிமையை ஒரே இரவில் இழந்தார்கள்.

1949 சட்டப், பிரிவு 4 (1) வெறுமனே கூறியது: "எந்தவொரு குடிமகனும் அவர் இலங்கையின் குடிமகனாக இல்லாத போது அவரது பெயர் எந்தவொரு ஆண்டில் அல்லது எந்தவொரு வாக்காளர் பதிவேட்டில் பதிவுசெய்யப்படவோ அல்லது தக்கவைக்கப்படவோ தகமையற்றவர் ஆவர்.

**The 1949 Act, in section 4(1), simply stated: "No person shall be qualified to have his name entered or retained in any register of electors in any year if such person is not a citizen of Ceylon."**

இந்த சட்ட திருத்தத்திற்கு முன்னர் மலைநாட்டுத் தமிழர்கள் 1931 மற்றும் 1936 இல் சட்ட சபைக்கு நடந்த தேர்தலிலும், 1947 இல் நாடாளுமன்றத்துக்கு 1947 நடந்த தேர்தலிலும் வாக்களித்து இருந்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

1947 இல் நடந்த தேர்தலில் மலைநாட்டுத் தமிழர்கள் இலங்கை இந்திய காங்கிரஸ் கட்சியை சேர்ந்த 7 பேர் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டார்கள். அவர்களது வாக்குப் பலம் மேலும் இருபது தொகுதிகளின் வெற்றிக்கு வழிகோலியது. தொழிலாள வர்க்கம் என்பதால் அவர்கள் பெரும்பாலும் இடதுசாரிக் கட்சிகளுக்கு (சமஜமாஜிக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி) வாக்களித்தார்கள். (மிகுதி அடுத்த வாரம்)



# அன்பின் தொனி - 702

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஒப்புகொடுத்தல் (அற்பணிப்பு)** - Commitment

அரைகுறை ஒப்புவிப்பு பரிபூரண கிறிஸ்தவ வாழ்கையாக அமையாது

உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன், நீகுளிருமல்ல அனலுமல்ல, நீகுளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்தி பண்ணிப் போடு வேன். - **வெளிப்படுத்தல் 3: 15-16**

**ஒப்புக்கொதலைக் குறித்து இன்று சபைகளின் நிலைஎன்ன?**

தேவனோடு எமக்கு இருக்கும் உறவின் அளவில்தான் ஒப்புக்கொதல் தங்கியிருக்கிறது. ஒப்புக்கொதலைக் குறித்து பரிசுத்த வேதாகமம் அதிகமாக விபரிக்கிறதை கவனிக்க வேண்டும். எவ்வளவிற்கு தேவனில் அன்பு வைக்கிறோமோ, அவ்வளவிற்கு ஒப்புக்கொடுப் போம். நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக. இன்றுநான் உனக்குக் கட்டளையிடுகிற இந்தவார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிற போதும், வழியில் நடக்கிற போதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக்குறித்துப் பேசி. - **உபாகமம் 6: 5-7**

இயேசு அவனை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக. - **மத்தேயு 22: 37**

**ஒப்புக் கொத்தல் பரிசுத்த வேதாகம் முழுவதிலும் தொடர்ச்சியாக காணப்படுகிறது.**

உமது கையில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன், சத்தியபரனாகிய கர்த்தாவே, நீர் என்னை மீட்டுக்கொண்டீர். - **சங்கீதம் 31: 5**

உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும். - **நீதிமொழி 16: 3**

உன்வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு, அவரே காரியத்தை வாய்க்கப் பண்ணுவார். - **சங்கீதம் 37: 5**

இயேசு: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார், இப்படிச் சொல்லி, ஜீவனைவிட்டார். - **லூக்கா 23: 46**

ஆகையால் தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மை செய்கிறவர்க ளாய்த் தங்கள் ஆத்துமாக் களை உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக்கடவர்கள். - **1 பேதுரு 4: 19**

அதினிமித்தம் நான் இந்தப் பாடுகளையும் அனுபவிக்கிறேன். ஆயி-னும் நான் வெட்கப்படுகிறதில்லை, ஏனென்றால், நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன். - **2 தீமோத்தேயு 1: 12**

**கனிகொடுக்கிறகிறிஸ்தவனுக்கான ஏழு வகையானஒப்புக்கொடுத்தல்**

**1. முழு இருதயத்தோடு இயேசுகிறிஸ்துவின் ஆழுகைக்கு தன்னை அர்ப்பணித்தல்**

அப்பொழுது, இயேசு தம்முடைய சீர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னை த்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். தன் ஜீவனை ரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான், என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான்.
- **மத்தேயு 16: 24-25**

**தொடரும்...**


**Sapphire Banquet & Catering**

Specializing in Videography & Photography

- Anniversary Party - Family Get-together
- Birthday Party - Graduation Party
- Bridal Shower - Religious Ceremonies
- Engagement Party - Wedding Showers - and more...

SHIVA SUBRAMANIAM (647) 406-4868


# கடந்தவையும் கடப்பவையும் (67)

பாடசாலை திருத்தவேணும் சுற்றுமதில் கட்டவேணும்
புலமைப் பரிசில் திட்டமும் அங்கு வேணும் - நல்ல

குடிநீரைப் பெற்றுக்கொள்ள கிராமங்களுக்கு - நிலத்துக்கு
அடியில் நீளமான குழாய்கள் அமைக்க வேணும்

தளர்ந்து போன சனசமூக நிலையங்களை உயர்த்த வேண்டும் - சமூகம்
வளர்வதற்கு அதற்கும் துணை நிற்கவேண்டும் - போரின்பின்

சரிந்துபோன நூல் நிலையங்களை உயர்த்த வேண்டும் - அங்கு
தெரிந்து நல்ல நூல்களை வைக்க வேண்டும்

உருக்குலைந்த ஆலயங்களை எழுப்ப வேண்டும் - அங்கும்
மிகப் பெரிதாய் திருவிழாக்கள் செய்ய வேண்டும்

ஆள்பவரால் அலட்சியமாய் விடப்பட்ட கிராமத்து
நீளமான தெருக்களையும் செப்பனிட்டு - அங்கு

ஏலுமானால் தாரினையும் ஊற்ற வேண்டும் - போரினால்
ஏலாமற் போனவர்க்கும் எவ்வளவோ உதவ வேண்டும் - ஒரு காலம்

அடிப்படை மருத்துவ வசதிகளை இழந்திருந்த பெருமளவு
வைத்தியசாலைகளைக் கட்டவும் உதவ வேண்டும் - அதன் தரத்தை

படிப்படியாய் உயர்த்துதற்கு ஆவன செய்ய வேண்டும் - இப்படி
நெருக்கடியான நேரங்களில் ஆங்காங்கு ஒன்றுகூடி

செய்வன தெரிந்து செய்ததனால் பலரும் - புகழ்ந்து
தள்ளுகிறார் இவ்விடத்தைப் பெருமையாக

இன்று காணும் அத்தனை வளர்ச்சியிலும் - இவர்களைப்போல்
ஒன்று கூடும் மக்களிற்கும் பெரும் பங்கு உண்டு - இதற்கு

மறுப்புக்கூற முடியாது நீங்கள் என்று - கொஞ்சம்
உறைக்கும்படி கூறத்தான் மௌனமானர் அங்கிள் - ஆனாலும்

'ஊழல் செய்பவர்களை உயர்த்திய பெருமையும் - அங்கு
ஊரூராய் ஒன்றுகூடும் உங்களுக்கு உண்டு' என்றார் நக்கலாக

சாப்பாடு வருவதற்கு நேரம் ஆக ஆக
சங்கடம் தான் அதிகம்ஆச்சு - இவரோடு

பேசாமல் இருந்திருந்தால் நின்மதியாய் தெரிந்தவர்
ஆரேனும் இருக்கிறாரா என்றேனும் பார்த்திடலாம் - ஆனாலும்

விடவில்லை மறுபடியும் தொடருகிறார்
'தெரியாத ஆக்களுக்குக் காசனுப்பிய

பெரியவரின் புலம்பல் ஒன்று சொல்லுகிறேன் கேளும்' என்றார்

இரக்க குணம் கொண்டவராம் - கொஞ்சமேனும்
தயக்கம் இல்லாமல் அன்றொருநாள்

போரினால் பெற்றோரை இழந்த பிள்ளை ஒன்றை
நேரிலே பார்க்காமல் உதவுதற்கு முன்வந்து - தொண்டு

நிறுவனம் ஒன்றினைத்து தேர்ந்தெடுத்து
வருடாவருடம் பணமனுப்பி வந்தாராம் - பல

வருடங்கள் கழிந்த பின் - குடும்பத்தினர்
விருப்பத்தொடு அங்கு அவர் சென்றபோது - அங்கு

அந்த நிறுவனமே இல்லை என்று சொன்னதனால்
நொந்த மனதோடு ஊர் திரும்பிப் போனாராம்...

என்றவர் சொல்லவும் சுடச்சுட உணவும் - 'இனி
ஒன்றும் சொல்லாமல் உண்' என்பதாக

கருத்தைத் தன்பால் இழுத்தது...

( தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

# இவ்வார ராசிபலன்

**18-08-2023 வெள்ளி தொடக்கம் 24-08-2023 வியாழன் வரையும்**




**மேஷம்:** வம்புதும்புகள் ஒழியும் வாரம். பயணம் தவிர்ப்பது நல்லது. ஆபரணப் பொருள் களவு போகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். வாகன மாற்றம் ஏற்படும். மனஅமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்களின் நலனில் அக்கறை தேவை. பணியில் கண்டிப்பு தேவை. வாக்குவாதங்கள் உருவாகும். தனவரவுகள் அதிகரிக்கும். எதிரிகளின் தொல்லை குறையும். பாதிப்புகள் அகலும். வெளியூர் பயணம் வெற்றி தரும். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் கலைகட்டும். உறவினர் வருகை உண்டு. ஆறுதலான சூழ்நிலை அமையும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதித்ய பகவான், அதிர்ஷ்ட எண்: 5,2,8,3
அதிர்ஷ்ட நிறம்: நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,U




**ரிஷபம்:** புதிய முயற்சிகளால் சாதனை படைக்கக்கூடிய வாரம். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். கடல் சார்ந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். இடமாற்றம் நன்மைத் தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். உத்தியோக உயர்வு கிட்டும். பிள்ளைகளால் பெருமை சேரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உடன்பிறப்புக்களால் உதவி கிட்டும். முதுகில் வலி வந்து போகும். சக ஊழியர்கள் உதவி கிட்டும். சம்பள உயர்வு கிட்டும். காதல் கை கூடும். விவாக முயற்சிகள் வெற்றி தரும். அரசு வகையில் ஆதாயம் உண்டு. உறவினர்களால் அனுகூலம் உண்டு. நிதி நிலைமை சீராகும். பணிவான பேச்சு அவசியம். திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். அற்புத வாய்ப்பு கிட்டும். வேலை வாய்ப்புக்கூடும். விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். ஆபரணச் சேர்க்கை உண்டு. ஞாபக மறதி ஏற்படும். மாணவர்களுக்கு படிப்பில் அதிக கவனம் தேவை. உழைப்பிற்கான பலன் கிடைக்கும். பால்ய நண்பர்களை சந்திக்க நேரிடும். புதிய சொத்து சேரும். பொறியியல் துறை லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முருகர், அதிர்ஷ்ட எண்: 6,9,2,0
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,W




**மிதுனம்:** தடைகள் விலகும் வாரம். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். தன வரவுகள் உண்டு. குதூகல எண்ணம் அதிகரிக்கும். பெரிய வாய்ப்புகள் தேடி வரும். பூர்வீக சொத்துக் கிடைக்கும். நினைத்தது நடக்கும். தர்ம சிந்தனை மேலோங்கும். சுபச் செலவுகள். நண்பர்களால் பாராட்டு கிட்டும். உத்தியோக வாய்ப்பு உண்டு. வார்த்தைகளில் நிதானம் தேவை. மங்கலச் செய்தியால் மனம் மகிழும். பங்குச்சந்தை லாபம் தரும். பித்ருக்கள் சாபம் நீங்கும். திறமைகள் வெளிப்படும். சேமிப்பு பெருகும். பழைய கடன் குறையும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். அரசியலில் ஆதாயம் உண்டு. பிரச்சனைகள் முடிவுக்கு வரும். நீண்ட நாள் கனவு பலிதமாகும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் தேடி வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். திட்டமிட்ட செயல் வெற்றி பெரும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். பேச்சில் பணிவு தேவை. சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். பயணங்களால் பணம் கரையும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். பழைய பாக்கி வசூலாகும். தொழில் அபிவிருத்தி அடையும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். களவுப்போன பொருள் கைக்கு வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நட்ஷத்திர தேவதை, அதிர்ஷ்ட எண்: 6,5,1,4
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,X




**கடகம்:** வியாபாரம் விருத்தியாகும் வாரம். தேகப்பலம் கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். இல்லத்தில் அமைதி பெருகும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். வரவு திருப்தி தரும். நீண்ட நாளைய நோய் விலகும். உடல்நலத்தில் அக்கறை தேவை. தொட்ட காரியம் ஜெயமாகும். மங்கையருக்கு திருமணம் கைகூடும். உழைப்பிற்கான பலன் கிடைக்கும். வாழ்த்துச் செய்திகள் வரும். மறைமுக எதிர்ப்புகள் மாறும். பணம் புரளும். செல்வாக்கு மேம்படும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். கல்வியில் ஆர்வம் கூடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். தாராளமான வருமானம் உண்டு. சுபச்செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். பித்ருக்கள் சாபம் நீங்கும். அரசியலில் ஆர்வம் கூடும். நினைவாற்றல் பெருகும். உதவும் குணம் அதிகரிக்கும். பழையக் கடன் தீரும். உடல் சோர்வு ஏற்படும். ஆடம்பர பொருள் சேரும். திருஷ்டிகள் விலகும். தெளிவான முடிவுகள் உதயமாகும். வெற்றி வீடு தேடி வரும். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். மின்சாரம் கவனம் தேவை. குதூகல எண்ணம் உருவாகும். கௌரவம் உயரும். தெய்வீகப் பற்று கூடும். போட்டிகள் உருவாகி மறையும். வியாபார அபிவிருத்தி ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கந்தப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 1,9,8,2
அதிர்ஷ்ட நிறம்: பால் வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,K




**சிம்மம்:** வெற்றிகள் குவியும் வாரம். தாய், தந்தை உதவி உண்டு. பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். புதிய நட்பு உருவாகும். மனைவியால் மரியாதை உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கன்னிப்பெண்கள் கவனம் தேவை. கால்நடைகளால் லாபம் உண்டு. கண் நோய் வந்து போகும். கடன் வாங்க நேரிடும். கலைத்தொழில் லாபம் தரும். பதவி உயர்வு கிட்டும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். ஆடை, அணிகலன் சேர்க்கை, உண்டு. முயற்சிகள் வெற்றிகள் தரும். தீர்த்த யாத்திரை உண்டு. வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். தொழில் லாபம் தரும். குடும்பத்தில் மேன்மைகள் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். பணியாட்கள் ஆதரவு அதிகமாகும். பாதகமான சூழ்நிலை விலகும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். தொழில் போட்டி உருவாகி மறையும். பணியில் உயர்வு கிட்டும். பணிவும், துணிவும் கூடும். கஷ்ட காலம் மறையும். மன அமைதி சீர்குலையும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். செய்தொழில் முன்னேற்றம் உண்டு. புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 8,1,9,2
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,D



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 9940431377




**கன்னி:** புதிய முயற்சிகள் பலன் தரும் வாரம். தொழில் வளம் கூடும். திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைகூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளி போடுங்கள். உடல்நலம் சிறக்கும். முகப்பொலிவு கூடும். பொருளாதாரம் ஏற்றம் பெருகும். மன அமைதி கிட்டும். கடன் கச்சைகள் தீரும். மனைவி உறவில் ஒற்றுமை வளரும். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். சாதித்துக் காட்டும் சாதனையான காலம். பாராட்டுக்கள் கிடைக்கும். பெண்களுக்கு மனஅமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். செய்தொழில் முன்னேற்றம் உண்டு. உத்தியோக வாய்ப்பு கிட்டும். பங்குச்சந்தையில் லாபம் கிட்டும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றியாகும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை காணப்படும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். ஆன்மீகவாதிகள், உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவர். ஒரு சிலருக்கு கௌரவப் பதவி தேடி வரும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருமாரி அம்மன், அதிர்ஷ்ட எண்: 1,5,7,4
அதிர்ஷ்ட நிறம்: இளம்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,K




**துலாம்:** ஆசைகள் நிறைவேறும் வாரம். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். போதிய தனவரவு இருக்கும். அத்தியாவசிய தேவைகள் பூர்த்தியாகும். நீண்ட கால எண்ணம் நிறைவேறும். உதவிகள் குவியும். வாழ்க்கை தரம் உயரும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பணியில் இடமாற்றம் ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். நண்பர்களால் மதிப்பு உயரும். எதிர்ப்புகள் தவிடுப் பொடியாகும். எண்ணம் வண்ணமயமாகும். கவனமுடன் செயல்பட வேண்டும். பொருளாதாரம் உயரும். நண்பகலில் நல்ல தகவல் வரும். அத்தியாவசிய செலவுகள் ஏற்படும். தான தர்மங்கள் பலன் தரும். வழக்குகள் தள்ளிப்போகும். உற்சாகம் அதிகரிக்கும். உடல்பொலிவு கூடும். புதிய முதலீடு தவிர்க்கவும். பணியில் பாராட்டு கிடைக்கும். கூட்டுத் தொழிலில் லாபம் தரும். உயர்வுகள் தாமதமாகும். பயணம் அனுகூலம் தரும். கண்ணாடிப் பொருட்கள் சேதமடையும். கலக்கமான மனநிலை காணப்படும். அணிகலன் சேர்க்கை ஏற்படும். சேமிப்பு அதிகமாகும். பொறுப்புக்கள் கூடும். பெண்களுக்கு யோகம் கூடும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். இல்லத்தில் அமைதி கூடும். தொட்ட காரியங்கள் ஜெயமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விஷ்ணு, அதிர்ஷ்ட எண்: 4,1,8,2
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,T




**விருச்சிகம்:** உடல்நலம் ஷேமம் தரும் வாரம். எதிர்ப்புகள் மாயமாய் மறையும். கணவரடத்தில் மதிப்பு உயரும். அத்தியாவசிய தேவைகள் பூர்த்தியாகும். கலை ஆர்வம் கூடும். வளமான சிந்தனைகள் உருவாகும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். இடையூறுகள் அகலும். எதிரிகள் தொல்லை குறையும். உல்லாசப் பயணம் இனிக்கும். சுபகாரியம் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பணநடமாட்டம் கூடும். கன்னிப்பெண்களின் எண்ணம் ஈடேறும். வெளி வட்டார பழக்கம் நலம் தரும். நீண்ட நாளைய நோய் விலகும். பணவரவு திருப்தி தரும். இல்லத்தில் அமைதி கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். தேகப் பலன் கூடும். உடல்நலம் சீராகும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. ஞாபகத்திறமை அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். குடும்பத்தில் அமைதி உண்டு. நண்பர்கள் உதவி கிடைக்கும். முன் கோபத்தை குறைத்துக்கொள்ள வேண்டும். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். கஷ்டகாலம் மறையும். சந்தோஷமான காலம் உதயமாகும். பணியில் உயர்வு உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: நரசிம்மர், அதிர்ஷ்ட எண்: 3,9,6,8
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,K




**தனுசு:** திட்டமிட்ட காரியம் வெற்றி கிடைக்கும் வாரம். மதிப்பும், மரியாதையும் உயரும். உடன்பிறப்புக்களின் உதவி கிடைக்கும். பணவரவு திருப்தி தரும். பொதுவாழ்வில் புகழ் கூடும். வாகன மாற்றம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். புதிய நாட்டம் ஏற்படும். உறவினர் வருகை உற்சாகம் தரும். மறைமுக எதிர்ப்புகள் மாறும். வாழ்த்துச் செய்திகள் வரும். அரசுதுறையில் ஆதாயம் உண்டு. சுபிட்ஷங்கள் பெருகும். புதுமையை விரும்புவீர்கள். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். கடன் வசூலாகும். கல்வியில் மேன்மையுண்டு. வீடு, மனை யோகம் உண்டு. ஆபரணத்தொழிலில் கவனம் தேவை. பங்குத் தொழிலில் லாபம் தரும். வாயில் தேடி வாய்ப்புக்கள் வரும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். நீண்டநாள் முயற்சி நிறைவேறும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தால் செலவு ஏற்படும். வங்கி சேமிப்பு உயரும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. மங்கல நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவீர்கள். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சரஸ்வதி தேவி, அதிர்ஷ்ட எண்: 4,2,9,1
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,T




**மகரம்:** தேக ஆரோக்கியம் மிளிரும் வாரம். எண்ணங்கள் பலிதமாகும். திருமண பேச்சு முடிவிற்கு வரும். கடன் விஷயத்தில் கவனம் தேவை. விவேகம் கை கொடுக்கும். செல்வச்செழிப்பு உயரும். திருஷ்டிகள் விலகும். உடல்சோர்வு ஏற்படும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. வரவுகள் மிகுதியாகும். உடல்நலம் சீராகும். மாற்று மருத்துவம் பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். தேவைகள் பூர்த்தியாகும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. நட்பு வட்டம் விரிவடையும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். வணிகத்தொழில் வளம் பெறும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். எதிரிகள் தொல்லை ஒழியும். உற்சாகம் மேலோங்கும். தொழில், போட்டி மறையும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். விபரீத எண்ணம் விலகும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். குளிர்பான தொழில் கவனம் தேவை. பணத்தேவை அதிகரிக்கும். பயணங்களால் வெகுமதி கூடும். மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 9,2,6,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,K (தொடர்ச்சி 30 பக்கம்)

# ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனலின் நேர்மைக்கு மகுடம் விருது கோப்பாய், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர்கள் உட்பட ஐவருக்கு

**- நதராசா லோகதயாளன்**




யாழ்ப்பாணம், ஓக.19

ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் 2022ஆம் 2023ம் ஆண்டுக்கான நேர்மைக்கு மகுடம் விருதில் இம்முறை கோப்பாய், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர்கள் உட்பட ஐவருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந் நிகழ்வில் நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் சிறந்த விழுமியங்களை கடைப்பிடித்து பொதுமக்களுக்கு சேவையாற்றும் அரச ஊழியர்களை அங்கீகரித்து கௌரவிக்கும் ஓர் தளமாக இந்நிகழ்வு இடம்பெற்றது.

பொதுமக்களுக்கு சேவை வழங்குவதை முதன்மையாக கொண்டு நேர்மையாகவும் தமது கடமைகளுக்கு மேலதிகமாக தம்மை அர்ப்பணித்து பணியாற்றும் நேர்மையான அரச ஊழியர்களை கண்டறியும் நேர்மைக்கு மகுடம் செயற்திட்டத்தினை எக்கவுண்டபிலிட்டி லெப் நிறுவனத்துடன் இணைந்து ஐந்தாவது முறையாக நிறுவனம் ஏற்பாடு செய்யப்பட்டது.

நேர்மைக்கு மகுடம் எனும் நேர்மையான அரச ஊழியர்களுக்கு விருது வழங்கும் முயற்சியானது நேபாளத்தில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் இலங்கை உட்பட 12 நாடுகள் இவ்விருது வழங்கும் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இந்நிகழ்வின் போது சிறந்த ஐந்து அரச ஊழியர்களுக்கு இந்த நேர்மைக்கு மகுடம் 2022/23 விருதினை வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது சுபாஜினி மதியழகன் வலிகாமம் கிழக்கு, கோப்பாய் ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா (TISL) நிறுவனமானது 2022/23ம் ஆண்டுக்கான இன்டக்ரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) விருது வழங்கும் இறுதி விழாவினை இன்று (17) பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடாத்தியது.

நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் சிறந்த விழுமியங்களை கடைப்பிடித்து பொதுமக்களுக்கு சேவையாற்றும் அரச ஊழியர்களை அங்கீகரித்து கௌரவிக்கும் ஓர் தளமாக இந்நிகழ்வு திகழ்கிறது.

பொதுமக்களுக்கு சேவை வழங்குவதை முதன்மையாக கொண்டு நேர்மையாகவும் தமது கடமைகளுக்கு மேலதிகமாக தம்மை அர்ப்பணித்து பணியாற்றும் நேர்மையான அரச ஊழியர்களை கண்டறியும் இன்டக்ரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) செயற்திட்டத்தினை எக்கவுண்டபிலிட்டி லெப் (Accountability Lab) நிறுவனத்துடன் இணைந்து ஐந்தாவது முறையாக TISL நிறுவனம் ஏற்பாடு செய்தது.

இன்டக்ரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) எனும் நேர்மையான அரச ஊழியர்களுக்கு விருது வழங்கும் முயற்சியானது நேபாளத்தில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் இலங்கை உட்பட 12 நாடுகள் இவ்விருது வழங்கும் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இந்நிகழ்வின் போது சிறந்த ஐந்து அரச ஊழியர்களுக்கு இன்டக்ரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) 2022/23 விருதினை வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அவர்கள்:

1. சுபாஜினி மதியழகன் - பிரதேச செயலாளர், பிரதேச செயலகம் - வலிகாமம் கிழக்கு, கோப்பாய்

2. விஜயவர்தன அபேயவிக்ரம நிசங்க - வைத்தியர், மாவட்ட ஆதார வைத்தியசாலை - ரிகில்லகஸ்கட மற்றும் சுகாதார சேவைகள் அலுவலக மாவட்ட பணிப்பாளர் - நுவரெலியா

3. யசோதா உதயகுமார் - பிரதேச செயலாளர், பிரதேச செயலகம் - வலிகாமம் தென் மேற்கு, சண்டிலிப்பாய்

4. பிரதிபானி ஸ்ரீ விஜயந்தி மொல்லிகொட - தாதி, ஆதார வைத்தியசாலை - எல்பிட்டிய

5. நளின் பிரசன்ன விஜேசேகர - மேலதிக சுகாதார வைத்தியர், பொதுச் சுகாதார பணிமனை - அம்பலாங்கொடை

இவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். மேலும் அவர்களின் வாழ்க்கை கதையினை தனது சக ஊழியர்களுடன் பகிந்து அவர்களையும் ஊக்கப்படுத்தினர்.

இதேநேரம் குறித்த விருது கடந்த காலங்களில் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி மற்றும் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் சுதர்சன் ஆகியோருக்கு வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## இவ்வார ராசிபலன்

(29 பக்கத் தொடர்ச்சி)




**கும்பம்:** பொன்னும், பொருளும் சேரும் வாரம். வார்த்தைகளில் கவனம் தேவை. பதவி உயர்வு தாமதமாகும். நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். கருத்து வேறுபாடுகள் விலகும். சகோதரி வகையில் சகாயம் கிடைக்கும். விரயம் குறையும். வியாபாரம் சிறக்கும். பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். திடீர் பயணம் ஏற்படும். விவசாயம் லாபம் தரும். வீடு, மனை யோகம் உண்டு. புதிய வாய்ப்புகள் வரும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உடல் உஷ்ணம் அதிகரிக்கும். பாக்கிகள் வசூலாகும். பணவரவு மேலோங்கும். குடும்பத்தில் குழப்பம் தீரும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் கூடும். சேமிப்பு அதிகரிக்கும். பணியாட்களிடம் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். திட்டமிட்ட செயல்பாடு தேவை. சாதகமான சந்தர்ப்பங்கள் நிகழும். ஆழமான மேன்மைகள் அமையும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வேண்டாத நபர்கள் விலகுவர். விவாதம் வாக்குவாதங்களாக மாறும். நல்லச் செய்திகள் நாடி வரும். நீண்ட நாள் கனவுகள் நிறைவேறும். தடைகள் அகலும். உயர் பதவி யோகமுண்டு. உற்சாகம் களைகட்டும். மாற்றங்களை சந்திப்பீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: மஹாலஷ்மி, அதிர்ஷ்ட எண்: 4,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,A




**மீனம்:** மாற்றுச் சிந்தனை உதயமாகும் வாரம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கடன் சுமை குறையும். தாய்வழி தகராறுகள் குறையும். கனவுகள் பலிதமாகும். கனிவான பேச்சு அவசியம். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். ஆலய தரிசனம் அமைதி தரும். இனம்புரியாத சந்தோஷம் ஏற்படும். பிள்ளைகளால் தன வரவு உண்டு. வெளியூர் பிரயாணம் வெற்றி தரும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. வெகுமானம் கிடைக்கக்கூடிய அற்புதமான காலம். ஆண்களின் அதிகாரம் உயரும். பெண்களால் பெருமை சேரும். எதிர்ப்புகள் உருவாகி மறையும். வறுமைகள் வாட்டம் குறையும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. பயணங்களால் பணம் கரையும். அரசு வழியில் ஆதாயம் கிடைக்கும். பழைய பாக்கி வசூலாகும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. தொழில் ரகசியம் காப்பாற்றப்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 1,7,6,2
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,L



# MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL · COMMERCIAL · INDUSTRIAL · VACANT LAND · CONSTRUCTION




**NESAN** 416-908-5656
*Subramaniam*

## Our Services

• 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity line of Credit • Pre-approvals •Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

Powered By
MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Brokeerage #10330 / Licence # M15001465

Scotiabank · TD Canada Trust · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

Lanka Salon & Spa லங்கா சலூன்
Haircut | Hair Styling | Shaving
Men's Hair Cut
Beard Lineup
Kid's Hair Cut
Hair Oil Massage
Baby Shave
Hair Colouring
Facial
BARBER SHOP
905-808-9930 5 MCMURCHY AVE N, UNIT 12 BRAMPTON, ON L6X 2R6
905-783-1895 3470 PLATINUM DRIVE, UNIT 35 MISSISSAUGA, ON L5M 2S4

உதயம் 1428 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 18, 2023

# இலங்கைக்கு சீனா வழங்கும் உதவிகள் ஆபத்தானவை என்கிறார் விந்தன் கனகரத்தினம்



இலங்கையில் அதுவும் தமிழ் மக்களுக்கு சீனாவால் வழங்கப்படுகின்ற உதவிகள் இந்தியாவை சீண்டுவதற்காக வழங்கப்படுகின்ற நிலையில் எதிர்காலத்தில் ஆபத்துக்களை ஏற்படுத்தும் என முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாண ஊடக மையத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)

# கனடா — "கட்டுடை மருத மன்றத்தின்" கோடை கால ஒன்றுகூடல் சிறப்பாக நடைபெற்றது



கனடாவில் இயங்கிவரும் "கட்டுடை மருத மன்றத்தின்" கோடை கால ஒன்றுகூடல் கடந்த 13-08-2023 ஞாயிற்றுக்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது

ஸ்காபுறோவில் அமைந்துள்ள ஆடைடமைநெ "யசம வளாகத்தில் நடைபெற்ற மேற்படி கோடை கால ஒன்று கூடலில் யாழ்ப்பாணம் மானிப்பாய்-கட்டுடைக் கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்டு கனடாவை வாழ்விடமாகக் கொண்டுள்ள பல குடும்ப உறுப்பினர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். பல்வேறு பொழுது போக்கு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# ஸ்காபுறோ வைத்தியசாலைக்கு 5000 டாலர்கள் நிதியுதவி வழங்கிய அருள்மிகு ஆதிபராசக்தி குருமன்றம்




ஸ்காபுறோவில் அருள்மிகு ஆதிபராசக்தி குருமன்றம். அமைத்து அதன் மூலம் ஆன்மீகப் பணியாற்றி வரும் சக்தி திருமதி ஞானம்மா திருநாவுக்கரசு, மன்றத்தின் சார்பில் கடந்த 09-08-2023 அன்று ஸ்காபுறோ வைத்தியசாலைக்கு 5000 டாலர்கள் நிதியுதவி வழங்கியுள்ளார்.

மேற்படி நிதியுதவி கையளிக்கும் வைபவம் சென்றினரி வைத்தியசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

ஸ்காபுறோ அருள்மிகு ஆதிபராசக்தி குருமன்றமும். சக்தி ஞானம்மா திருநாவுக்கரசு அவர்களும் கடந்த பல வருடங்களாக இவ்வாறான பல நற்பணிகளுக்கு தங்கள் ஆதரவை வழங்கிவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

# 19ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள செல்வன் ஹரிஹரன் செல்வி ஹரிணி ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம்



கனடா- ஸ்காபுறோ 'கலையருவி நாட்டியப் பயிலகத்தின்" குருவும் அதிபருமான ஸ்ரீமதி ரேணுகா-தேவி விக்னேஸ்வரன் அவர்களின் மாணவர்களும் திரு திருமதி தர்மசோதி - சீலா தம்பதியின் புத்திரச் செல்வங்களுமான செல்வன் ஹரிஹரன் தர்மசோதி மற்றும் செல்வி ஹரிணி தர்மசோதி ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் 19ம் திகதி சனிக்கிழமை ஸ்காபுறோவில் உள்ள சீனக் கலாச்சார மண்டபத்தில் மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ளது. பரதநாட்டிய ரசிகர்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.


# மிகவிரைவில் வெண்திரைக்கு வரவுள்ள கனடா ஆரபி படைப்பகத்தின் தயாரிப்பான 'Finder' திரைப்படம்



மிகவிரைவில் வெண்திரைக்கு வரவுள்ள கனடா ஆரபி படைப்பக உரிமையாளர் நண்பர் ரஜீவ் சுப்பிரமணியம் அவர்களின் தயாரிப்பான **'Finder'** திரைப்படம் ஒரு நேரத்தில் இலங்கை இந்தியா மற்றும் கனடா ஆகிய நாடுகளில் திரையுடப்படவுள்ளது என திரைப்படத்தின் இயக்குனர் வினோத் ராஜேந்திரன் சென்னையில் தெரிவித்தார்.

சென்னையில் அமைந்துள்ள திரைப் படங்கள் தொடர்பான பல இறுதிக் கட்ட வேலைகளைச் செய்யவல்ல ஒரு கலையகத்திற்கு கனடா உதயன் குழுவினராகிய நாம் சென்றபோது இயக்குனர் வினேத் எம்மிடம் இந்த திரைப்படம் தொடர்பான பல முக்கிய செய்திகளை தெரிவித்தார்.

அந்த கலையகத்தில் தான் **'Finder'** திரைப்படத்திற்கான இறுதிக் கட்ட வேலைகளைச் செய்கின்றனர்.



அப்போது திரு ரஜீவ் அவர்கள் அலுவலகத்தில் இல்லா விட்டாலும் இயக்குனர் வினோத் மற்றும் உதவி இயக்குனர்கள் ஆகியோர் கனடா உதயன் குழுவினருக்கும் தேவையான விபரங்களை சமர்ப்பித்தனர். திரைப்படத்திற்கு வர்ணம் கொடுத்தல் மற்றும் சில தொழில் நுட்பப் பணிக்கு முக்கியத்துவம் கொடுத்தல் ஆகியவற்றைப் பற்றி தகவல்களை தெரிவித்தார் இயக்குனர் வினோத் இராஜேந்திரன்.

மேலும் கனடா வாழ் தயாரிப்பாளர் ஒருவரின் இந்த திரைப்படமான **'Finder'** விரைவில் புலம் பெயர் தமிழ் மக்களை கவரும் வகையில் பல திரையரங்குகளில் திரையிடப்படவுள்ளன எனவும் தெரிவித்தார் இயக்குனர் வினோத் இராஜேந்திரன்.

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Realty Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H. Selvanayagam Broker